

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | செப். 1, 2011 | புரட்சி 10 | முழக்கம் 33 | விலை: ரூ.2.50

## ஆக.30 தமிழின வரலாற்றுக் குறிப்பு நாள்

# இனத்தின் எழுச்சிக்கு வெற்றி

பேறிவாளன், சாந்தன், முருகன் - மூவரின் தூக்குத் தண்டனை நிறுத்தப்பட்டுவிட்டது. தமிழ்நாட்டில் மூண்டெழுந்த எழுச்சி - இந்த மனித உரிமையை மீட்டுத் தந்திருக்கிறது.

ஆகஸ்ட் 30 - தமிழின வரலாற்றில் மகிழ்ச்சித் திருநாள்! அன்றுதான் இந்த மூவரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானமும், அடுத்த சில நிமிடங்களில் தூக்குத் தண்டனைக்கு 8 வாரத் தடை விதித்து, உயர்நீதி மன்றம் தந்த தீர்ப்பும், ஒன்று சேர்ந்து தமிழர்களுக்குக் கிடைத்தது. மகிழ்ச்சி ஆரவாரத்தில் உயர்நீதிமன்றத்தில் குழுமியிருந்த ஏராளமான ஆண்களும், பெண்களும், உணர்வாளர்களும் மூழ்கிப் போனார்கள்.

“தமிழக மக்களின் உணர்வுகளுக்கும், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் மூவரின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க நடவடிக்கை வேண்டுமென ஜனாதிபதியை சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது” என்று இந்தத் தீர்மானம் கூறுகிறது. தமிழர்களின் உணர்வுகளை மதித்து தமிழக முதல்வர் சட்டமன்றத்தில் கொண்டு வந்து ஒரு மனதாக நிறைவேற்றிய இத் தீர்மானத்தை தமிழர்கள் நன்றியுடன் நினைவு கூர்கிறார்கள்.

உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் கி. நாகப்பன், எம். சத்யநாராயணா ஆகியோரடங்கிய அமர்வு நீதிமன்றத்தின் முன் முதல் வழக்காக இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரபல வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி எடுத்து வைத்த முக்கிய வாதங்கள்:

- 30 விநாடிகளில் ஒருவரை தூக்கில் போட்டு உயிரைப் பறித்து விடலாம் ஆனால் 11 ஆண்டு காலம் 4 மாதம் இவர்கள், அதற்காகக் காத்திருக்கிறார்கள்.
- இந்த வழக்கு விசாரணை 1999 மே 11 ஆம் தேதி முடிந்தவுடன் அதே ஆண்டு அக்டோபர் 17 ம் தேதி குடியரசுத் தலைவருக்கு கருணை மனு போட்டார்கள். 10 நாட்களில் அது நிராகரிக்கப்பட்டது. இரண்டாவது முறையாக தமிழக ஆளுநருக்கு அக்.17 ஆம் தேதி கருணை மனு போட்டார்கள். 10 நாட்களில் அது நிராகரிக்கப்பட்டது. மீண்டும் தமிழக ஆளுநருக்கே இரண்டாவது கருணை மனு போடப்பட்டது. 5 மாதம் கழித்து, அது தள்ளுபடியானது. தொடர்ந்து 2004 பிப். 26 அன்று குடியரசுத் தலைவருக்கு கருணை மனு போடப்பட்டது. 11 ஆண்டுகள் 4 மாதம் கழித்து 2011 ஆகஸ்டு 12 இல் கருணை மனுவை குடியரசுத் தலைவர் நிராகரித்து, ஆக. 25 ஆம் தேதி தமிழக அரசுக்கு அனுப்பியுள்ளார். இவ்வளவு கால தாமதத் துக்கான காரணம் கூறாமல், தண்டனையை நிறைவேற்றுவது அரசியல் சட்டம் 21 ஆவது பிரிவு வழங்கும் உரிமையைப் பறிப்பதாகும்” என்று ராம் ஜெத்மாலனி வாதிட்டார்.

கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு 2 ஆண்டுகள் வரை தூக்குத் தண்டனை நிறைவேற்றாத பல வழக்குகளில் தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார். மூத்த வழக்கறிஞர்கள் வைகை, காலின் சால்வேகம் ஆகியோரும் இதே அடிப்படையிலேயே வாதங்களை எடுத்து வைத்தனர்.

இடைக்காலத் தடை சட்டமன்றத் தீர்மானத்துக்குப் பிறகு சென்னை கோயம்பேட்டில் ‘பெரியாரியலாளர்’ திருச்சி சவுந்தரராசன் அவர்களுக்கு உரிய கட்டிட வளாகத்தில் பட்டினிப் போராட்டம் நடத்தி வந்த பெண் வழக்கறிஞர்கள் வடிவாம்பாள், சுஜாதா, அங்கயற்கண்ணி ஆகியோர் தங்களது போராட்டத்தை முடித்துக் கொண்டனர்.

வை.கோ., பழ. நெடுமாறன் ஆகியோர் முன்னிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டுக் குழு தலைவர் ஆர். நல்லக்கண்ணு போராட்டத்தை முடித்து வைத்தார்.

நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன்
பேரறிவாளன் தாயார் அற்புதம்மாள்

‘டெக்கான் கிரானிக்கல்’ கூறுகிறது

## உலகத் தமிழரிடையே ஜெயலலிதா உயர்ந்து நிற்கிறார்

‘உலகத் தமிழர்களின் நிலைத்த புகழுக்குரியவராக தமிழக முதல்வர், ஒரே நாளில் உயர்ந்து விட்டார்’ என்று ‘டெக்கான் கிரானிக்கல்’ ஏட்டில (ஆக. 31) அதன் சிறப்பு செய்தியாளர் எம். குணசேகரன் எழுதியுள்ளார். இது குறித்து அவர் முன் வைத்துள்ள செய்தி ஆய்வு:

“இத் தீர்மானத்தை ஜெயலலிதாவின் அரசியலில் திடீர் மாற்றம் என்று சிலர் கூறலாம். ஆனால், அரசியல் சாதுர்யமிக்க ஜெயலலிதா கடந்த செவ்வாய் கிழமை சட்டமன்றத்தில் ‘அரங்கேற்றிய’ இந்த அதிரடி செயல்பாடு, உலகத் தமிழர்களிடையே அவரது புகழை நிலைத்த உச்சத்திற்குக் கொண்டு சென்று விட்டது. நளினியின் தண்டனை குறைப்பையே ஒரு காலத்தில் குறை கூறிய ஜெயலலிதா, இன்று உலகத் தமிழர்களின் ‘தேவதை’யாக மாறியிருப்பதற்கு இடையில் நீண்ட கால இடைவெளியை கடக்க வேண்டியிருந்தது என்றே கூறலாம். அனேகமாக, அனைத்து அரசியல் கட்சிகளும், சமூக இயக்கங்களும், ஜெயலலிதா வெளிப்படுத்திய இந்தத் துணிவை பாராட்டி வரவேற்கிறார்கள். இதற்கு முன் எப்போதுமே நடந்திராத, முன் உதாரணமாக இது அமைந்துள்ளது. பொது மக்களிடம் தூக்கு தண்டனைக்கு எதிராக எழுந்த உணர்வுகளே இந்த முடிவுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது” - என்று அந்த செய்தி ஆய்வு கூறுகிறது.

## செங்கொடிக்கு வீரவணக்கம்!



பெரியார் திராவிடர் கழகத்தோடு தோளோடு தோள் நின்று களப் பணியாற்றும் காஞ்சி மக்கள் மன்றத்தின் இளம் தோழர் செங்கொடி, 3 தமிழர்கள் உயிர் காக்கவும், மரண தண்டனை ஒழிக்கவும், உயிர்த் தியாகம் செய்து விட்டார். நமது நெஞ்சை உலுக்குகிறது. ஆக. 28 ஆம் தேதி மாலை 5.45 மணியளவில் காஞ்சிபுரம் வட்டாட்சி அலுவலக வளாகத்தில் செங்கொடி தனது உடலில் பெட்ரோல் ஊற்றி தீயிட்டுக் கொண்டு விட்டார்.

“தோழர் முத்துக்குமாரின் உடல் தமிழகத்தை எழுப்பியது போல், என்னுடைய உடல், இந்த 3 தமிழர்களின் உயிரைக் காப்பாற்றப் பயன்படும்” என்ற உருக்கமான கடிதத்தை எழுதி தனது வாழ்க்கையை முடித்துக் கொண்டுவிட்டார். உலக வரலாற்றில் மரண தண்டனை ஒழிப்புக்காக - மரணத்தைத் தழுவிய பெண் போராளி என்ற வரலாற்றுச் சிறப்புக்குரியவராகி விட்டார் செங்கொடி!

நெஞ்சை அழுத்தும் துயரத்துடன், பெரியார் திராவிடர் கழகம் செங்கொடிக்கு வீரவணக்கம் செலுத்துகிறது!

## தீக்குளிப்பு வேண்டாம்: கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

ஈழத் தமிழர் உரிமைப் பார்வையில் போர்க் குற்றவாளிகளைத் தண்டிக்க தமிழக மக்களும் தமிழக அரசும் வலியுறுத்தி வந்த நிலையில், தமிழர் உணர்வுகளை உதாசீனப்படுத்தியதல்லாமல் மனிதமே அதிர்கிற வகையில் 20 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் கழித்து வரும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கு மரண தண்டனையை நிறைவேற்ற மைய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தமிழர்களுக்கும் மனித உரிமை ஆர்வலர்களுக்கும் இது பேரதிர்ச்சியாகவே இருந்தது.

அதற்கென மக்கள் திரள் போராட்டங்களும் சட்டப் போராட்டமும் நடந்து வருகிற இவ்வேளையில் இக் கோரிக்கையை வலியுறுத்தி காஞ்சி மக்கள் மன்றத் தோழர் செங்கொடி தீக்குளித்ததாக வந்துள்ள செய்தி அனைவரையும் மேலும் அதிர வைத்துள்ளது. கோரிக்கையின் நியாயத்தை வலியுறுத்த ஆயிரம் வழிமுறைகள் இருக்க, போராடும் சக்திகள் தங்களையே அழித்துக் கொள்ளும் இம்முறையை அருள்கூர்ந்து யாரும் தொடர வேண்டாம் என வலியுறுத்தி வேண்டிக் கொள்கிறோம்.

அவர்களது உணர்வுகள் நமக்குப் புரிகிறது. ஆனால் அதிகார வெறி கொண்ட மத்திய பாசிச ஆட்சியாளர்களுக்கு இது சிறு அசைவையாவது ஏற்படுத்துமா என்பது அய்யமே. நாம் தொடர்ந்து நமது தமிழ்நாட்டு ஆட்சியாளர்களை வலியுறுத்திப் போராடுவோம்.

# பரப்புரை பயணத்தின் எழுச்சி; மாணவர் கழகத்தில் சேர பேரார்வம்

தமிழ்நாடு மாணவர் கழகம் - கல்லூரி, பள்ளி வாயில்கள் முன்பு கல்வி உரிமைகளையும், பகுத்தறிவு சிந்தனைகளையும் வலியுறுத்தி 3 அணிகளாகப் பிரிந்து பரப்புரைப் பயணங்களை வெற்றிகரமாக நடத்தியது. ஜூலை 18 ஆம் தேதி தொடங்கி, ஆகஸ்டு 5 ஆம் தேதி வரை இந்த பரப்புரைப் பயணம் நடந்தது. முதல் பயணக் குழு 18 ஆம் தேதி சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலையில் பயணத்தைத் தொடங்கி, 45 கல்வி நிறுவனங்களில் 15 நாள் பரப்புரைகளை நடத்தி, வாழப்பாடியில் பயணத்தை நிறைவு செய்தது. காவை. இளவரசன், 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிகளை நடத்த, திருச்சி புதியவன் மற்றும் தோழர்கள் உரையாற்றினர்.

இரண்டாம் கட்ட பரப்புரைப் பயணம் 25 ஆம் தேதி பொள்ளாச்சியில் தொடங்கி, 6 ஆம் தேதி சேலத்தில் நிறைவடைந்தது. 35 பள்ளி கல்லூரி நிறுவனங்களில் 11 நாட்கள் பரப்புரைப் பயணம் நடத்திய இந்தக் குழுவுக்கு மாணவர் கழக மாநில அமைப்பாளர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். கா.சு. நாகராசன், கருமலையப்பன், வினோத் மற்றும் தோழர்கள் பேசினர்.

மூன்றாம் கட்ட பரப்புரைப் பயணம் கிருட்டிணகிரியில் தொடங்கி, சேலத்தில் முடிவடைந்தது. 5 நாட்களில் 17 பள்ளி, கல்லூரிகள் முன் பரப்புரை நடத்தப்பட்டது. தோழர் கோகுல் கண்ணன் உரையாற்றினார். முதல் கட்டப் பயணம் பற்றி செய்தி ஜூலை 28, 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் வெளி வந்தது. பயணத்தின் தொடர்ச்சியான செய்திகள்:

25.07.2011 அன்று மதியம் 1 மணியளவில் மதுரை சட்டக் கல்லூரி வாயிலில் நடைபெற்றது. மாணவர்கள், பொது மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். மாலை 5 மணியளவில் காமராசர் பல்கலைக்கழக கல்லூரி வாயிலில் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டங்களில் மதுரை மாநகர் மாவட்ட தலைவர் பெரியசாமி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முருகேசன், புறநகர் மாவட்ட தலைவர் மாயாண்டி, இயல் இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டனர். தோழர்களுக்கு மதிய உணவை பெரியசாமி ஏற்பாடு செய்தார். இரவு மாயாண்டி இல்லத்தில் தங்கினர். மாயாண்டி இரவு மற்றும் காலை உணவு வழங்கினார்.

26.07.2011 காலை 9 மணி அளவில் காமராசா பல்கலைக்கழக வாயிலில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்கள், பேராசிரியர்கள், பொது மக்கள் என திரளாக கலந்து கொண்டனர். கழகத்தில் இணைந்து செயல்பட முகவரி அளித்தனர். பேராசிரியர் கோபால் ரூ.500 நன்கொடை அளித்தார். அனைத்து இடங்களிலும் புதியவன், துரை. தாமோதரன் ஆகியோர் உரையாற்றினர். மதியம் 1 மணியளவில் கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரி வாயிலில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்கள், பொது மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். துரை. தாமோதரன், இராவணன் உரையாற்றினர். மாயாண்டி கூட்டத்தில் கலந்து கொண்டார். உசிலம்பட்டி ஜெயரூபன் மதிய உணவு வழங்கினார். இரவு தோழர்கள் போடி நாயக்கனூரில் தங்கினர்.

27.07.2011 அன்று காலை 9 மணியளவில் தேனி அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் (ஐ.ஐ.டி.) துண்டறிக்கை வழங்கினர். மதியம் 12.30 மணியளவில் உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி வாயிலில் நடைபெற்ற பரப்புரை கூட்டத்தில் நிர்வாகத்தின் எதிர்ப்பை மீறி மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். மதிய உணவை உசிலம்பட்டி செயரூபன் ஏற்பாடு செய்தார். மாலை 4.30 மணியளவில் நாடார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்கள், பொது மக்கள், ஆசிரியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். அனைத்து இடங்களிலும் ராவணன், துரை. தாமோதரன் ஆகியோர் உரையாற்றினர். கழகத் தோழர் சரவணன் கலந்து கொண்டார். உணவு மற்றும் தங்குமிடம் ஆகியவற்றை சரவணன் ஏற்பாடு செய்தார். பயண நிதியாக ரூ.500 வழங்கினார்.

28.07.2011 அன்று காலை 9 மணிக்கு பஞ்சம்பட்டி மேல்நிலை பள்ளியில் பரப்புரை நடைபெற்றது. மதியம் திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூரில் அரசினர் மேனிலைப் பள்ளி வாயிலில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்கள், பொது மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர். மாலை 5 மணியளவில் ஒட்டன் சத்திரம் கிறிஸ்டியன் இன்ஜினியரிங் கல்லூரி வாயிலில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

அனைத்து இடங்களிலும் பெரியார் நம்பி, அய்யனார் ஆகியோர் உரையாற்றினர். கழகத் தோழர்கள் ஆல்பர்ட், வின்செண்ட் கலந்து கொண்டனர். பெரியார் நம்பி பயண வளர்ச்சியாக ரூ.1300 வழங்கினார். காலை உணவை ஆல்பர்ட், மதிய உணவை வின்செண்ட் ஏற்பாடு செய்தனர்.

## பொள்ளாச்சியிலிருந்து தொடங்கிய 2-வது கட்டப் பரப்புரை

ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்து நிற்போம்; கல்வியை ஆயுதமாக்குவோம் என்ற முழக்கத்தோடு தமிழ்நாடு மாணவர் கழகம் (டி.எஸ்.எப்.) பிரச்சாரப் பயணத்தை 25.7.2011 அன்று பொள்ளாச்சியில் தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் வழக்குரைஞர் ந. பன்னீர் செல்வம் தலைமையில், கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தொடங்கி வைத்து பிரச்சார விளக்க உரையாற்றினார். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம், மக்கள் விடுதலை முன்னணி, விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

பொள்ளாச்சியைத் தொடர்ந்து திவான்சாபுதூர் அரசு உயர்நிலைப் பள்ளி, வளந்தாயமரம், ஆனைமலை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் பிரச்சாரம் நடைபெற்றது. ஆனைமலை முக்கோணம் பகுதியில் தோழர்கள் நேருதாசு, வினோத், பன்னீர் செல்வம், நாகராசு, கா.சு. நாகராசு ஆகியோர் உரையாற்றினர்.

மாலை 4 மணியளவில் நா.மு. சுங்கம் பகுதியிலுள்ள ராமு கலை அறிவியல் கல்லூரி அருகே பிரச்சாரம் நடைபெற்றது. தோழர்கள் பன்னீர் செல்வம், கா.சு. நாகராசன் ஆகியோா உரையாற்றினர்.

### உடுமலையில்

26.7.2011 காலை 9 மணிக்கு மகாலிங்கம் பொறியியல் கல்லூரியில் துண்டறிக்கை வழங்கப்பட்டது. 9.15 மணிக்கு சரசுவதி தியாகராஜா கல்லூரியில் துண்டறிக்கை வழங்கப்பட்டது. வெள்ளக்கோயில் நாகராசன் பயணத்தை விளக்கிப் பேசினார். வினோத் பாடல் பாடினார்.

காலை 10 மணிக்கு உடுமலை பேருந்து நிலையத்தில் பரப்புரை தொடங்கியது. பன்னீர் செல்வம், கருமலையப்பன் ஆகியோர் உரையாற்றினர். கொங்கு மண்டல ஆய்வு மய்யத்தைச் சேர்ந்த ரவிக்குமார் பயணத்தை விளக்கியும், வாழ்த்தியும் பேசினார். கொங்கு மண்டல ஆய்வு மண்டலத்தின் சார்பாக நட்சத்திரப் பூ என்ற மழலைப் பாடல் அடங்கிய புத்தகத்தை மாணவர்களுக்கு வழங்கினர். மதிய உணவு உடுமலை நகர கழகத்தின் சார்பாக வழங்கப்பட்டது கல்லூரி மாணவர்கள் தாங்களாகவே முன்வந்து தங்கள் பெயர்களையும், தொலைபேசி எண்களையும் கொடுத்துச் சென்றனர். உடுமலை பேருந்து நிலையத்தில் கருத்துகளைக் கேட்டுக் கொண்டிருந்த பிரவின் என்ற மாணவன் ஆர்வத்துடன் மாலை வரை பயணத்தில் கலந்து கொண்டார்.

மாலை 4 மணியளவில் உடுமலை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிரச்சாரம் தொடங்கியது. மாணவர்கள் ஆர்வத்துடன் கூடி கருத்துகளைக் கேட்டனர். பன்னீர்செல்வம், சமச்சீர் கல்வியை வலியுறுத்தி முழக்கமிட, பள்ளி மாணவர்களும் திருப்பி முழக்கமிட்டனர். சாலமன் என்ற பள்ளி மாணவன், "சமச்சீர் கல்வியை உடனே வழங்க வேண்டும். நாங்கள் பள்ளிக்கூடங்களில் சும்மா இருக்கிறோம். படிக்கிறதுக்கு புத்தகம் கொடுங்க, இடைப்பருவத் தேர்வு வந்துவிட்டது, எங்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. உடனே எங்களுக்கு புத்தகம் வழங்க வேண்டும்" என்று பேசினார். பன்னீர்செல்வம், நாகராசு, கருமலையப்பன் ஆகியோர் உரையாற்றினர்.

உடுமலையைத் தொடர்ந்து துங்காவி, காரத் தொழுவு ஆகிய இடங்களில் பரப்புரை நடைபெற்றது. காரத் தொழுவில் பொது மக்களும் மாணவர்களும் அதிகமாக திரண்டிருந்தனர். பன்னீர் செல்வம், நாகராசு ஆகியோர் உரையாற்றினர். கல்லூரி மாணவர்கள் தம் பெயரையும், தொலைபேசி எண்ணையும் வழங்கினர். கருமலையப்பன் (மா.செ.பெ.தி.க.), யாழ் நடராஜ் (நகர தலைவர்), பாக்கியநாதன் ஆகியோர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தனர். ந. கதிரவன் (ஒன்றிய தலைவர்), மோகன் குமார், மதன் குமார் (பனத்தம்பட்டி), ரவிக்குமார் (கொங்கு மண்டல ஆய்வு மய்யம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தாராபுரத்தில்

தாராபுரம் பேருந்து நிலையம் அருகில் பிரச்சாரம் தொடங்கியது. தோழர்கள் பன்னீர்செல்வம், நாகராசு ஆகியோர் உரையாற்றினர். வழக்குரைஞர் குமார் வாழ்த்துரை வழங்கினார்.

### திருப்பூரில்

27.7.2011 அன்று திருப்பூர் சிக்னா அரசு கலைக் கல்லூரியில் காலை 8.45 மணிக்கு பரப்புரை தொடங்கியது. திருப்பூர் மாவட்ட கழகத் தலைவர் துரைசாமி தொடங்கி வைத்தார். வழக்குரைஞர் உமர், முகில்ராசு, பன்னீர் செல்வம், கார்த்தி ஆகியோர் உரையாற்றினர். வினோத் பாடல் பாடினார்.

11 மணியளவில் அனுப்பப்பாளையம் பேருந்து நிலையம் முன்பு நடந்த பரப்புரையில் பன்னீர் செல்வம், முத்துக் குமார், கார்த்தி, எஸ்.பி. மணி (வேலம்பாளையம் நகராட்சி தலைவர்), புஷ்பலதா மனோகரன் (அவினாசி பேரூராட்சி தலைவர்) ஆகியோர் சமச்சீர் கல்வியை வலியுறுத்தி பேசினர். தொடர்ந்து பெரியார் குடியிருப்பில் நடந்த கூட்டத்தில் பன்னீர்செல்வம், கா.சு. நாகராசு, கார்த்தி ஆகியோர் உரையாற்றினர். வினோத் பாடல் பாடினார்.

மதியம் 12.30 மணியளவில் மீண்டும் சிக்னா அரசு கல்லூரியில் பரப்புரை நடைபெற்றது. வினோத் பாடல் பாடி பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். நாகராசு, பன்னீர்செல்வம், கார்த்தி, பெரியார் மணி, கல்லூரி மாணவர்கள் அறிவரசு, கார்த்தி ஆகியோர் உரையாற்றினர். கல்லூரி பிரச்சினைகள், விடுதி பிரச்சினைகள், பொது நுழைவுத் தேர்வு, பார்ப்பன ஆதிக்கம், பன்னாட்டு நிறுவனங்களின் கல்வித் துறையில் ஆதிக்கம் போன்ற பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி பேசினர்.

மாலை 3.30 மணியளவில் எல்.ஆர்.ஜி. மகளிர் கலைக் கல்லூரியில் பரப்புரை நடைபெற்றது. முகில்ராசு, பன்னீர்செல்வம், குணசேகரன், நாகராசு ஆகியோர் உரையாற்றினர்.

4.15 மணியளவில் நஞ்சப்பா மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பரப்புரை நடைபெற்றது. வினோத் பாடல் பாடினார். பன்னீர் செல்வம் சமச்சீர் கல்வியையும் கட்டாய இலவச கல்வியையும் வலியுறுத்தி முழக்கமிட பள்ளி மாணவர் திருப்பி முழக்கமிட்டனர். நாகராசு, முகில்ராசு, பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினர்.

திருப்பூரில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த தோழர்கள்: மாவட்ட தலைவர் துரைசாமி, முகில் ராசு, கார்த்தி, கமல் பிரகாசு, அறிவரசு, கனல் மதி, தென்றல், கதிர் முகிலன், அகிலன், குமார், வழக்குரைஞர் உமர், பிரசாத், சு.மணிகண்டன், பரிமளம், சண்முகம் ஆகியோர்.

### பல்லடத்தில்

28.7.2011 காலை 8 மணிக்கு அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி அருகே தமிழ்நாடு மாணவர் கழகத்தின் பிரச்சார பயணம் தொடங்கியது. பள்ளி மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். பன்னீர்செல்வம், விசயன் தலைமையில் பிரச்சாரப் பயணம் தொடங்கியது. விசயன், திருப்பூர் துரைசாமி, பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினர். பன்னீர் செல்வம் சமச்சீர் கல்வியை வலியுறுத்தி முழக்கமிட, மாணவர்களும் திருப்பி முழக்கமிட்டனர். அருகிலிருந்த அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் துண்டறிக்கை வழங்கப்பட்டது.

காலை பள்ளி தொடங்கியதும் மாணவர் அரங்கில் தமிழ்நாடு மாணவர் கழக பிரச்சார செய்தியை முதல் செய்தியாக மாணவர் தலைவர் வாசித்தார். பதினொன்றாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு மாணவர்களும் தங்கள் பெயர்களையும், தொலைபேசி எண்ணையும் கொடுத்தனர். பள்ளி தொடங்கும் வரை 9.30 மணி வரை சாலையின் இரண்டு புறமும் 200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தோழர்களின் உரையை கவனித்தனர்.

பல்லடம் பேருந்து நிலையம் பின்புறம் உள்ள சந்தைப் பகுதியில் தோழர்களின் உரை நிகழ்த்தப்பட்டது. தோழர்களின் உரையை பொது மக்களும், வியாபாரிகளும் பெருந்திரளாக நின்று கேட்டனர்.

(பயணத் தொடர்ச்சி அடுத்த இதழில்)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# பிரபாகரனின் ‘தலை’யைக் கேட்டவர் ராஜீவ் காந்தி [ 11 ]

- ராஜபக்சே - ராணுவத்தைப் போலவே ராஜீவ் அனுப்பி வைத்த ‘அமைதிப் படையும்’ விடுதலைப் புலிகள் தலைவர், உலகத் தமிழினத் தின் தலைவர் பிரபாகரனுக்குத் தான் குறி வைத்தது. விடுதலைப் புலிகளின் படைப் பிரிவான 14 ஆம் தளத்தில் ராஜீவ் காந்தியின் படை பிரபாகரனை சுற்றி வளைத்த போது அவர் தனது மெய்க்காப்பாளர்களால் காப்பாற்றப்பட்டுவிட்டார் என்று ராஜிவ் சர்மா எழுதுகிறார். ராஜீவ் காந்தியும் பிரபாகரன் தலைக்குக் குறி வைத்தார். பிரபாகரன் தலையைக் கொண்டு வராதவரை, தான் அனுப்பி வைத்த படையின் தாக்குதல் நிற்காது என்று சபதம் போட்டார். தன்னுடைய இந்த ‘கொலை வெறி’யை வெளிப்படையாகக் கூறவும், ராஜீவ் காந்தி தயங்கிடவில்லை. தி.மு.க.வின் மாநிலங்களவைக் குழுத் தலைவர் முரசொலி மாறனிடம் ராஜீவ் காந்தி, இதை நேரில் தெரிவித்தார். இந்த செய்தியை பல ஏடுகள் பதிவு செய்துள்ளன. ஜார்ஜ் பெர்னான்டஸ் வெளியிட்ட ‘தி அதர்ஸைடு’ ஆங்கில மாத இதழ் இது பற்றி வெளியிட்ட செய்தி:

  “And that Prime Joker who is the Prime Minister had temerity to tell the D.M.K. Member of Parliament, Murasoli Maran, that the Srilankan operation will go on till he has the head of the LTTE Chief Prabakaran.”

  “Maran was shocked at the way the Prime Minister gesticulated and pointed to the floor at his feet where he wanted to see the severed head of Prabakaran.”

  “தலைமை ‘காமடியனான’ நமது தலைமை அமைச்சர் (ராஜீவ் காந்தி) தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினரான முரசொலி மாறனிடம், என்னிடம், பிரபாகரன் தலை கொண்டுவரப்படும் வரை ராணுவத்தின் இலங்கை தாக்குதல் தொடரும் என்று திமிருடன் கூறினார்.”

  “ராஜீவ் காந்தி இதை வெளிப்படுத்திய முறை முரசொலி மாறனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தரையை நோக்கி தனது காலைக் காட்டி, இதில், பிரபாகரன் தலையைக் கொண்டு வருவதே எனது விருப்பம் என்று ராஜீவ் கூறினார்.” (“The Other Side” - மாத ஏடு, ஏப்.1988)

- இனப் படுகொலை - போர்க் குற்றங்களை நடத்திய ராஜபக்சே, போரை நிறுத்த வேண்டும் என்று எத்தனையோ கோரிக்கைகள் வந்தும் கேட்கவில்லை. போரைத் தொடர்ந்தார். போரை நிறுத்த வேண்டாம் என்று சோனியாவின் ஆலோசனைக் குழு அறிவுறுத்தி போரை நடத்தவே உதவியது. இது எல்லோருக்கும் தெரியும். இதுவும்கூட ராஜீவ் காந்தியின் ‘அமைதிப் படை’ கற்றுத் தந்த பாடம் தான்.

  விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறிப்பதாகக் கூறி, பொது மக்கள் மீது ஷெல்களை விமானங்கள் மூலம் குண்டுகளை ராஜீவ் காந்தியின் அமைதிப்படை வீசியபோது, “வேண்டாம்; போரை நிறுத்துங்கள்; பொது மக்களைக் கொல்லாதீர்கள்” என்று பல வேண்டுகோள்கள் முன் வைக்கப்பட்டன. அத்தனை வேண்டுகோள்களையும் ராஜீவ்காந்தி புறந்தள்ளினார்.

- யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளின் தலைவர் பிரபாகரன், பிரதமர் ராஜீவுக்கு - போரை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்து 1987 அக். 14 ஆம் தேதி ஒரு கடிதம் எழுதினார். “இந்திய ராணுவத்தின் கண்மூடித்தனமான ஷெல் வீச்சு, விமானக் குண்டு வீச்சு காரணமாக, யாழ்ப் பாணத்தில் இதுவரை 150 அப்பாவி மக்கள் பலியாகி விட்டனர். 500 பேர் படுகாயமடைந்துள்ளனர். சர்வதேச ஊடகவியலாளர்கள், மனித உரிமை அமைப்புகளை யாழ்ப்பாணத் துக்கு அனுப்புங்கள், நிலைமை மிக மோசமாகி வருகிறது; ‘ஜனநாயக நாடு’ என்று கூறிக் கொள்ளும் இந்தியா, தனது முடிவுகளை எங்கள் மீது துப்பாக்கி முனையில் திணிப்பது நியாயமல்ல. இந்த ஒப்பந்தத்தில் எங்களுக்கு முழுமையான உடன்பாடு இல்லை என்றாலும்கூட ஏற்றுக் கொண்டோம். நாங்கள், பேச்சு வார்த்தைக்கு தயாராகவே இருக்கிறோம். உடனடியாக ராணுவத் தாக்குதலை நிறுத்துங்கள்” என்று, உருக்கமான வேண்டுகோளை பிரபாகரன் விடுத்திருந்தார்; ராஜீவ் புறக்கணித்தார்.

## ராஜீவ் சர்மாவின் ‘புலிகளுக்கு அப்பால்....’ நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம்

- தமிழ்நாட்டில் போர் நிறுத்தம் கோரி அனைத்துக் கட்சி ஆர்ப்பாட்டங்கள், கடை அடைப்புகள் நடந்தன. ராஜீவ் கவலைப்படவில்லை.
- பொது நிலையில் இருந்த கிறிஸ்தவ பாதிரியார்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் போரை நிறுத்த ராஜீவ் காந்திக்கு வேண்டுகோள் விடுத்தார்கள்; ராஜீவ் காந்தி நிராகரித்தார்.
- பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குவது, உலகம் முழுதும் ஆக்கிரமிப்பு, ராணுவத்தினர் செயல்பாடுகளாகவே உள்ளன. இலங்கை ராணுவமும் அதை செய்தது; ராஜீவ் காந்தியின் ‘அமைதிப் படை’யும் அதை செய்தது.
- 1988 ஜூலை வரை ராஜீவ் காந்தி ராணுவத்தால் கொல்லப்பட்ட அப்பாவி பொது மக்கள் - 5700.
- பாலியல் வன்கொடுமைக்கு உள்ளடாக்கப்பட்ட பெண்கள் - 780. (ஆதாரம்: தமிழ் வாய்ஸ் இன்டர்நேஷனல், ஜூலை 1988)
- ராஜபக்சே ராணுவம், ரசாயனக் குண்டுகளை வீசி, மக்களைக் கொலை செய்தது அல்லவா? இதற்கு வழிகாட்டியதும் ராஜீவ் காந்தியின் ‘அமைதிப் படை’ தான்! முல்லைத் தீவு மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளான அலப்பில், நாயாறு, செம்மலை, குமுலமுனை பகுதிகளில் சர்வதேச அளவில் தடை செய்யப்பட்ட 250 கிலோ ‘நாபாம்’ குண்டுகளை இந்திய அமைதிப் படை வீசியது. (ஆதாரம்: தமிழ் வாய்ஸ் இன்டர் நேஷனல், ஜூலை 1988)

- சாட்சிகளற்ற போர்
- சர்வதேச தொண்டு நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள் வெளியேற்றம்.
- மருத்துவமனைகள் மீது குண்டு வீச்சு
- நேபாம் - குண்டு வீச்சு
- ஊடகங்கள் மீது தாக்குதல்
- போர் நிறுத்தப் பகுதிகளில் குண்டு வீச்சு
- அப்பாவி மக்கள் மீது குண்டு வீச்சு
- பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்குதல்
- உலகத் தமிழினத் தலைவர் பிரபாகரனை தீர்த்துக் கட்டும் முயற்சி

- என்ற அத்தனை போர்க் குற்றங்கள் இனப் படு கொலைக்கு வழி காட்டியதே ராஜீவ் காந்தியின் அமைதிப் படைதான். இத்தகைய கொலைப் படை தோல்வி அடைந்து விட்டது; அவமானத்துக் குள்ளாகிவிட்டது என்று ராஜீவ் சர்மா கூறுவதும், தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரனை ‘இரக்க மற்றவர்’, ‘சுயநலவாதி’ என்று குற்றம்சாட்டுவதும், நேர்மையான விமர்சனமாக இருக்க முடியுமா?

நேர்மையும், கட்டுப்பாடும், கொள்கை உறுதியும் கொண்ட தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும், உலகத்தின் கவனத்தையே ஈர்த்த மாவீரர் பிரபாகரன் பற்றி, தனிப்பட்ட முறையில் பல்வேறு அவதூறுகளை, ராஜீவ் சர்மாவின் நூல் அள்ளி வீசுகிறது. அவற்றுக்கெல்லாம் நாம் பதிலளிக்க வேண்டிய தேவை இல்லை.

பிரபாகரனை சந்திக்க விரும்புவோர் கண்களைக் கட்டியே தான் அழைத்துச் செல்வார்கள் என்றும்; பிரபாகரன் தனது துணைவியாரை கட்டாயப்படுத்தி கடத்தி திருமணம் செய்து கொண்டார் என்றும்; விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உலகத் தமிழர்களிடம் கட்டாயப்படுத்தி, மிரட்டி, நிதி திரட்டப்படுகிறது என்றும்; பாம்பின் விஷத்தை உடலில் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றப்பட்டு, விஷம் பொருந்திய பாம்புகளையே கொல்லக் கூடிய ‘விஷப் பெண்களை’ப் போன்றவர்களே பெண் கரும்புலிகள் என்றும்; ராஜிவ் சர்மா கீழ்த்தரமான குற்றச் சாட்டுகளை அடுக்குகிறார்.

ராஜீவ் காந்தியை கொலை செய்தது விடுதலைப் புலிகள்தான் என்று ராஜிவ் சர்மா உறுதியான முடிவுக்கு வந்து விடுகிறார். ஆனால, ‘சர்வதேச சக்திகளின்’ ‘கூலிப்படையாக’ செயல்பட்டார்கள் எனறு இழித்துரைக்கிறார். இராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணையே நேர்மையாக இல்லாதபோது அந்த விசாரணையின் தீர்ப்பை எப்படி ஏற்க முடியும் என்ற கேள்விக்கு ராஜீவ் சர்மாவிடம் பதில் இல்லை.

ராஜீவ் கொலை தொடர்பாக டில்லியில் பல ரகசிய கோப்புகள் காணாமல் போயின. அந்தக் கோப்புகள் ஏன் மறைந்தன? என்ற கேள்விக்கு விடை இல்லை.

### காணாமல் போன கோப்புகள்:

பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியில் பல முக்கிய அரசாங்க கோப்புகள் காணாமல் போய்விட்டன; அந்தக் கோப்புகள் விவரம்:

1. கோப்பு எண்.8-1-WR/UJ/90/Vol.III நவம்பர் 89-லிருந்து - ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அதிகாரிகள் எழுதிய குறிப்புகளைக் கொண்ட கோப்பு: பிரதமர் அலுவலகத்திலிருந்து 1991 ஆம் ஆண்டில் இது காணாமல் போய்விட்டது. பிறகு இந்தக் கோப்பை சரிப்படுத்தி ஒட்டு வெட்டு வேலைகளைச் செய்து ஜெயின் கமிஷன் முன் நரசிம்மராவ் ஆட்சி சமர்ப்பித்தது. (இப்படி கோப்புகளைத் திருத்தி அமைப்பது சட்ட விரோதமான நடவடிக்கையாகும்)
2. கோப்பு எண். 1/12014/5/911 - A.S./D111 நீதிபதி வர்மா மற்றும் நீதிபதி ஜெயின் கமிஷன்களின் விசாரணை வரம்புகள் பற்றிய இந்தக் கோப்பு, 1995 முதல் காணவில்லை.
3. சந்திராசாமி மற்றும் ஜனதா கட்சித் தலைவர் சுப்ரமணியசாமி ஆகியோருடன் வெளிநாட்டு உளவு நிறுவனங்கள் தொடர்பு கொண்டு பேசியபோது இடைமறித்துக் கேட்கப்பட்ட தகவல்களைக் கொண்ட இந்தக் கோப்பை, பிரதமர் அலுவலக மூத்த அதிகாரிகளே அழித்து விட்டனர்.
4. 1987 இல் ராஜீவ் காந்தியைக் கவிழ்க்க - அன்றைய குடியரசுத் தலைவர் ஜெயில்சிங் - சந்திராசாமி ஆகியோர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி இந்திய உளவு நிறுவனம் (அய்.பி) கண்டறிந்த உண்மைகளும், பரிந்துரைகளும் அடங்கிய இந்த கோப்பு காணவில்லை.
5. ராஜீவ் கொலை பற்றி உளவு நிறுவனங்கள் உள் துறை அமைச்சர் எஸ்.பி. சவானிடம் தெரிவித்த கருத்துக்கள், இது தொடர்பாக சமர்ப் பிக்கப்பட்ட ஆவணங்கள் அடங்கிய கோப்பு காணப்படவில்லை.
6. ராஜீவை சென்னையில் கொலை செய்யலாமா? அல்லது டில்லியில் கொலை செய்யலாமா? என்ற கேள்விகளோடு, 1991 ஏப்ரல் 20 ஆம் தேதி பரிமாறிக் கொள்ளப்பட்ட ஒரு ஒயர்லெஸ் தகவலை உளவுத் துறை இடைமறித்துப் பதிவு செய்தது. இந்த விவரங்கள் அடங்கிய கோப்பு காணவில்லை.
7. நரசிம்மராவ் அரசாங்கமே - ஜெயின் கமிஷன் விசாரணையை நிறுத்தி விடுவதற்கான முயற்சிகளில் இறங்கியது. இது பற்றிய விவரங்களடங்கிய கோப்பும் காணவில்லை.

இந்தக் கோப்புகள் அனைத்தும் மிக முக்கிய தகவல்களைக் கொண்டவைகளாக இருந்தாலும், ஜெயின் கமிஷன் முன் - நரசிம்மராவ் அரசு, இவைகளை சமர்ப்பிக்கவில்லை. அதோடு இந்தக் கோப்புகள் - சர்வதேச அரசியல் தரகராகத் திகழும் சந்திராசாமிக்கு, ராஜீவ் கொலையில் இருந்த தொடர்புகளை அம்பலப்படுத்தும் கோப்புகளாகும்.

ராஜீவ் கொலை தொடர்பாக நடந்த பல்வேறு சதி முயற்சிகள் வெளியே தெரிய வேண்டாம் என்ற நோக்கத்தோடுதான், இந்தக் கோப்பில் அடங்கியிருந்த முக்கிய சாட்சியங்கள் மறைக்கப்பட்டன என்ற, உளவுத் துறை அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் பேசும்போது ஒப்புக் கொண்டார்கள் என்ற தகவல்களை ‘அவுட் லுக்’ ஆங்கில இதழ் (24.11.97) வெளியிட்டது.

(தொடரும்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

## ‘சித்திரை’யில் தொடங்குவது அறிவியலுக்கு எதிரானது

# தமிழ்ப் புத்தாண்டை ஜெயலலிதா மாற்றியது கண்டனத்துக்குரியது

**தமிழக முதல்வர் ஜெயலலிதா மீண்டும் ‘சித்திரை’ தான் தமிழ்ப் புத்தாண்டு என்று அறி வித்திருப்பது, அவரது பார்ப்பனிய இந்துத்துவ ஈடுபாட்டைத்தான் வெளிப்படுத்துகிறது. பெரியார் திராவிடர் கழகம் இந்த மாற்றத்தை வன்மையாக எதிர்க்கிறது.**

**சித்திரை தான் தமிழ்ப் புத்தாண்டு என்பது அறிவி யலுக்கு எதிரானது.**

தமிழர் கொண்டாடிய தை புத்தாண்டு, சித்திரைக்கு மாறியது எப்படி? குப்தர் வம்சத்தில் வந்த இரண்டாம் சந்திர குப்தன் தனது பெயரை விக்கிரமாதித் தன் என்று மாற்றிக் கொண்டு - தனது பெயரால் ‘விக்கிரம சகம்’ என்ற ஆண்டு முறையை உருவாக்கிக் கொண்டான். வானவியலை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த ஆரியபட்டருக்கு எதிராக வானவியலில் - சாதகம், சோதிடத்தைப் புகுத்தும் முயற்சிகள் அவனது காலத்தில் மேற் கொள்ளப்பட்டன. எனவே வானியல் சிந்தனை யாளர் ஆரியபட்டர் புறக்கணிக்கப்பட்டு, பழமையில் ஊறியவரான மிகிரர் உயர்த்திப் பிடிக்கப்பட்டார். அப்படி விக்கிரமாதித்தன் உருவாக்கிய ‘விக்கிரம சகம்’ எனும் ஆண்டு முறையில் சித்திரை முதல் நாளே ஆண்டின் முதல் நாளாக்கப்பட்டது. ‘விக்கிரம சகம்’ 60 ஆண்டுகளை வரை யறுத்தது. ‘பிரபவ’ ஆண்டில் தொடங்கி ‘அட்சய’ ஆண்டில் முடியும். இவைகளில் ஒரு பெயர்கூட தமிழ் இல்லை. 60 ஆண்டு களுக்கும் வடமொழிப் பெயர்கள்தான். ஆனால், தமிழர்கள் தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடிக் கொண்டிருக் கிறார்கள் என்பதுதான் வேடிக்கை - வேதனை.

இந்த 60 ஆண்டுகளையும் கடவு ளோடு தொடர்புபடுத்தி, ஆபாசம் வழியும் கதைகளையும் உருவாக்கி விட்டார்கள். நாரதரும், கிருஷ்ணனும் உறவு கொண்டு (இருவரும் ஆண்கள்) பெற்ற குழந்தைகளே ‘பிரபவ முதல் அட்சய முடிய 60 ஆண்டுகள்’ என்று தமிழ்க் கலை களஞ்சியமான ‘அபிதான சிந்தாமணி’ கூறுகிறது. இதற்கு புராண ஆதாரங்கள் வேறு உள்ளன. இந்த 60 ஆண்டுகளுக்கு மேல் 61வது ஆண்டைக் குறிக்கப் பெயர் இல்லை. மீண்டும் ‘பிரபவத்திலிருந்து தான் தொடங்க வேண்டும்’ நடைமுறைக் கும் அறிவுக்கும் ஒவ்வாத குழப்பங்களும், மூடநம்பிக்கைகளும் இதில் அடங்கிக் கிடக்கின்றன.

இந்த நிலையில் தான் - தமிழ் அறிஞர்கள் 1921-ம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந் தார்கள். மூன்று முக்கிய முடிவுகளை அவர்கள் அப்போது எடுத்தார்கள்.

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது.
2. அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது.
3. திருவள்ளுவர் காலம் கி.மு. 31 (வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 31-ஐக் கூட்டினால் திருவள்ளு வர் ஆண்டு) திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை இறுதி மாதம் மார்கழி. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள். கிழமைகள் வழக்கில் உள்ளவை என்று முடிவெ டுத்தார்கள். இப்படி முடிவெடுத்த வர்கள் தமிழகத்தின் மூத்த தமிழ் அறிஞர்கள் மறைமலை அடிகள், திரு.வி.க., சுப்பிரமணியப் பிள்ளை, சச்சிதானந்தப் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோம. சுந்தர பாரதியார், கி.ஆ.பெ. விசுவ நாதம் ஆகியோர் ஆவர்.

அதன் பிறகு 1939 ஆம் ஆண்டு திருச்சியில் ‘அகில இந்திய தமிழர் மாநாடு’ சோமசுந்தர பாரதியார் தலைமை யில் கூடியது. அதில் தந்தை பெரியார், கரந்தை தமிழ்ச்சங்கத் தலைவர் உமா மகேசுவரனார், பேராசிரியர் கா. சுப்பிர மணியம், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திரு.வி.க., மறைமலையடிகளார், பி.டி. இராஜன், ஆற்காடு இராமசாமி முதலியார், புரட்சி கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி உட்படப் பலரும் பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் பறைசாற்றியது.

1971-ல் அன்றைய கலைஞர் ஆட்சி, திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்றது. இம்முறையையோ 1971 முதல் அரசு நாட் குறிப்பிலும், 1972 முதல் அரசிதழிலும், 1981 முதல் அரசின் அனைத்து அலுவல் களிலும் பின்பற்றி வருகிறது.

1969-ம் ஆண்டு கலைஞர் ஆட்சி பொங்கல் திரு நாளுக்கு அடுத்த நாளை திருவள்ளுவர் நாள் என்று ஏற்று அரசு விடுமுறை அளித்து ஆணை பிறப் பித்தது. எனவே தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு ஆகும். இடையில் வந்து புகுந்த சித்திரை - தமிழர் மீது புகுத்தப்பட்ட பண்பாட்டுத் திணிப்பாகும்.

### இந்து காலண்டரின் ஓட்டைகள்

அந்தக் காலத்திலேயே இந்து மதத்தின் முன் னோர்கள் - வானவியலைக் கணித்து, நாட்காட்டியை உருவாக்கியுள்ளதாக பழம் பெருமையை, பார்ப் பனர்களும் இந்துப் பழமைவாதிகளும் பீற்றிக் கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்த இந்து காலண்டரின் ஓட்டைகள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

இந்து காலண்டரின் அபத்தம் குறித்து ‘பிரன்ட் லைன்’ இதழில் (மார்ச் 20) பீமன் நாத் என்ற வானவியல் விஞ்ஞானி எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்:

கையில் கட்டியுள்ள கடிகாரம், காலை 8 மணியை காட்டுவதற்கு பதிலாக - இரவு 12 மணியை தொடர்ந்து காட்டிக் கொண்டிருந்தால் அதை நாம் கையில் கட்டிக் கொண்டு, இதுதான் சரியான நேரம் என்று ஊரில் கூறிக் கொண்டிருந் தால் - ஊர் மக்கள் என்ன சொல் வார்கள்? பைத்தியம் பிடித்து விட்டதா என்று கேட்பார்கள். எனது கடிகாரத் தின் நேரம் இரவு 12 மணி தான் என்று காலை 8 மணிக்கு ஒருவன் கூறிக் கொண்டே இருப்பதைப் போல்தான் இந்து காலண்டரான பஞ்சாங்கத்தின் கதையும் இருக்கிறது.

இந்து சோதிடர்களின் விஞ்ஞான அடிப்படை யில்லாத தவறான கணிப்புகளால் ஊகத்தால் உருவாக்கப்பட்ட வானவியல் அடிப்படைகள். மிக மோசமான நேரத்தைக் காட்டிக் கொண்டிருக் கின்றன. பருவ காலங்களை வேகம் வேகமாக - கடந்த 60 ஆண்டுகளில் பாய்ச்சல் வேகத்தில் கடந்து போய் விட்டது. ‘இந்து’க்கள் கணித்த நேரம், இதன் விளைவாக - இப்போது 24 நாட்கள் இடைவெளியில் இந்து காலண்டரான பஞ்சாங்கம், தேங்கிப் போய் நிற்கிறது. அதாவது உலகம் முழுதும் ஆகஸ்டு 1 ஆம் தேதி என்றால், இப்போது, பஞ்சாங்கப்படி, ஆகஸ்டு 25 அய் காட்டிக் கொண்டு நிற்கிறது. இந்த பஞ்சாங்கம் - சரியான வழிகாட்டியல்ல என்பதால் 1955 ஆம் ஆண்டு நேரு பிரதமராக இருந்தபோது, இந்திய அரசு மேக்னக் ஷா என்ற புகழ்பெற்ற விஞ்ஞானியின் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. இந்து பஞ்சாங்க காலண்டரை விரிவாக ஆராய்ந்த குழு, தனது அறிக்கையில் “இந்து காலண்டர் என்பது - மனிதர்கள் தங்கள் சிந்தனையின் கற்பனையில் உருவாக்கப்பட்டதால், அதில் ஏராளமான மூட நம்பிக்கைகளையும், அரை உண்மைகளையும் இடைக்காலத்தில் இணைத்துவிட்டார்கள். இதில் பல குளறுபடிகளும், குழப்பங்களும் உள்ளன. இந்தக் குறைகளை துணிவோடு எடுத்துக்காட்டி மாற்றங் களைக் கொண்டுவர - எவருக்கும் துணிவில்லை. 23 நாட்கள் இடைவெளியில் இந்து பஞ்சாங்கம் போய்க் கொண் டிருக்கிறது. கடந்த 1400 ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக ஏற்பட்ட கால இடைவெளி நீண்டு 23 நாட்களாக வந்து நிற்கிறது” என்று கமிட்டி தனது பரிந்துரையில் சுட்டிக் காட்டியதுடன், “தவறுகளும் - மூடநம்பிக்கைகளும் நிறைந்த ‘களஞ்சியத்தை’ நாம் இந்து வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டு வாழப் பயிற்றுவிக்கப்பட்டு விட்ட தால், அதை மாற்ற முடியாத புனிதமாக்கி - பாது காத்து வருகிறோம்” என்றும் சுட்டிக்காட்டியது. விஞ்ஞானிகள் குழு - புதிய தேசிய காலண்டர் முறையையும் உருவாக்கியது. ஆனால் - பார்ப்பனர் களும், பழமைவாதிகளும், சோதிடர்களும், இந்த மாற்றத்தை ஏற்காமல், கிடப்பில் போட்டுவிட்டனர்.

உண்மையில் சூரியன் உச்சிக்கு வரும் நாளான - தமிழர் திருநாள் - பொங்கல் நாள் என்று கொண் டாடப்படும் நாள் டிசம்பர் 22 ஆம் தேதியே ஆகும். ஆனால், தவறான கணிப்புகளால் அது ஜனவரி 14 அல்லது 15 ஆம் தேதிக்கு தள்ளப்பட்டுவிட்டது.

1955 இல் 23 நாட்களாக இருந்து, இப்போது 24 நாட்கள் அதிகரித்துள்ள தவறான இடைவெளியில் தான் நாள், நட்சத்திரம், நல்ல நேரம், எதிர்காலம் எல்லாமுமே கணிக்கப்பட்டு வருகிறது. இந்த அடிப் படையிலே சோதிட “மேதைகள்” பத்திரிகைகளில் சோதிடக் கணிப்புகளை அள்ளி வீசிக் கொண் டிருக்கிறார்கள். அதைப் படித்தவர்கள் முதல் பாமரர் வரை படித்து நம்பிக் கொண்டிருக்கிறார்கள்! வெட்கக் கேட்டைப் பார்த்தீர்களா?

## கோயிலை எரித்த கிராம மக்கள்

‘காளி சுட்டெரித்து விடுவாள்’ என்று அஞ்சாமல் பக்தர்களே காளி அம்மன் கோயிலுக்கே தீ வைத்துள்ளனர். இந்த சம்பவம் தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் தான் நடந்துள்ளது. அங்குள்ள ஜோதிபாசு நகரில் இருந்த காளி அம்மன் கோயில் கிணற்றில் குணசேகரன் என்ற 8 வயது சிறுவன் பிணமாக மிதந்ததைக் கண்டு, கிராம மக்கள் ஆத்திரப்பட்டனர். இறந்து கிடந்த சிறுவனின் தந்தைக்கும், காளி அம்மன்கோயில் நிர்வாகி ஆறுமுகம் என்பவருக்கும் ஏற்கனவே முன் விரோதம். சிறுவனை கோயிலுக்கு நரபலி கொடுத்து, கோயில் கிணற்றில் கோயில் நிர்வாகி வீசி விட்டதாக சிறுவன் தந்தைக்கும், கிராம மக்களுக்கும் சந்தேகம். ஆத்திர மடைந்த கிராம மக்கள், கோயில் நிர்வாகி வீட்டை தாக்கியதோடு, காளி அம்மன் கோயிலுக்கும் தீ வைத்தனர். காவல்துறை, நரபலி எதுவும் நடக்கவில்லை. சிறுவன், கிணற்றில் விழுந்தது விபத்துதான் என்று கூறிய சமாதானத்தை ஊர் மக்கள் ஏற்கவில்லை. கடவுளின் பெயரால் ஒரு சிறுவன் நரபலி தரப்பட்டான் என்றவுடன், மக்கள் கோயிலையே எரிக்கத் தயாராகிவிட்டனர். கடவுள் சக்தியை நம்புவதற்கும் அவர்கள் தயாராக இல்லை. ‘காளி’ தீயில் எரிந்து போனாள். கடந்த ஜூலை 2 ஆம் தேதி நடந்தது இந்த சம்பவம்.

### நன்கொடை

நாமக்கல் மாவட்டத் தலைவர் தி.க. கைலாசம், 24.7.2011 அன்று தமது 69 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.200/- கொடுத்தார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

### சென்னையில் கழகம் ஒட்டிய சுவராட்டி

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 2nd September 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2042 செப். 8, 2011 புரட்சி 10 முழக்கம் 34 விலை: ரூ.2.50

# 'தினமலர்' நாளேடு எரிப்பு: கழகத்தினர் கைது

3 தமிழர்களுக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றியே தீர வேண்டும் என்று பார்ப்பன 'தின மலர்' தொடர்ந்து எழுதி வருகிறது.

வீரமங்கை செங்கொடியின் உயிர்த் தியாகத்தையும் கொச்சைப் படுத்தி வருகிறது.

இந்த நிலையில் 5 ஆம் தேதியிட்ட நாளிதழில் ஒரு முழுப் பக்கத்துக்கு, தூக்குத் தண்டனைக்கு எதிராகப் போராடி வரும் தலைவர்களையும் இயக்கங்களையும் இழிவுபடுத்தி எழுதியுள்ளது.

செய்தியைப் படித்த பலரும் கொதித்துப் போன நிலையில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் அண்ணா சாலையிலுள்ள 'தினமலர்' எனும் பார்ப்பன மலர் அலுவலகம் எதிரே தென் சென்னை மாவட்டக் கழகத் தலைவர் தபசி குமரன், செயலாளர் உமாபதி, ஒருங்கிணைப்பாளர் சுகுமார் உட்பட 43 தோழர்கள் திரண்டு, பார்ப்பன தினமலர் ஏட்டுக்கு எதிராக முழக்கமிட்டு, அந்த ஏட்டை தீயிட்டுக் கொளுத்தினர்.

அண்ணாசாலை பரபரப்பானது. 30 நிமிட நேரம் போக்குவரத்து நிலைகுலைந்தது.

அனைத்து தோழர்களையும் காவல்துறை கைது செய்தது.

# கருணை மனு தள்ளுபடியின் பின்னணி

தமிழ்நாட்டில் சாந்தன், முருகன், பேரறிவாளன் கருணை மனுக்களை குடியரசுத் தலைவர் திடீர் என்று நிராகரித்ததற்கான காரணங்கள் அம்பலமாகியுள்ளன. குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டீல் இந்த மனுக்கள் மீது கருணை காட்ட வேண்டும் என்றே கருதிய நிலையில், மத்திய அரசு குடியரசுத் தலைவரை கட்டாயப்படுத்தி, இந்த மனுக்களை நிராகரிக்குமாறு கூறியுள்ளது. சோனியா வெளிநாட்டில் சிகிச்சைப் பெற்று திரும்புவதற்குள் இந்த தூக்குத் தண்டனையை நிறைவேற்றி முடித்துவிட திட்டம் தீட்டியதாகவே தெரிகிறது. குடியரசுத் தலைவரை மத்திய அரசு குறிப்பாக, ப. சிதம்பரத்தின் உள்துறை அமைச்சகம், பிரதிபா பட்டீலை நிர்ப்பந்தித்த தாலேயே கருணை மனுக்கள் அவசரம் அவசரமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என்ற தகவலை 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு அம்பலப்படுத்தியுள்ளது. 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் (செப்.4, 2011) அதன் செய்தியாளர் மனோஜ் மிட்டா, 'மற்றொரு நாளில் மரணம்' (Die another day) எழுதியுள்ள செய்தி ஆய்வில் இதுபற்றி எழுதியுள்ளதாவது:

குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணன், தூக்குத் தண்டனைக்கு உடன்பாடு இல்லாதவர் என்பதால், தன்வசமிருந்த கருணை மனுக்களில் ஒன்றைக்கூட அவர் நிராகரிக்கவில்லை. அடுத்து பதவிக்கு வந்த அப்துல் கலாம், மேற்கு வங்கத்தைச் சார்ந்த சட்டர்ஜி என்பவரின் கருணை மனுவை மட்டும் தள்ளுபடி செய்தார். மற்றொரு கருணை மனுவுக்கு கருணை காட்டி தூக்குத் தண்டனையை நிறுத்தினார். தம்மிடமிருந்த தூக்குத் தண்டனைக்கு பரிந்துரைக்கப்பட்ட ஏனைய மனுக்களை மறுபரிசீலனை செய்யுமாறு உள்துறை அமைச்சகத்துக்கு திருப்பி அனுப்பினார். கருணை மனுவை பரிசீலிப்பதற்கு மத்திய அரசிடம், வழி காட்டும் நெறிமுறைகள் ஏதுமில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். கலாமைத் தொடர்ந்து 2007 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த பிரதிபாபட்டீல், இந்த ஆண்டு மே மாதம் வரை, எந்த ஒரு கருணை மனுவையும் நிராகரிக்கவில்லை. அது மட்டுமல்ல, 19 பேரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தார். அதனைத் தொடர்ந்துதான், பிரதிபா பட்டீலுக்கு உள்துறை அமைச்சகத்திடமிருந்து நெருக்கடி தரப்பட்டது. அசாம், பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய 3 மாநிலங்களிலிருந்து வந்துள்ள கருணை மனுக்களுக்கு தண்டனைக் குறைப்பு தரக்கூடாது என்று பிரதிபா பட்டீல் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

முதலில் கடிதம் மூலமாக குடியரசுத் தலைவருக்கு அழுத்தம் தரப்பட்டது. 'குடியரசுத்தலைவர் தூக்குத் தண்டனையை ரத்து செய்வதற்கு அரசியல் சட்டத்தின் 72வது பிரிவு வழங்கும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் தன் விருப்பப்படி, பயன்படுத்த முடியாது; மத்திய அமைச்சரவையின் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனையின்படிதான் முடிவெடுக்க முடியும். உச்சநீதிமன்றம் 'மாரூராம்' வழக்கில், இதைத் தெளிவுபடுத்தியுள்ளது என்று, உள்துறை அமைச்சகம் கடிதம் எழுதி மிரட்டியது. இந்த நிலையில் பஞ்சாபைச் சேர்ந்த புல்லார், தனது கருணை மனு மீது நீண்டகாலம் முடிவெடுக்கப் படாத நிலையில் (13 ஆண்டுகாலம்), தமது தூக்குத் தண்டனையை தள்ளுபடி செய்யுமாறு, உச்சநீதி மன்றத்தை நாடினார்.

புல்லார் ரிட் மனு தாக்கல் செய்த அடுத்த இரண்டு நாட்களிலேயே அவரது கருணை மனுவை குடியரசுத் தலைவர் தள்ளுபடி செய்தார். இதிலிருந்தே அரசின் தலையீட்டினால் அதன் பழிவாங்கும் செயலுக்காகவே குடியரசுத் தலைவர் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள உண்மை வெளிச்சத்துக்கு வந்து விட்டது. கருணை மனுக்கள் மீது முடிவெடுப்பதற்கு நீண்ட காலம் தாமதிக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையிலேயே குடியரசுத் தலைவரின் முடிவை நீதிமன்றங்கள் நிறுத்தி வைத்துள்ளன. புல்லாவின் தூக்குத் தண்டனையை உச்சநீதிமன்றமும், அசாம் மாநிலத்தைச் சேர்ந்த மகேந்திரநாத் தாஸ் என்பவரின் மரணதண்டனையை கவுகாத்தி உயர்நீதிமன்றமும், பேரறிவாளன், சாந்தன், முருகன் தூக்குத் தண்டனையை சென்னை உயர்நீதிமன்றமும் நிறுத்தி வைத்துள்ளன. தமிழ்நாட்டில் மூவரின் தூக்கு தண்டனைக்கு எதிரான எழுச்சியின் காரணமாக தமிழக முதல்வர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கக் கோரி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார். புல்லார் மீதான தூக்கு தண்டனைக்கு எதிராக பஞ்சாப் முதல்வர் பிரகாஷ்சிங்பாதல், முன்னாள் முதல்வர் அமேரிந்தர் சிங் இருவருமே குரல் கொடுத்துள்ளனர். அதேபோல் அப்சல்குருவின் தூக்கு தண்டனையை காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா எதிர்த்து வருகிறார். தமிழக சட்டமன்றத்தைப்போல் காஷ்மீர் சட்டமன்றத்திலும் அப்சல்குரு தூக்குக்கு எதிராக ஏன் தீர்மானம் போடக்கூடாது என்று கேட்டுள்ளார் என்று அந்த ஏடு எழுதியுள்ளது.

**குடியரசுத் தலைவரை கட்டாயப்படுத்தியது உள்துறை அமைச்சகம்**

## அனைத்து சாதியினரும் அர்ச்சகர் : தடை நீங்குமா?

தமிழ்நாட்டு கோயில்களுக்கும் அனைத்து சாதியினரும் அர்ச்சகர்ஆகும் சட்டம் இரண்டு முறை நிறைவேற்றப்பட்டும், உச்சநீதிமன்றத் தால் முடக்கப்பட்டுக் கிடக்கிறது. தி.மு.க. ஆட்சி தொடங்கிய அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் படித்த பார்ப்பனரல்லாத மாணவர்கள் வேலை வாய்ப்பின்றி தவிக்கின்றனர். இந்த நிலையில் கடந்த ஆக.30 ஆம் தேதி தமிழக சட்டசபையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன், இப்பிரச்சினையில் நீதிமன்றத் தடையை நீக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டார். இந்த வழக்கை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறநிலையத் துறை அமைச்சர் எஸ்.வி. சண்முகநாதன் பதிலளித்துள்ளார். ஆட்சி உண்மையாக இதில் நடவடிக்கை எடுக்குமா? அல்லது, அமைச்சரின் பதில் 'சம்பிரதாயமானது' தானா, என்பது இனிமேல்தான் தெரியும்.

*அடுத்த இதழில்.....*

**மனம் திறக்கிறார் கே.டி.தாமஸ்**

*ராஜீவ் வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதி கே.டி. தாமஸ், தூக்குத் தண்டனைக்கு எதிராக எழுதிய கட்டுரை அடுத்த இதழில் வெளிவருகிறது.*

# மரணத்தைக் கொண்டாடும் மனுதர்ம ‘தினமலர்’ கும்பலுக்கு பதிலடி!

‘தினமலர்’ (செப் 5), பார்ப்பனக் கொழுப்போடு அரை வேக்காட்டுத்தனமாக சில கேள்விகளை எழுப்பு கிறது.

***கேள்வி: “மரண தண்டனை விதிக்கப் பட்டவர்கள் மூவரும் தமிழர்கள் என ஒரு கோஷ்டி கோஷம் போடுகிறது; ராஜீவோடு இறந்தவர்கள் மட்டும் சிங்களர்களா?”*** - தினமலர்

**நமது பதில் :** தூக்கு தண்டனை ஒழிப்பை தமிழர்கள் என்பதற்காக மட்டும் கேட்கவில்லை. நேர்மை - நீதி - மனித உரிமை அடிப்படையில்தான் கேட்கப்படுகிறது என்பதை ‘தினமலர்’ புரிந்து கொள்ளட்டும்.

- ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்குத் தண்டனையை பூந்தமல்லி ‘தடா’ நீதிமன்றம் விதித்தபோது, அப்போதே 26 பேரையும் உடனே தூக்கில் போட வேண்டும் என்று எழுதியது, இதே ‘தினமலர்’ தான்.
- உச்சநீதிமன்றம், 22 பேரை தூக்கிலிருந்து காப்பாற்றியபோது, ‘தினமலர்’ அய்யோ தப்பி விட்டார்களே என்று கண்ணீர் வடித்தது. மீண்டும் இந்த 3 தமிழர்களும் தப்பி விடுவார்களே என்ற கவலை ‘தினமலரை’ வாட்டி எடுக்கிறது. ஒன்றை புரிந்து கொள்ளட்டும்; இப்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரும் இந்தக் குற்றத்தில் நேரடி தொடர்புடையவர்கள் அல்ல.
- நேரடி தொடர்புடைய சிவராசன், தாணு, சுபா - ஏற்கனவே இறந்து விட்டார்கள். குற்றம்சாட்டப்பட்டு, போலீசாரால் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டபோது 12 பேர் தற்கொலை செய்து இறந்துவிட்டனர்.
- இப்போது, தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட மூவரும் குற்றத்தில் மட்டுமல்ல, சதியிலும் நேரடி தொடர்புடையவர்கள் அல்ல; சதிச் செயலுக்கு உதவியவர்கள் என்றே நீதிமன்றம் கூறியுள்ளது. அதுவும் ராஜீவ் கொலை செய்யப் போகிறார் என்ற ரகசிய சதித் திட்டம் பற்றி எதுவுமே தெரியாமல் உதவிகளை செய்தவர்கள் என்று நீதிமன்றம் கூறுகிறது. இதற்காக இவர்களை தூக்கில் போட வேண்டுமா?
- ராஜீவ் கொலை வழக்கு ‘தடா’ சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட வேண்டிய வழக்கு அல்ல என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது. ஆனால், ‘தடா’ சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலத்தை அப்படியே நீதிமன்றம் ஏற்க முடியும் என்ற ‘தடா’ சட்டப் பிரிவை மட்டும் ஏற்றுக் கொண்டு அந்த ‘வாக்குமூலம்’ அடிப்படையில் தூக்குத் தண்டனை வழங்கியுள்ளது. - இது நியாயம் தானா?
- ‘தடா’ சட்டம் - இவ்வழக்குக்கு பொருந்தாது என்று கூறிய உச்சநீதிமன்றம், நியாயமாக உயர் நீதிமன்ற விசாரணைக்கு திருப்பி அனுப்பியிருக்க வேண்டும். காரணம் ‘தடா’ சட்டப்படி விசாரிக் கப்பட்ட வழக்கு என்பதால் தான் அச்சட்டத்தின் படி உயர்நீதிமன்ற விசாரணை மறுக்கப்பட்டு நேராக உச்சநீதிமன்ற விசாரணைக்குப் போனது.

  சிறப்புப் புலனாய்வு விசாரணை மட்டுமே முடிந் துள்ளது. இன்னும் சி.பி.அய்.யின் பல்நோக்கு விசாரணை (M.D.M.A.) அமைப்பு - ராஜீவ் கொலையில் தொடர்புடைய நபர்கள் மீதான விசாரணையையே தொடங்கவில்லை. முடிவுறாத ஒரு விசாரணையில் அவசரப்பட்டு, தூக்கில் போட வேண்டுமா? இது நேர்மையா?
- உலகம் முழுதும் தூக்குத் தண்டனை சட்டப் புத்தகத்திலிருந்து வேகமாக நீக்கப்பட்டு வருகிறது. காந்தியும், நேருவும், அம்பேத்கரும், தூக்குத் தண்டனையை எதிர்த்தார்கள். வழக்கை விசாரித்த சி.பி.அய். இயக்குநர் கார்த்திகேயன்கூட, தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார். தூக்குத் தண்டனை வழங்கிய உச்சநீதிமன்ற நீதிபதி கே.டி. தாமஸ்கூட தூக்குத் தண்டனை வேண்டாம் என்கிறார்.

இவ்வளவுக்குப் பிறகும் இந்த மூன்று தமிழர்களையும் தூக்கில் போட வேண்டுமா?

***கேள்வி : அரிதினும் அரிதான வழக்கு களிலேயே தூக்குத் தண்டனை வழங்கப்படு கிறது. ஒரு நாட்டின் பிரதமரையே கொன்று வீசியது, அரிதினும் அரிதான வழக்கு இல்லையா? –*** ‘தினமலர்’

**பதில்:** கொல்லப்பட்ட ராஜீவ் காந்தி, அப்போது பிரதமர் பதவியில் இருக்கவில்லை. ‘அரிதினும் அரிதான வழக்கு’ என்று எந்த வழக்கை நிர்ணயிக்க லாம் என்பதற்கு எந்த அளவுகோலும் வழங்கப் படவும் இல்லை. அது நீதிபதிகளின் விருப்பு வெறுப்புகளையே சார்ந்து நிற்கிறது. இது பற்றி ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த 3 நீதிபதிகளில் தலைமை நீதிபதியான கே.டி.தாமஸ் அவர்களே கடந்த செப்டம்பர் 2 ஆம் தேதி டெல்லியிருந்து வெளிவரும் ‘தி ஏசியன் ஏஜ்‘ ஏட்டில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

*“பெரும்பாலான கொலைகள் கொடூரமாகவே நடக்கும்போது அதில் அரிதினும் அரிதான வழக்குகளை நீதிபதிகளே தங்கள் விருப்பப்படி தீர்மானிக்கிறார்கள். தீவிரவாதிகள் நடத்திய கொலைகள் தொடர்பான பல வழக்குகள் ‘அரிதிலும் அரிதாக’ கருதப்படவில்லை என்பது ஆச்சரியமானது. ஆனால், நாட்டில் பிரபல மானவர்கள் பலியாகும்போது மட்டும் அரிதிலும் அரிதான வழக்கு என்பதாக பட்டம் சூட்டப்பட்டு விடுகிறது. இந்திரா கொலை, ராஜீவ் கொலை, ஜெனரல் வைத்தியா கொலை – இவையெல்லாம் பிரபலங்களின் சாவு என்பதால், அரிதினும் அரிதான வழக்காகிவிட்டன! ஆனால், 1984 இல் சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்குகளில் எந்த ஒரு வழக்கும் அரிதிலும் அரிதான வழக்காகக் கருதப்படவில்லை”* என்று கே.டி. தாமஸ் எழுதியுள்ளார்.

ஆக இறந்தது ராஜீவ் காந்தி என்பதற்காக -

- நேரடி தொடர்பில்லாதவர்களை
- நேரடி சதித் திட்டத்தில் ஈடுபடாதவர்களை
- பகிரங்க நீதிமன்ற விசாரணை மறுக்கப்பட் டவர்களை
- ‘தடா சட்டத்தின் கீழ் சித்திரவதை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதனடிப் படையில் குற்றவாளியாக்கப்பட்டவர்களை
- தூக்கில் போட்டேயாக வேண்டுமா? இதுதான் ‘தினமலரின்’ ஆசையா?
- கொலைக் குற்றவாளி சங்கராச்சாரிக்கு தூக்குத் தண்டனை தந்தால் அதை ‘தினமலர்’ ஏற்குமா? கொலைக் குற்றவாளி சங்கராச்சாரியை ‘தினமலர்’ கண்டித்து ஒரு வரியாவது எழுதியது உண்டா?

***கேள்வி : 11 ஆண்டுகாலம் கழித்து கருணை மனு நிராகரிக்கப்பட்டதால், தூக்குத் தண்டனை போடக் கூடாது என்று கூறுகிறவர்கள், கருணை வழங்கப்பட்டிருந்தால் ஏற்க மறுத்திருப் பார்களா? -*** ‘தினமலர்’

**நமது பதில்:** இது முட்டாள்தனமான கேள்வி! ஒருவரைத் தூக்கில் போட்டு சாகடிப்பதற்கு 32 விநாடிகள் போதும். இந்த ‘32 விநாடி’ மரணத்தை சந்திப்பதற்கு 11 ஆண்டுகள் 4 மாதம், “எப்போது சாகப் போகிறோமோ?” - என்ற பதட்டத்துடன் காக்க வைத்திருந்தது, கொடூரத் தண்டனை அல்லவா? என்பதுதான் கேள்வி. சட்டத்தின் அடிப்படையான நோக்கமே குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதைவிட நிரபராதிகள் தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதுதான்! இவ்வளவு கால தாமதத் துக்குப் பிறகு ஒருவரை தூக்கில் இடக்கூடாது என்ற ஒரே கோரிக்கை மட்டுமே இங்கு அழுத்தமாக வலியுறுத்தப்படுகிறது. காரணம், இது நீதிமன்றம் விதித்த தண்டனையைவிட கூடுதலான தண்டனையைத் தந்து விட்டது. இது அரசியலமைப்பின் 21வது பிரிவுக்கே எதிரானது என்று பல்வேறு வழக்குகளில் உச்சநீதிமன்றமே எடுத்துக்காட்டியிக்கிறது. ஒரு மருத்துவரின் தவறான சிகிச்சையால் நோயாளிக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு உரிய நிவாரணம் கேட்கிறோம். “அப்படி எல்லாம் கேட்கக் கூடாது; சரியான சிகிச்சை செய்திருந்தால், நிவாரணம் கேட்பீர்களா?” என்று மனநலம் பாதிக்கப்பட்டவன்கூட கேட்கமாட்டான்; ஆனால் நெஞ்சத்தில் ஈரமே இல்லாத ‘மனு தர்மத்தை’ லட்சியமாக ஏற்றுக் கொண்டுள்ள ‘தினமலரால்’ தான் இப்படி கேட்க முடியும்.

## ‘மனுதர்மத்தை’ ஆதரிக்கும் ‘தினமலர்’

*“சிலர் எண்ணுவதுபோல மனுதர்ம சாஸ்திரம் சாதிகளை அடிப்படையாகக் கொண்ட நூல் அல்ல. இந்த மனுதர்ம சாஸ்திரம் இந்தியா மட்டுமின்றி உலக நாடுகளான ஈரான், எகிப்து, பாலஸ்தீனம், கிரேக்கம், பர்மா, மலேயா, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் பரவியிருக்கிறது. வாழ்க்கைக்கு தேவையான அனைத்து விஷயங்களும் மனுதர்ம சாஸ்திரத்தில் விளக்கப்பட்டுள்ளன.”* - (‘தினமலர்’ ஜூலை 17, 2011 - இதழில் இப்படி எழுதியது!)

- கொலை செய்த ‘பிராமணரின்’ மயிரை மட்டும் சிரைக்க வேண்டும். ஆனால் கொலை செய்த “சூத்திர”னின் தலையை வெட்ட வேண்டும் என்று கூறுகிறது, ‘மனுதர்மம்’. மனுதர்மத்தை வாழ்க்கைக்கு வழி காட்டும் நூலாக ஏற்றுக் கொண்ட ‘தினமலர்’ இப்படித்தான் எழுதும்!

# தேவ பிரசன்னம் ஒரு பித்தலாட்டம்

*‘திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலில் உள்ள ‘பி’ அறையை திறந்து பொக்கிஷங்களை மதிப்பிட்டால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படும். திறப்பவரின் வம்சம் அழியும். திறப்பவர்கள் விஷ பூச்சிகளால் கடிபட்டு சாவார்கள்’ என்று மன்னர் சார்பில் தேவ பிரசன்னம் பார்த்த ஜோதிடர்கள் கூறினார்கள். இந்த தேவ பிரசன்னம் பொய் என்பதற்கு மன்னரின் குடும்பமே சாட்சியாக இருக்கிறது.*

*ஆம். ‘2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் தேதி ரகசிய அறைகள் திறக்கப்பட்டு, புகைப்படங்கள் எடுக்கப்பட்டுள்ளன’ என்று 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற விசாரணையின் போது மன்னர் குடும்பம் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான கோவில் நிர்வாக அதிகாரி தெரிவித்தார். 2002 ஆம் ஆண்டுக்குப் பிறகு கோவிலின் ஒற்றைக் கல் மண்டபத்தில் தங்க முலாமும், கோவிலின் சில பகுதிகளில் வெள்ளி முலாமும் பூசப்பட்டன. இதற்கான தங்கமும், வெள்ளியும் ரகசிய அறைகளில் இருந்துதான் எடுக்கப்பட்டுள்ளன.*

*இதுபோல் திருவிதாங்கூர் மன்னரின் ஆணைப்படி 3.8.07 அன்று ரகசிய அறைகள் திறக்கப்பட்டு, அவற்றிலிருந்த தங்கம், வெள்ளி போன்றவை புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளன. இது குறித்த சுற்றறிக்கை நகல் ஒன்றும் போலீசாருக்கு கிடைத்துள்ளது. இப்படி கோவிலின் ரகசிய அறைகள் பலமுறை திறக்கப்பட்டுள்ளன. புகைப்படங்களும் எடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மன்னரின் ஆணைப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன. இதனால் மன்னர் குடும்பத்திற்கும் ஆபத்து ஏற்படவில்லை. புகைப்படம் எடுத்தவர்களும் சாகவில்லை. அப்படி இருக்கையில் உச்சநீதிமன்ற உத்தரவுப்படி கோவிலின் ரகசிய அறைகளை திறந்தால் எப்படி ஆபத்து ஏற்படும்?*

*மன்னரின் குடும்பம் கடந்த காலங்களில் கோவில் நகைகளை களவாடிச் சென்றுள்ளது. அதுபோல் இப்போதும் செய்யத் துடிக்கிறது. அதற்காகத்தான் தேவ பிரசன்னம் என்று சொல்லி எல்லோரையும் பயமுறுத்தி வருகிறது.*

*உச்சநீதிமன்ற நீதிபதி ஆர்.வி. ரவீந்திரனும், “நீதிமன்றம் – இது குறித்து ஒரு கமிட்டியை நியமித்துள்ள நிலையில் ‘தேவபிரசன்னம்’ பார்த்தது, கண்டிக்கத்தக்கது” என்று மன்னர் குடும்பத்தைக் கண்டித்துள்ளார்.*

# கோப்புகளையே திருத்தினார், ப. சிதம்பரம் [ 12 ]

**ராஜீவ் சர்மாவின் ‘புலிகளுக்கு அப்பால்….’ நூலுக்கு மறுப்பு தெரிவித்து, சென்னை (ஜூன் 4) வெளியீட்டு விழாவில் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் விரிவாக்கம்**

ராஜீவ் மரணத்தைத் தொடர்ந்து பதவிக்கு வந்த நரசிம்மராவ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான். அவரது தலைமையில் நடந்த காங்கிரஸ் ஆட்சியில் தான் ராஜீவ் கொலை தொடர்பான பல கோப்புகள் ‘மாயமாய்’ மறைந்து போயின. **“அய்யோ, இளம் தலைவரை கொன்றுவிட்டார்களே”** என்று நீலிக் கண்ணீர் வடிக்கும் காங்கிரசார், ராஜீவ் கொலையில் உண்மையான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்பதில், எந்த கவலையோ, அக்கறையோ காட்டியதில்லை. **‘கோப்புகள் காணாமல் போய் விட்டது’** என்று கூறி, அதிலே அடங்கியிருந்த பல உண்மைகள் வெளியே வந்து விடக் கூடாது என்று காங்கிரஸ் ஆட்சி மூடி மறைத்தது. சர்வதேச ஆயுத வியாபாரிகளிடம் நெருக்கமாகத் தொடர்பு கொண்டு, ராஜீவ் கொலைக்கு சதித் திட்டம் தீட்டியதாகக் கருதப்படும் தனது நெருக்கமான நண்பரான சந்திரசாமியைக் காப்பாற்றவே நரசிம்மராவ் இந்தக் கோப்புகளை அழித்தார் என்று ‘அய்பி.’ மற்றும் ‘ரா’ உளவுத் துறை அதிகாரிகள், ஒப்புக் கொள்வதாக ‘அவுட் லுக்’ பத்திரிகை (24.11.1997) எழுதியது.

கோப்புகளை அழித்தது மட்டுமல்ல, கோப்புகளையே திருத்தியும் எழுதினார்கள். அரசுக் கோப்புகளை இப்படி திருத்துவது சட்டப்படி குற்றம். ஆனால், நரசிம்மராவ் ஆட்சியில், அதுவும் நடந்தது. அதற்கு உடந்தையாக செயல்பட்டவர் யார் என்பது தான் வியப்புக்குரியது. முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் கருணை மனுக்களை நிராகரித்து தூக்கில் போடுவதற்கு பரிந்துரை செய்த, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் தான், கோப்பைத திருத்துவதற்கு துணை நின்றவர். ஜெயின் ஆணையத்தின் விசாரணையில் இந்த உண்மை வெளிச்சத்துக்கு வந்தது.

வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது அவரது அமைச்சரவை செயலாளராக இருந்த வினோத் பான்டே என்ற அதிகாரி, ஜெயின் ஆணையத்தின் முன் சாட்சியமளிக்க வந்தார். அவரிடம், ராஜீவ் பாதுகாப்பு தொடர்பான ஒரு கோப்பைக் காட்டி, **“இது நீங்கள் எழுதியது தானே”** என்று சாட்சியத்தின் போது கேட்டார்கள். கோப்பைப் படித்துப் பார்த்த அந்த அதிகாரி திடுக்கிட்டுப் போனார். **“ராஜீவ் காந்திக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வது பற்றி நான் எழுதிய குறிப்புகள், இந்தக் கோப்பில் திருத்தப்பட்டுள்ளன”** என்று நேரடியாகவே அவர் குற்றம் சாட்டினார். ஜெயின் ஆணையம், உள்துறை அமைச்சகத்திடம் விளக்கம் கேட்டது. அப்போது உள்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம், **“ஆமாம், உண்மைதான். வினோத் பாண்டே எழுதிய கோப்பு காணாமல் போய் விட்டதால், அதைத் தேட முடியாததால், நாங்களே புதிதாக ஒரு கோப்பை தயாரித்தது உண்மைதான்”** என்று ஜெயின் ஆணையத்திடம் ப. சிதம்பரம் ஒப்புக் கொண்டார். (அவுட் லுக் 24.11.1997)

கோப்புகள் திருத்தப்பட்டது மட்டுமல்ல, கோப்புகள் தொலைக்கப்பட்டதும் உண்டு. இராஜீவ் மரண விசாரணையில் அவ்வளவு ‘கவலை’ எடுத்துச் செயல்பட்டனர் அதிகாரிகள். ஶ்ரீகுமார் என்ற சி.பி.அய். அதிகாரி, ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக வெளிநாடுகளுக்கு சென்றார். இலண்டன் வழியாக இந்தியாவுக்கு திரும்பும்போது, இலண்டன் ஹீத்துரு விமான நிலையத்தில், இந்த வழக்குகள் தொடர்பான ஆவணங்களைக் கொண்டிருந்த அவரது கைப் பெட்டி காணாமல் போய்விட்டது. வெளிநாடுகளுக்கு சென்று வழக்கு விசாணை தொடர்பாக தகவல்களடங்கிய ஆவணங்களை விமான நிலையத்திலிருந்து திருடிச் சென்றது யார்? ஏன் திருடிச் செல்ல வேண்டும்? திருட்டு, அந்த அதிகாரிக்கு தெரியாமல் நடந்ததா? அல்லது திருட்டுக்கு அவரும் உடந்தையா? இவ்வளவுக்கும் பிறகு, அந்த அதிகாரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது ஏன்? இந்தக் கேள்விகளுக்கு புலனாய்வுத் துறையிடமிருந்து பதிலே இல்லை. ஹீத்துரு நகரிலுள்ள காவல் நிலையத்தில் ஒரு புகாரை மட்டும் பதிவு செய்து விட்டு ஶ்ரீகுமார், இந்தியா திரும்பி விட்டார்.

ராஜீவ் கொலை வழக்கு விசாரணை வெளிப்படையாக நடத்தப்படவில்லை. காந்தி கொலை வழக்கு விசாரணை, இந்திரா கொலை வழக்கு விசாரணை வெளிப்படையாக - பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் முன் நடத்தப்பட்டன. ஆனால், ராஜீவ் கொலை வழக்கு விசாரணை ரகசியமாகவே நடத்தப்பட்டது. அதுவும் கறுப்புச் சட்டமான ‘தடா’ சட்டத்தின் கீழ் நடத்தப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, அவர்களிடமிருந்து ஒப்புதல் வாக்கு மூலங்கள் பெறப்பட்டன. அந்த ஒப்புதல் வாக்கு மூலங்களே குற்றத்துக்கான சாட்சிகளாக மாற்றப்பட்டன. தற்போது தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பேரறிவாளன், தனக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளை ‘தடா’ நீதிமன்றத்திலேயே மனுவாகத் தந்துள்ளார். (11.2.1992) கொடூரமான அந்த சித்திரவதைகளை விரிவாக இங்கே எழுதிட இயலாது என்பதால் உதாரணத்துக்கு ஒரு சிறு பகுதி:

“ஆய்வாளர்கள் மாதவன், ரமேஷ் ஆகியோர் முழங்காலை மடக்கியபடி கைகளை நீட்டியவாறு நிற்கச் சொல்வர். (அதாவது இருக்கையில் அமர்வது போன்ற பாவனையில்) அவ்வாறு நின்று கொண்டே இருக்க வேண்டும். அப்போது, எனது பின்னங்கால்களில் (ஆடுதசை) கழியால் அடிப்பார்கள். ஆய்வாளர் செல்லத்துரை ஒரு பிவிசி பைப்பில் சிமெண்ட் அடைத்து, அதன் மூலம் எனது கை முட்டிகளை நீட்டச் சொல்லி அடிப்பார். இதில் ஆய்வாளர்கள் மாதவன், செல்லத்துரை ஆகியோர் மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதில் புகழ் பெற்றிருந்தனர். மற்றவர்களும் பயன்படுத்துவது உண்டு, என்றாலும் இவ்விருவரும் அதில் உயரத்தில் நின்றனர் என்றே கூற வேண்டும். அவை கூறுவதற்கும் கூசக் கூடியவை என்பதால் அவற்றைக் குறிப்பிடுவதை தவிர்க்க விரும்புகிறேன்.

காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர் கிருட்டிணமூர்த்தி என்றொருவர் இருந்தார். அவரும் என்னைத் துன்புறுத்தினார். அவரின் பாணி வேறுபட்டது. சுவர் ஓரமாக முதுகைச் சாய்த்து உட்காரச் சொல்வார். பின்னர் ஒரு காலை ஒரு பக்கச் சுவருடன் ஒட்டினார்போல் ஒரு காவலரை பிடிக்கச் சொல்வார். மற்றொரு காலை மற்ற பக்கச் சுவருக்கு அதாவது $180^0$ பாகைக்கு விரிப்பார். அவ்வாறு விரியும்போது ஏற்படும் வேதனை அளவிட முடியாததாக இருந்தது.

ஆய்வாளர் டி.என். வெங்கடேசுவரனும் என்னைத் துன்புறத்தியவர். அவர் பென்சில் அல்லது சிறு கட்டைகளை விரல் இடுக்கில் வைத்து அழுத்திப் பிடித்துத் திருகுவார். ஊசிகளை விரல் நகங்களுக்கிடையே ஓட்டுவார். ஷூ கால்களால் எனது கால்களின் சுண்டு விரல்களில் ஏறி மிதிப்பார். இது போன்ற நுணுக்கமான கொடுமைகளைச் செய்வார்.

சிபிஐ துறையினர் எம்மைத் துன்புறுத்துவதில் ஏற்படும் இன்பத்தை எவ்வாறு விரும்பினர் என்பதற்கு எனக்கு ஏற்பட்ட உதாரணம் ஒன்று உண்டு. ஒரு நாள் ஆய்வாளர் என்னை அழைப்பதாகக் கூறி நானிருந்த அறையிலிருந்து துன்புறுத்தல் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு என்னைக் கீழே உட்காரச் சொன்னார்கள். பின்னர் திடீரென எனது இடது பக்க முகத்தில் செருப்புக் காலால் எட்டி உதைத்து ஒரு அதிகாரி கூறினார், ‘ஏண்டா நாடு விட்டு நாடு அகதியா வந்த நீங்கள் இங்கு எங்கள் தலைவரை கொலையா செய்கிறீர்கள்?’ என்றார். எனக்கு அழுகை வந்தது. அருகில் அமர்ந்திருந்த ஆய்வாளர் மாதவன் சிரித்தபடியே, ‘இவன் சிலோன்காரன் இல்லை, தமிழ்நாட்டுக்காரன்தான்’ என்றார். உடனே என்னைத் திரும்பவும் உள்ளே அனுப்பிவிட்டனர்.

இதை ஏன் கூறுகிறேன் என்றால், யார் என்ற விவரம்கூடத் தெரியாமல், என்ன குற்றமிழைத்தார் என்றும் அறியாமல் யாரையாவது அப்பாவிகளைத் துன்புறுத்தி, குற்றவாளிகளாக்கி, பெயரெடுக்கும் மனப்பான்மையோடு காவல் துறையினர் இருந்தனர் என்பதைக் காட்டவே குறிப்பிட்டேன். அவ்வாறு என்னை உதைத்த அதிகாரியின் பெயர் ஆய்வாளர் மோகன்ராஜு.”

**(நூல்: தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல்)**

ஆயுள் தண்டனை பெற்று சிறையில் வாடும் ராபர்ட் பயாஸ் எழுதியுள்ள “விடுதலைக்கு விலங்கு” எனும் நூலில் தனக்கு இழைக்கப்பட்ட பல்வேறு சித்திரவதைகளை விவரித்துள்ளார். அதில் ஒன்றை மட்டும் பதிவு செய்கிறோம்.

“எங்களை விசாரித்த புலனாய்வுத் துறையினர், தண்டனை முறைகளைப் பற்றிக் கடுமையாக ஆராய்ச்சி செய்து தேர்ந்த நிபுணர்களாக இருந்தனர். இது போன்ற துன்புறுத்தலான விசாரணை முறைகளுக்குக் காவல்துறையினர் பிரத்தியேகப் பயிற்சி எடுக்கிறார்கள். ஒரு மனிதனை மற்றொரு மனிதன் எப்படி விதவிதமாக துன்புறத்தலாம் என்பதற்குப் பயிற்சிகள். நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது. காலை நீட்டி வைத்து குதிகாலில் லத்தியால் அடித்ததால், கொஞ்ச நேரத்தில் எனக்கு குதிகாலில் இரத்தம் கட்டுவது போல இருந்தது. அப்படி இரத்தம் கட்டிவிட்டால் கால் பெரிதாக வீங்கிவிடும். கால் பெரிதாக வீங்கிவிட்டால் என்னை மீண்டும் துன்புறுத்த இயலாது என்பதை புரிந்து வைத்துக் கொண்டு, கொஞ்ச நேரம் என்னைக் குதிக்கச் சொன்னார்கள், பிறகு மீண்டும் அடித்தார்கள். இவ்வாறு என் மீதான துன்புறுத்தல்கள் நிகழ்ந்து கொண்டிருந்தபோது, அதிகாரி இரமேஷ் என்னை சுவருடன் சாய்த்து, தலைகீழாக நிற்க வைத்து அடிக்கத் துவங்கினார். என் உள்ளங்காலில் இருந்து உடலெங்கும் பரவி ஓடிய இரத்த ஓட்டம் என் உச்சந்தலையை நோக்கி விரைந்தது போன்ற கடுமையான தலைவலி, சிறிது நேரத்தில் நான் மயங்கி கீழே விழுந்தேன். காந்தன் பயன்படுத்திய ஒயர்லெசு செட் என்னிடம்தான் இருக்கிறது என யாரோ கூறியிருக்கிறார்கள் எனக் கூறி அந்த ஒயர்லெசு செட் எங்கே எனக் கேட்டு, ஆய்வாளர் செல்லத்துரை, டி.எஸ்.பி. சிவாஜி, விஜயக்குமார் ஆகியோர் மயக்கத்தில் இருந்த என்னை மீண்டும் அடித்தார்கள். எனக்கு முன்பின் தெரியாத ஒருவரை அழைத்து வந்து, அந்த ஒயர்லெசு செட் பற்றி எனக்கும் அவருக்கும் தான் தெரியும் எனக் கூறி விசாரித்தார்கள். அவர் என்னைப் பார்த்துவிட்டு, இவரை யார் என்றே தெரியாது எனக் கூறினார். உடனே அதிகாரிகள் என்னை, அவரை அடிக்கச் சொன்னார்கள். நான் முடியாது என மறுத்தேன். இவர்கள் மீண்டும் அடிக்கத் துவங்கினார்கள், நான் மீண்டும் மயங்கினேன்.

இத்தனை சித்திரவதைகளுக்கு மத்தியிலும் எனக்குக் குடிக்கத் தண்ணீர்த் தரக் கூடாது என்பதில் அதிகாரிகள் மிகத் தெளிவாக இருந்தார்கள். தாகம் என்றால், நீங்கள் நினைப்பது போல் ஒரு குவளை நீர் அருந்தினால் தணிந்து விடும் தாகம் அல்ல. ஏற்கெனவே உடலெங்கும் வற்றியிருந்த நீர்ச்சத்தினால் உடலில் நீர் வடிவங்களாக இருக்கின்ற, எச்சில், உதிரம் போன்றவற்றை உடல் தானாகவே கிரகிக்கத் துவங்கும். இதனால் கடுமையான சோர்வும், தசை

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# கோவை மண்டலத்தில் பரப்புரை பயணம்

*தமிழ்நாடு மாணவர் கழக பரப்புரை பயணச் செய்திகளின் கடந்த இதழ் தொடர்ச்சி:*

தொடர்ந்து பொங்கலூரில் 11 மணியளவில் பேருந்து நிறுத்தம் முன்பு பரப்புரை நடந்தது. பன்னீர் செல்வம் உரையாற்றினார். கரடிவாவி பள்ளி முன்பும், காரணம்பேட்டையிலும் பரப்புரை நடந்தது.

மாலை 3.30 மணிக்கு சூலூர் ஆர்.வி.எஸ். கல்லூரி முன்பு தோழர்கள் பிரபாகரன், பன்னீர்செல்வம் உரையாற்றினர். சூலூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் சூலூர் பேருந்து நிலையம் முன்பும் பரப்புரை நடந்தது. பன்னீர் செல்வம், கா.சு. நாகராசு ஆகியோர் உரையாற்றினர். ஒரு மணி நேரத்திற்கு மேல் கூட்டம் நடைபெற்றது.

சூலூரைத் தொடர்ந்து ஒண்டிப்புதூர், சிங்க நல்லூர் பகுதிகளில் பன்னீர் செல்வம், நாகராசு ஆகியோர் உரையாற்றினர்.

பல்லடம் பகுதியில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த தோழர்கள்: விஜயன், சூரியன், வடிவேல், செந்தில்குமார், பால்ராஜ், வடிவேல், சின்னச்சாமி, ஆறுமுகம், ரகுபதி, தேவராஜ், சுந்தரராஜ், செம்பருதி குமார், சுந்தரம், சுந்தரமூர்த்தி (கிராம மக்கள் இயக்கம்), தேவராஜ், விடுதலைச் செல்வன் (விடுதலை சிறுத்தைகள்).

பல்லடம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி யில் 29.7.2011 அன்று தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் சமச்சீர் கல்வியை வலியுறுத்தி வகுப்பு புறக்கணிப்பு மற்றும் சாலை மறியல் நடைபெற்றது. தி.மு.க., அ.தி.மு.க.வை சார்ந்தவர்கள் மாணவர்களிடையே பேச வந்தனர். ஆனால் மாணவர்கள் அவர்களை பேச அனுமதிக்கவில்லை.

### கோவையில்

29.7.2011 காலை 10 மணிக்கு செஞ்சிலுவை சங்கம் முன்பு சமச்சீர் கல்வி, கட்டாய கல்வி, இலவச கல்வியை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பன்னீர் செல்வம், கா.சு. நாகராசு உரையாற்றினர். பொதுச் செயலாளர் கோவை கு. இராம கிருட் டிணன் கலந்து கொண்டார்.

மதியம் 12.30 மணியளவில் கோவை சட்டக் கல்லூரியில் பரப்புரை நடைபெற்றது. வினோத், சட்டக் கல்லூரி மாணவர்கள் வெற்றி, நதியா, அருள் ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக பன்னீர் செல்வம் உரையாற்றினார். 2 மணிக்கு பாரதியார் பல்கலைக்கழகத்தில் துண்டறிக்கை வழங்கப்பட்டது. தொடாந்து வடவள்ளியில் பரப்புரை நடைபெற்றது. பன்னீர்செல்வம், கா.சு. நாகராசு, நேருதாசு, வினோத் உரையாற்றினர். மாலை 4 மணியளவில் காந்திபுரம் பேருந்து நிலையம் அருகே பரப்புரை நடந்தது.

1.8.2011 திங்களன்று காலையில் 8.30 மணிக்கு கோவை அரசு கலைக் கல்லூரியில் துண்டறிக்கை பிரச்சாரம் நடந்தது. ஒரு மணி நேரத்திற்குப் பின் நூறடி சாலையில் நடந்த கூட்டத்தில் மக்கள் பெருவாரியாக முன் வந்து ஆதரவும், நிதியும் தந்துதவினர். அதனைத் தொடர்ந்து அரசு தொழிற் பயிற்சிக் கல்லூரியில் பரப்புரை நடைபெற்றது. மாணவர்கள் தோழர்களிடம் வந்து தங்களது முகவரியையும், தொடர்பு எண்களையும் கொடுத்து தமிழ்நாடு மாணவர் கழகத்தில் இணைய விருப்பம் தெரிவித்தனர். அடுத்து துடியலூரில் 2 மணியளவில் சந்தை பகுதியில் பொது மக்கள் பெருமளவில் கூடினர். ஜஸ்டீன் தோழர்களுக்கு தேநீர் வழங்கி, பயணத்துக்கு நன்கொடை வழங்கினார்.

மதியம் 3 மணியளவில் பெரியநாயக்கன்பாளையத்தில் மாவீரன் மதியழகன் தோழர்களுக்கு மதிய உணவு வழங்கினார். பயனீர் கலைக் கல்லூரியில் மாணவிகள், மாணவர்கள் மத்தியில் பரப்புரை நடந்தது. தொடர்ந்து வீரபாண்டி பிரிவில் மாலை 4 மணியளவில் பரப்புரை நடைபெற்றது.

பெரியநாயக்கன் பாளையம் பேருந்து நிலையத்தில் ஆங்காங்கே இருந்த பொது மக்கள் நிகழ்ச்சியை பெரிதும் விரும்பிக் கேட்டனர். அங்கே மாவீரன் மதியழகன் தோழர்களை வாழ்த்தினார். அதனைத் தொடர்ந்து காரமடை நகர பகுதியில் பரப்புரை தொடங்கியபோது காவல்துறையினர் நிகழ்ச்சியை தடுத்தனர். தோழர்கள் காவல்துறையினருடன் வாதம் செய்து காவல் நிலையம் சென்று ஆய்வாளரிடம் பேசி நிகழ்ச்சியை தொடர அனுமதி பெற்றனர். அதே பகுதியில் தி.மு.க. தோழர்கள் பத்து பேர் வந்து நிகழ்ச்சிக்கு பெரிதும் ஒத்துழைப்பு கொடுத்து தேநீரும், நிதியும் தந்து வாழ்த்தினர். அங்கே தேநீர் விற்பனை செய்யும் செந்தில் சுபாஷ், சமச்சீர் கல்விக்கு ஆதரவாகவும், கல்விக் கொள்ளைக்கு எதிராகவும் எழுச்சியுரையாற்றினர். இரவு மேட்டுப்பாளையத்தில் காலை உணவை லட்சுமணன் வழங்கினார். சந்திரசேகர் இரவு புலால் உணவு கொடுத்து உபசரித்தார். அரசு பயணியர் மாளிகையில் தோழர்கள் தங்கினர்.

அனைத்து இடங்களிலும் தோழர்கள் வினோத், நாத்திகன் ஆகியோர் கல்வி உரிமையை வலியுறுத்தி பாடல் பாடினர். பன்னீர்செல்வம், கா.சு. நாகராசு, நேரு தாசு ஆகியோர் உரையாற்றினர்.

### மேட்டுப்பாளையத்தில்

2.8.2011 காலை 8.30 மணியளவில் மேட்டுப் பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பரப்புரை நடைபெற்றது. மேட்டுப்பாளைத்தைச் சேர்ந்த சந்திரசேகரன், லட்சுமணன் வாழ்த்துரை வழங்கினர். பள்ளி மாணவர்களுக்கு துண்டறிக்கை வழங்கப்பட்டது. சமச்சீர் கல்வியை வலியுறுத்தியும், இலவசக் கல்வியை வலியுறுத்தியும் முழக்கமிட மாணவர்களும் முழக்கமிட்டனர். அதனைத் தொடர்ந்து மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் பரப்புரை நடைபெற்றது. இலட்சுமணன், வழக்குரைஞர் அலெக்ஸ், சந்திரசேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

11.30 மணியளவில் அன்னூர் பகுதியில் பரப்புரை நடைபெற்றது. ஒன்றிய பொறுப்பாளர் ஜோதிராம் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் அன்னூர் ஒன்றிய பொருளாளர் இராமன், அச்சம்பாளையம் ஜெயராமன், பிரபாகரன், குருதாசலம் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். குழுவினருக்கு தேனீர் வழங்கினர்.

மதியம் 2 மணியளவில் அவினாசி பகுதியில் பிரச்சாரம் நடைபெற்றது. தலித் விடுதலைக் கட்சியின் சார்பில் வரவேற்று, பழ. சண்முகம் வாழ்த்துரை வழங்கி, மதிய உணவும் வழங்கினார். அவினாசி பேருந்து நிலையம் அருகே பரப்புரை நிறைவடைந்தது.

### சத்தியமங்கலத்தில்

தொடர்ந்து சத்தியமங்கலம் பகுதியில் பரப்புரை நடைபெற்றது. கல்வி உரிமைக்கான மேம்பாட்டு கழகத்தைச் சேர்ந்த கருப்புச்சாமி வாழ்த்துரை வழங்கினார். சத்தியமங்கலம் பேருந்து நிலையத்தில் பரப்புரை நிறைவடைந்தது.

### கோபியில்

3.8.2011 அன்று கோபியில் கொளப்பலூர் பேருந்து நிலையத்தில் காலை 7.30 மணியளவில் பரப்புரை தொடங்கியது. தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பன்னீர்செல்வம் கொடியேற்றி வைத்தார். கோபி மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், ஒன்றிய செயலாளர் சுப்பிரமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

காலை 8.30 மணியளவில் கோபி பேருந்து நிலையத்தில் பிரச்சாரம் தொடங்கி யது. கோபி வேலுச்சாமி (மாவட்ட துணைத் தலைவர்) வாழ்த்துரை வழங்கினார்.

தொடர்ந்து கரட்டிப்பாளையம், கோபி அரசு கலைக் கல்லூரி அருகே பிரச்சாரம் நடைபெற்றது. காசு. நாகராசு உரையாற்றினார். கோபி பெரியார் திடலில் பரப்புரைக் கூட்டம் பகல் 12 மணியளவில் நடைபெற்றது. தோழர்கள் இராம. இளங்கோவன், வேலுச்சாமி உரையாற்றினர்.

அனைத்து இடங்களிலும் தோழர்கள் வினோத், நாத்திகன், நேருதாசு ஆகியோர் கல்வி உரிமை பற்றிய பாடலை பாடினர். நகரத் தலைவர் நாகப்பன் இல்லத்தில் பயணக் குழுவினருக்கு சிறப்பான காலை உணவு வழங்கப்பட்டது.

**செய்தி: பன்னீர் செல்வம்**

---

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

> இடுக்குகளில் இருக்கின்ற நீர்ச்சத்துக் குறையத் தொடங்கியவுடன் ஏற்படும் உடல்வலி போன்றவை உயிரை வாட்டி எடுக்கும். அதைத்தான் நான் தாகம் என்ற ஒற்றைச் சொல்லில் உங்களிடம் கூறியிருக்கிறேன்.''

**(நூல்: 'விடுதலைக்கு விலங்கு')**

இந்த வழக்கை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் டி.ஆர். கார்த்திகேயன், 'ராஜீவ் காந்தி படுகொலை புலனாய்வு' என்ற நூலை எழுதியுள்ளார். அதில் 'தடா' சட்டம் தான் தங்கள் விசாரணைக்கு கிடைத்த பெரும் வாய்ப்பு என்பதை ஒப்புக் கொள்கிறார்.

> ''ராஜீவ் படுகொலை வழக்கில், தடா சட்டம் பயன்படுத்தப்பட்டதால், சாதாரணமாய் வழக்குகளை விசாரிக்கும் போலீசுக்குக் கிடைக்காத சில சௌகரியங்கள் கிடைத்தன. கோர்ட்டின் அனுமதியுடன் அறுபது நாட்கள் வரை, குற்றம் சாட்டப்பட்ட நபரை போலீஸ் பாதுகாப்பில் வைத்து விசாரணை செய்ய முடியும். (வழக்கமாக இது 15 நாட்கள்)
>
> இந்திய சாட்சிய சட்டப்படி போலீஸ் அதிகாரியிடம் குற்றம்சாட்டப் பட்டவர்கள் கொடுக்கும் ஒப்புதல் வாக்கு மூலம் அங்கீகரிக்கப்படுவதில்லை. விதிவிலக்காக போலீஸ் காவல் துறை அதிகாரியிடம், சாகும் தருவாயில் கொடுக்கப்படும் வாக்குமூலங்களும், ஒப்புதல் வாக்கு மூலங்களில் ஒரு தடயம் கண்டுபிடிக்கப்படுமானால் அத்தகைய பகுதி மட்டும் அமைந்தன. ஆனால், தடா சட்டத்தில் காவல் துறை கண்காணிப்பாளர் தகுதியிலுள்ள அல்லது அதற்கு மேற்பட்ட தகுதியிலுள்ள அதிகாரிகள், ஒப்புதல் வாக்கு மூலம் பதிவு செய்தால் அதை வழக்குகளின் சாட்சியங்களாக அனுமதிக்கப்படும்.''

**(நூல்: ராஜீவ் படுகொலை – புலனாய்வு – கார்த்திகேயன்)**

இப்படி தடா சட்டம் தான் தங்களுக்கு சவுகரியங்களை ஏற்படுத்தித் தந்தது என்று ஒப்புக் கொள்கிறார் கார்த்திகேயன். 'தடா' சட்டப்படி குற்றம்சாட்டப் பட்டவர்கள் தான் தங்களை நிரபராதிகளாக நிரூபித்துக் கொள்ள வேண்டும். விசாரணை நடத்துவோருக்கு எந்த முறைகேடுகளையும் செய்யும் சட்ட வாய்ப்புகள் உண்டு.

இப்படித்தான் ஒரு நாட்டின் மிகப் பெரும் தலைவர் கொல்லப்பட்ட வழக்கு விசாரணையின் சட்டங்கள், மனித உரிமைகளை காலில் போட்டு மிதித்துவிட்டு, நடந்து முடிந்திருக்கிறது.


(தொடரும்)

''புரட்சிப் பெரியார் முழக்கம்''
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 8th September 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | செப். 15, 2011 | புரட்சி 10 | முழக்கம் 35 | விலை: ரூ.2.50


### சென்னை மற்றும் உடுமலையிலிருந்து வேலூர் நோக்கி...

## மரண தண்டனைக்கு எதிராக 13 நாட்கள்; 90 ஊர்களில்...
## கழகப் பரப்புரைப் பயணம் புறப்படுகிறது

பெரியார் திராவிடர் கழகம் மரண தண்டனை ஒழிப்புப் பரப்புரைப் பயணத்தைத் தொடங்குகிறது. செப்டம்பர் 20 ஆம் தேதி சென்னையிலிருந்து ஒரு அணியும், செப். 28 ஆம் தேதி உடுமலைப் பேட்டையிலிருந்து ஒரு அணியும் புறப்படுகிறது. காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை ஒவ்வொரு நாளும் மரண தண்டனை எதிர்ப்பை விளக்கும் கலை நிகழ்ச்சிகளும், பரப்புரை கூட்டங்களும் நடைபெறுகின்றன.

செப்டம்பர் 20 - சென்னையிலிருந்து தொடங்கும் பயணக்குழு, 21 ஆம் தேதி மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம், செங்கல்பட்டு, காஞ்சிபுரத்திலும்;

செப். 22 - வந்தவாசி, செஞ்சி, திண்டிவனம், விழுப்புரத்திலும்;

செப். 23 - வில்லியனூர், புதுச்சேரியிலும்;

செப். 24 - கடலூர், சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறையிலும்;

செப். 25 - திருவிடைமருதூர், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சியிலும்;

செப். 26 - விராலிமலை, கொட்டாம்பட்டி, மேலூர், மதுரையிலும்;

செப். 27 - காரியாபட்டி, அருப்புக்கோட்டை, பந்தல்குடி, தூத்துக்குடியிலும்;

செப். 28 - திருநெல்வேலி, கயத்தாறு, கோவில்பட்டி, விருதுநகரிலும்;

செப். 29 - திருமங்கலம், சோழவந்தான், சின்னாளப்பட்டி, திண்டுக்கல்லிலும்;

செப். 30 - செம்பட்டி வேடசந்தூர், ஒட்டன் சத்திரம், பழனியிலும்

அக். 1 - கீரனூர், மூலனூரா, சின்ன தாராபுரம், கரூரிலும்

அக். 2 - வேலாயுதம்பாளையம், ப.வேலூர், நாமக்கல், சேலத்திலும்;

அக். 3 - அரூர், ஜோலார்பேட்டையிலும் பரப்புரை செய்து வேலூரில் நிறைவடை கிறது.

13 நாட்களில் 50 ஊர்களில் பரப்புரை நடக்கிறது. சென்னையில் 20 ஆம் தேதி பயணத் தொடக்கப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

### இரண்டாவது அணி

இரண்டாவது பரப்புரைக் குழு செப். 28 ஆம் தேதி உடுமலைப் பேட்டையிலிருந்து பயணத்தைத் தொடங்குகிறது. காலை 8 மணிக்கு தொடங்கி இரவு வரை பயணம் தொடருகிறது.

செப். 28 - உடுமலை, மடத்துக்குளம், காரத்தொழுவு, கணியூர், தாராபுரம், குண்டடம், திருப்பூரிலும்;

செப். 29 - பல்லடம், சுல்தான்பேட்டை, நெகமம், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, கோவையிலும்;

செப். 30 - கவுண்டன்பாளையம், துடியலூர், பெரியநாயக்கன்பாளையம், மேட்டுப்பாளையம், அன்னூர், புளியம்பட்டி, சத்யமங்கலம், கோபி, ஈரோட்டிலும்;

அக். 1 - குமாரபாளையம், பவானி, சித்தூர், அம்மாபேட்டை, மேட்டூர் நகரம், மேட்டூர் ஆர்.எஸ்.சிலும்

அக். 2 - குஞ்சாண்டியூர், நங்கவள்ளி, மேச்சேரி, வெள்ளார், தோப்பூர், தர்மபுரி, பாலக்கோடு, ராயக்கோட்டை, ஓசூரிலும்;

அக். 3 - கிருஷ்ணகிரி, வாணியம்பாடி, ஆம்பூரில் - பரப்புரைகளை நடத்தி, வேலூரில் நிறைவடை கிறது.

6 நாட்கள் 41 ஊர்களில் பரப்புரைக் கூட்டங்கள் நடக்கின்றன. பயணத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் மற்றும் கழகப் பேச்சாளர்கள், தோழமை அமைப்பினர், கலைக்குழுவினர் பங்கேற்கிறார்கள்.

### சென்னையில் தொடக்கக் கூட்டம்

பரப்புரைப் பயணத்தின் தொடக்கப் பொதுக் கூட்டம் சென்னை இராயப்பேட்டை வி.எம். தெருவில் செங்கொடி நினைவு அரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடக்கிறது. வைகோ, வழக்கறிஞர் துரைசாமி, துரை. இரவிக் குமார் (விடுதலைச் சிறுத்தைகள்), பேராசிரியர் தீரன் (நாம் தமிழர் கட்சி), கி. வேல் முருகன் (பா.ம.க.), வழக்கறிஞர் பாண்டிமாதேவி, கீற்று இரமேசு உரையாற்றுகிறார்கள். இரா. உமாபதி நன்றி கூறுகிறார்.

### பரமக்குடி துப்பாக்கிச் சூட்டைக் கழகம் கண்டிக்கிறது

சாதி ஒழிப்புப் போராளி இமானுவேல் சேகரனின் 54வது நினைவு நாளில் இறுதி வணக்கம் செலுத்த வந்த ஜான் பாண்டியன் கைதையொட்டி கலவரம் வெடித்து துப்பாக்கி சூடுவரை போய்விட்டது. துப்பாக்கிச் சூடு இல்லாமலே காவல்துறை தவிர்த்திருக்க முடியும். ஜான் பாண்டியனும் கைதுசெய்யப்பட்டிருக்கவேண்டிய அவசியமே இல்லை. காவல்துறையின் மோசமான அணுகுமுறையால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு 7 தலித் மக்கள் உயிர்ப் பலியாகியிருப்பது கடும் வேதனை தரும் செய்தியாகும். காவல்துறையின் இந்த துப்பாக்கிச் சூட்டை பெரியார் திராவிடர் கழகம் கண்டிக்கிறது.

### அணுமின் நிலையத்தை எதிர்த்து போராடும் மக்களுக்கு கழகம் ஆதரவு

கூடங்குளம் அணுமின் நிலையத்தை எதிர்த்து களமிறங்கிப் போராடும் போராட்டக் குழுவினருக்கும், பொது மக்களுக்கும், பெரியார் திராவிடர் கழகம் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறது. அணுமின் திட்டங்களில் முன்னோடியாக இருந்த ஜெர்மன், ஜப்பான் நாடுகள், அணுமின் நிலையங்களின் ஆபத்துகளை உணர்ந்து மூடிவிட்டன. பிரான்சு நாட்டில் தென் பகுதியில் இருந்த 'மார்கொலே' என்ற அணுமின் ஆலை வெடித்து ஒருவர் மரணமடைந்த செய்தி ஏடுகளில் வெளிவந்துள்ளது. மக்கள் உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்தை உருவாக்கக் கூடிய அணுமின் நிலையங்கள் இழுத்து மூடப்பட வேண்டும்.

### நாத்திகர்களை அவமதிக்கும் அறநிலையத் துறை அமைச்சர்

'இறைபண்பு - கொடை பண்பு கொண்டவர்களே அறங்காவலர் களாக நியமிக்கப்படுவார்கள்' என்று இந்து அறநிலையத் துறை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன் கூறியிருக் கிறார். கடவுள் மறுப்பாளர்களான நாத்திகர்களை இழிவுபடுத்தும் வகையில்,

"நாத்திகரான முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி வீட்டில் வேலை பார்க்கும் செவிலியர் லீலா குமாரிக்கு கோயில் பணியாளர் வீடு முறைகேடாக ஒதுக்கப்பட்டுள்ளது" என்றும் கூறியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் கே. பாலகிருட்டிணன் சட்டசபையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். "முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி செய்த சில நிர்வாக சீர்கேடுகளை சுட்டிக் காட்டினீர்கள். ஆனால் நாத்திகர்கள் என்றால், இவரைப் போன்றுதான் செயல்படுவார்கள்; இப்படித்தான் இருப்பார்கள் என்றும் கூறுவது சரியல்ல; கலைஞர் கருணாநிதியே நாத்திகரா என்பது கேள்விக்குறியாக உள்ளது. எனவே எங்களைப் போன்ற நாத்திகர்களைக் கொச்சைப்படுத்தாதீர்கள்."

**கே. பாலபாரதி (மார்க்சிஸ்ட்) :** தந்தை பெரியார் இன்று உயிரோடு இருந்திருந்தால் அறங்காவலர் குழுவில் சேர்த்துக் கொள்வீர்களா?

**அமைச்சர் சண்முகநாதன் :** கோயில்களுக்கு உண்டியல் மூலம் வரும் வருமானத்தை மட்டுமே கணக்கில் கொண்டு செலவு செய்ய முடியாது. வருமானம் ஒரே சீராகக் கிடைப்பதில்லை. கிடைக்கும் நிதியை முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்றால் அது பக்தி உள்ளவர்களால் மட்டும் தான் முடியும். நாத்திகர்கள அப்படி செய்ய மாட்டார்கள்.

**கே. பாலபாரதி :** அறங்காவல் குழுவில் கோடீஸ்வரர்களும், கொடைப் பண்பாளர்களும் மட்டுமே நியமிக்கப்படுவார்கள் என்றால், அடி மட்டத்திலுள்ள ஏழைகள் எப்போது உயரத்துக்கு கொண்டு வரப்படுவர்? அ.தி.மு.க.வில் உள்ள அடிமட்டத் தொண்டரையும் அறங்காவலர் குழுவில் நியமிக்க வேண்டும் என்றுதான் கோருகிறோம். நிர்வாகத்தை திறமையாகக் கொண்டு செல்ல வேண்டுமென்றால், நேர்மை யானவர்களை அறங்காவலர் குழுவில் உறுப்பினராகப் போட வேண்டும். - சட்டமன்றத்தில் (ஆக.30) இவ்வாறு விவாதம் நடைபெற்றுள்ளது.

அமைச்சரின் பேச்சு 'பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ்.' குரலாகவே இருக்கிறது. கடவுளின் பக்தர்கள்தான் கடவுள் சொத்துகளை சூறையாடிக் கொண் டிருக்கிறார்கள். அதனால் தான் 'கடவுளுக்கு' சொந்தமான நகைகள், உடைமைகள் கோயில்களிலேயே வைக்கப்படாமல் வங்கிகளில் பாது காக்கப்படுகிறது. கோயில் உண்டியல் திருட்டுகளில் சாமிசிலை திருட்டுகளில் ஈடுபடுவோர் எவரும் நாத்திகர் அல்ல; பக்தர்கள் தான் என்பதை அமைச்சர் புரிந்து கொள்ள வேண்டும்.

## ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதி கே.டி.தாமஸ் மனம் திறக்கிறார்

# தூக்குத் தண்டனையை நிறுத்துங்கள்!

ராஜீவ் கொலை வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதிகளில் ஒருவர் கே.டி.தாமஸ். அவருடன் நீதிபதிகள் வாத்வா மற்றும் முகம்மது குயாத்ரி ஆகிய மூவரும் சேர்ந்து இந்த வழக்கை விசாரித்தனர். இம் மூவர் அடங்கிய அமர்வின் தலைமை நீதிபதியாக கே.டி.தாமஸ் இருந்தார். முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி ஆகிய நால்வருக்கும் உச்சநீதி மன்றம் தூக்குத் தண்டனையை உறுதிப்படுத்தியது. இதில் கே.டி. தாமஸ் மட்டும் நளினிக்கு தூக்குத் தண்டனை வேண்டாம் என்று தீர்ப்பளித்தார். நளினியின் கணவர் முருகனுக்கு தூக்குத் தண்டனை தரப்பட்டுவிட்டதால், முருகனின் மனைவி நளினி வயிற்றில் வளரும் குழந்தை, அநாதையாகிவிடக்கூடிய கட்டாயத்தை உருவாக்கிடக் கூடாது என்று, அதற்கு அவர் காரணம் கூறினார். ஆனாலும், பெரும் பான்மை நீதிபதிகளின் கருத்தே உறுதியாகும் என்ற அடிப்படையில் நளினி தூக்குத் தண்டனையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இந்த நிலையில் சோனியா, குடியரசுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில் தி.மு.க. அமைச்சரவை, நளினியின் தூக்குத் தண்டனையை மட்டும், ஆயுள் தண்டனையாக மாற்ற ஆளுநருக்கு பரிந்துரைத்தது. அதனடிப் படையில் நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகியது. இப்போது நீதிபதி கேடி.தாமஸ் பதவி ஓய்வு பெற்று விட்டார். புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'தி ஏசியன் ஏஜ்' பத்திரிகைக்கு கடந்த செப்டம்பர் 2, 2011 அன்று தூக்குத் தண்டனை ஒழிக்கப்படவேண்டும் என்று அவர் அளித்த பேட்டியில் கூறியுள்ளார். அவரது பேட்டி கட்டுரை வடிவத்தில் வெளியாகியுள்ளது. 'தூக்குத் தண்டனை என்பது அரசே நடத்தும் கொடூரக் கொலை தான்' என்ற தலைப்பில் அக்கட்டுரை வெளி வந்துள்ளது. அவரது கட்டுரையில் அடங்கியுள்ள கருத்துகளின் சுருக்கம்:

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த அமர்வில் தலைமை தாங்கும் கெட்ட வாய்ப்பு எனக்குக் கிட்டியது. மிக அதிக எண்ணிக்கையில் இந்த வழக்கில், கீழ் நீதிமன்றத்தில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது. நான் வழக்கறிஞராக தொழில் செய்து கொண்டிருந்த காலத்தில் தூக்குத் தண்டனைகள் அடிக்கடி வழங்கப்பட்டன. சில குறிப்பிட்ட குற்றங்களுக்கு தூக்குத் தண்டனையை மாவட்ட நீதிமன்றம் வழங்கியாக வேண்டும் என்பது கட்டாயம்; அப்படி வழங்கப்படாவிட்டால், ஏன் வழங்கப்படவில்லை என்ற காரணங்களை விளக்கியாக வேண்டும். பிறகு இந்த நிலை மாறியது; தூக்குத் தண்டனைக்கு பதிலாக ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டன. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டால், அதற்கான காரணங்களை மாவட்ட நீதிபதி விளக்க வேண்டும் என்று நிலைமை தலைகீழாக மாறியது.

இதனைத் தொடர்ந்து, தூக்குத் தண்டனைகள் விதிப்பதை மேலும், கட்டுக்குள் கொண்டு வந்தது உச்சநீதிமன்றம். அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டது. ஆனால், 'அரிதிலும் அரிது' என்பது வார்த்தைகளோடு நின்று போய்விட்டது. தெளிவான விளக்கம் தரப்பட வில்லை. உயர்நீதிமன்ற நீதிபதிகள், உச்சநீதிமன்ற நீதிபதிகள், தங்கள் முன்னால் வரும் கொலை வழக்குகளில், கொலை கொடூரமாக நடந்திருக்கிறது என்று உணர்வார்களேயானால், அரிதிலும் அரிதான வழக்கு என்று கூறி, மரண தண்டனை வழங்கி விடுவார்கள். உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கும். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பல வழக்குகள் அரிதிலும் அரிதான வழக்குகளாக கருதப்படவில்லை. ஆனால், கொல்லப்பட்டவர்கள், பிரபலமானவர்களாக இருந்துவிட்டால் போதும்; உடனே நீதிமன்றம், அதை அரிதிலும் அரிதான வழக்காக கூறி விடும்.

இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, ராணுவ தளபதி வைத்யா கொலை வழக்குகள் அரிதினும் அரிதான வழக்குகளாகக் கருதி, குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்து விட்டனர். ஆனால் 1984 ஆம் ஆண்டு புதுடில்லியில் சீக்கியர்கள் கொல்லப்பட்ட தில் தொடர்பட்ட எந்த ஒரு வழக்கும் அரிதிலும் அரிதான வழக்காகக் கருதப்படவில்லை. உச்சநீதி மன்றத்தில் 'பச்சன் சிங்' வழக்கு வந்தபோதுதான் நீதிபதி சர்க்காரியா, தனது தீர்ப்பில் 'அரிதினும் அரிதான வழக்கு' என்ற வரையறையை உருவாக் கினார்.

ராஜீவ் கொலை வழக்கில், 'அரிதினும் அரிதான வழக்கு' என்ற அடிப்படையிலேயே நான்கு பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இத்தகைய வழக்குகளில் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரி தாக்கல் செய்யப்படும் மறு ஆய்வு மனுக்களை பெரும்பாலும் உச்சநீதிமன்றம் அனுமதிப்பதில்லை. அதுபோலவே இந்த வழக்கிலும், மறு பரிசீலனை மனுவை தள்ளுபடி செய்ய முடிவு செய்தபோது, திடீரென்று, ஒரு கருத்து எனக்கு தோன்றியது. தூக்குத் தண்டனையில் ஒரு நீதிபதி மட்டும் ஒருவருக்கான (நளினிக்கு) தண்டனையைக் குறைக்கலாம் என்று தீர்ப்பு எழுதிய நிலையில், 'அரிதினும் அரிதான வழக்காக' இதை எப்படி கருத முடியும்? எனவே அந்த அடிப்படையில் மறு விசாரணை மனுவை தள்ளுபடி செய்ய வேண்டாம் என்று நான் கூறினேன். மற்ற இரண்டு நீதிபதிகளும் இதை ஏற்கவில்லை. தலைமை நீதிபதியிடம் கருத்து கேட்டபோது, எனது நிலையை அவர் ஆதரித்தார். (மறு விசாரணை மனுவை உச்சநீதிமன்றம் அனுமதித்தாலும், ஏற்கனவே வழங்கிய தீர்ப்பையே உறுதிப்படுத்தியது)

> **கொல்லப்பட்டவர்கள், பிரபலமானவர்களாக இருந்துவிட்டால் போதும்; உடனே நீதிமன்றம், அதை அரிதிலும் அரிதான வழக்காக கூறி விடும்.**

அரசியல் சட்டத்தின் 21வது பிரிவு ஒருவரின் உயிர் வாழும் உரிமையையோ, சுதந்திரத்தையோ பறித்து விடக் கூடாது என்று கூறுகிறது. இதனுடைய அர்த்தம் - நீதியான, நேர்மையான, தகுந்த காரணங்களோடு கூடிய சட்டத்தின் வழியாக ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கலாம். இப்படி சட்டத்தின் வழியில் நின்று ஒரு மனிதனை சாகடிக்கலாமா என்பது தான் கேள்வி!

தூக்குத் தண்டனை வேண்டுமா, வேண்டாமா என்று விவாதங்கள் நடக்கின்றன. ஒருவரைக் கொலை செய்தவரை தண்டனையிலிருந்து தப்பிக்க விடலாமா என்று கேட்கிறார்கள். தண்டனை என்பது என்ன? தண்டனை வழங்குவதே, ஒருவரை திருத்துவதற்குத்தான்; திருந்தி வாழ்வதற்குத்தான்! தவறு செய்த உங்கள் குழந்தையைத் தண்டிக்கிறீர்கள்; எதற்காக? திருந்துவதற்குத்தானே!

திருந்தி வாழச் செய்வது; பழி வாங்குவது; குற்றங்களை எதிர்காலத்தில் தடுப்பது - என்ற அடிப்படையிலேயே கடந்த காலங்களில் தண்டனைகள் வழங்கப்பட்டு வந்தன. பழி வாங்குவதற்காகவே தண்டனை என்பது, காலத்துக்கு ஒவ்வாத நாகரிக சமூகத்துக்கு எதிரான சிந்தனை. 'கண்ணுக்கு கண்; பல்லுக்கு பல்' என்று தண்டனை வழங்குவதை நவீன கிரிமினல் குற்ற ஆய்வாளர்கள் ஏற்கவில்லை. ஒருவருக்கு மரணதண்டனையை தந்து விட்டாலே, அவர் திருந்தி வாழக்கூடிய வாய்ப்பு பறிக்கப்பட்டு விடுகிறது. அடுத்ததாக மரண தண்டனை வழங்கப்படுவதன் மூலம் தான் குற்றங் களைத் தடுக்க முடியும் என்ற வாதம் முன் வைக்கப் படுகிறது. இப்போதும் கூட சவுதி அரேபியா போன்ற நாடுகளில் வெள்ளிக் கிழமை தொழுகைக்குப் பிறகு, மக்கள் முன் தலையை வெட்டும் தண்டனை நிறைவேற்றப்பட்டு வருகிறது. இப்போதும் அது போன்ற தண்டனை வழங்கப்பட்டு வருகிறது என்பது எதை உணர்த்துகிறது? ஆயிரம் ஆண்டுகளாக மக்கள் முன் தலையை சீவும் தண்டனை அமுலில் இருந்தும் குற்றங்கள் குறையவில்லை என்பதைத் தானே! குற்றத்திலிருந்து தப்பி விடும் ஒருவர், மற்றொரு குற்றத்தை செய்ய தூண்டப்படுகிறார் என்ற கருத்தில் நான் உடன்பட்டாலும்கூட, தூக்குத் தண்டனை இருந்தால்தான் குற்றங்களைக் குறைக்க முடியும் என்ற கருத்து உண்மைதானா என்பதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். ஆயுள் தண்டனை, தூக்குத் தண்டனை இரண்டையும் ஒப்பிட்டு, அவை சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி, ஆய்வுகள் ஏதும் நிகழ்ந்ததாக எனக்குத் தெரிய வில்லை. ஆனால், ஒரு பதிவு இருக்கிறது.

பிரிட்டிஷ் இந்தியாவில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில், 1940 இல் முதன்முதலாக தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டது. அதே ஆண்டில் கொச்சின் சமஸ்தானத்திலும் அதன் அரசர் தூக்குத் தண்டனையை ஒழித்தார். 1950 களில் இந்த சமஸ்தானங்கள் இந்தியாவில் இணைக்கப்பட்ட பிறகு, மீண்டும் தூக்குத் தண்டனை அமுலாகி விட்டது. தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்ட 1940-50 ஆண்டு காலத்தையும், பிறகு மீண்டும் தூக்குத் தண்டனை அமுலுக்கு வந்த 1950-1960 என்ற பத்தாண்டு காலத்தையும் ஒப்பிட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்ட காலத்தைவிட, அது அமுலில் இருந்த காலத்தில்தான், கொலைக் குற்றங்கள் அதிகமாக நடந்தன என்ற உண்மை கண்டறியப்பட்டது.

சீரிய சிந்தனையாளர் ஆர்தர் கோயிஸ்ட்லர் ஒரு சுவையான சம்பவத்தை கூறுகிறார்: ஒரு காலத்தில் இங்கிலாந்தில் சிறு திருட்டு, பிக்பாக்கெட் குற்றங் களுக்கே மக்கள் கூட்டத்தின் முன் மரணதண்டனை விதிக்கப்பட்டன. பெரும் கூட்டத்தைத் திரட்டி, அவர்கள் கண் முன்னே, 'பிக்பாக்கெட்' அடிப்பவர் களுக்கு மரண தண்டனை விதித்தால், அதை நேரில் பார்த்தவர்கள் திருந்துவார்கள் என்று நினைத் தார்கள். அப்படி ஒரு முறை தூக்கிலிட்ட சம்பவம் நடந்தபோது, கூட்டத்தினர், தூக்கு சம்பவத்தை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தபோது, 63 பொது மக்களிடம் 'பிக்பாக்கெட்' அடித்து விட்டதாக காவல்துறைக்கு புகார்கள் வந்தன. தூக்குத் தண்டனை குற்றங்களைத் தடுக்காது என்பதற்கு, இது மற்றொரு சான்று.

தூக்குத் தண்டனை - முதலில் ஒரு மனிதன் திருந்தி வாழும், வாய்ப்பைப் பறித்து விடுகிறது. இரண்டாவதாக - ஒரு முறை குற்றம் செய்தவன், மீண்டும் அந்த குற்றங்களை செய்யாமல், குற்றங்களைக் கைவிட வேண்டும் என்ற முடிவுக்கு வருவதைக் கட்டாயமாகத் தடுக்கிறது. மூன்றாவதாக - குற்றவாளிகளை சட்டத்தின் பாதுகாப்போடு அரசும் கொலைதான் செய்கிறது. நான்காவதாக - சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, நீங்கள் ஒருவரைக் கொலை செய்யும்போது, கொலை செய்தவரின் பழி வாங்கும் உணர்வுகளையே நீங்களும் பங்கு போட்டுக் கொள்கிறீர்கள். அய்ந்தாவதாக - ஆன்மிகக் கண்ணோட்டத்தில் கூறுவது என்றால், உங்களால் திருப்பித் தர முடியாத உயிரை பறிக்கும் உரிமை உங்களுக்குக் கிடையாது. ஆறாவதாக - நேரில் கண்ட சாட்சியங்களின் அடிப்படையில், மரண தண்டனை வழங்கப்படுவது பற்றி, வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் இருந்து

8 ஆம் பக்கம்

# விசாரணை ஆணையங்களை முடக்கிய காங்கிரஸ் [ 13 ]

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழு மட்டுமல்ல, இக்கொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையங்கள் செயல்பாட்டிலும் பல மர்ம முடிச்சுகள் காணப்படுகின்றன. ராஜீவ் கொலையில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிவதில் மத்தியில் ஆட்சி செய்த காங்கிரசுக்கு உண்மையான கவலை இருக்கவே இல்லை என்பதற்கு ஏராளமான சான்றுகள் உண்டு. எப்படியாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தினரையும், அந்த இயக்கத்தின் இலட்சியத்துக்காக தமிழின உணர்வோடு செயல்பட முன் வந்த தமிழின இளைஞர்களையும் தண்டித்தாக வேண்டும் என்ற 'ஒற்றைப் பார்வை'யோடு, காங்கிரஸ் ஆட்சி செயல்பட்டிருக்கிறது. ராஜீவ் கொலையில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிய முடியாமல், அது தொடர்பான விசாரணைகளை மூடி மறைக்கவே மத்தியில் காங்கிரஸ் ஆட்சி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியிருப்பது ராஜீவ் மரணத்துக்கு இழைத்த மிகப் பெரும் அநீதியாகும்.

ராஜீவ் கொலையில் சதித் திட்டம் தீட்டியவர்கள் மற்றும் ராஜீவ் பாதுகாப்புக்கு உரிய ஏற்பாடு செய்யாதவர்களைக் காப்பாற்றுவதற்கு காங்கிரஸ் ஆட்சி துடிப்புடன் செயல்பட்டது.

ராஜீவ் காந்தி கொலை நடந்தபோது மத்தியில் ராஜீவின் 'எடுபிடி'யான சந்திரசேகர் தலைமையிலான ஆட்சி நடந்தது. வி.பி. சிங் ஆட்சியை கவிழ்த்த காங்கிரஸ், தனது ஆதரவோடு சந்திரசேகர் தலைமையில் ஒரு பொம்மை ஆட்சியை உருவாக்கியிருந்தது. சந்திரசேகர் ஆட்சியில் சட்ட அமைச்சராக இருந்தவர் சுப்ரமணியசாமி. ராஜீவ் கொலை நடந்த அடுத்த 6வது நாளில் ஜெக்தீஷ் சரண்வர்மா (ஜெ. எஸ். வர்மா) என்ற உச்சநீதிமன்ற தலைமையில் ஒரு விசாரணை ஆணையத்தை சந்திரசேகர் ஆட்சியில் உள்துறை அமைச்சராக இருந்த சுபத்காந்த் சகாய், 1991 மே 27 ஆம் தேதி அறிவித்தார். ராஜீவ் காந்திக்கு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் கோளாறுகள், குறைகள் நடந்தனவா என்பது குறித்து ஆராய்வதே இந்த ஆணையத்தின் பணி என்று உள்துறை அமைச்சகம் அறிவித்தது. இதை அப்போது காங்கிரஸ் எதிர்த்தது. ராஜீவ் கொலையின் சதித் திட்டங்கள் பற்றியும், விசாரணை வரம்பு விரிவாக்கப்பட வேண்டும் என்று அப்போது காங்கிரஸ் தலைவராக இருந்த பி.வி. நரசிம்மராவ், பிரதமர் சந்திரசேகருக்கு கடிதம் எழுதினார். ஆனால், ஜெ.எஸ். வர்மா பாதுகாப்பு குறைபாடுகள் தொடர்பான பிரச்சினைகளை மட்டுமே தம்மால் விசாரிக்க முடியும் என்று உறுதியாகக் கூறிவிட்டார். அதன் காரணமாகவே ஜெ.எஸ். வர்மா விசாரணை வரம்பிலிருந்து ஒதுக்கப்பட்ட அயல்நாட்டு சதி தொடர்புகள் குறித்து விசாரிக்க உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.ஜி. ஜெயின் தலைமையில் மற்றொரு விசாரணை ஆணையம் 1991 ஆக. 23 இல் அமைக்கப்பட்டது.

சந்திரசேகர் ஆட்சியின்போதும் அடுத்த சில மாதங்களில் அமைந்த நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியின்போதும் நீதிபதி வர்மா ஆணையம் செயல்படுவதற்கான நடவடிக்கைகளில் ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டவில்லை. அலுவலக செயலாளரோ, பணியாளர்களோ நியமிக்கப்படவில்லை. மனம் குமுறிய ஜெ.எஸ். வர்மா, வெளிப்படையாகவே, "இந்தியாவின் ஜனநாயக முதிர்ச்சி, எந்த அளவுக்கு உள்ளது என்பதையே இது காட்டுகிறது. இது இந்தியாவின் கவுரவம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. உலக மக்கள் இதை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள்" (2.5.1991 'இந்து' நாளேடு) என்று கூறினார். ஒரு வழியாக நீதிபதி சர்மா, 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தார். 5 மாதங்கள் கழித்து டிசம்பர் மாதம் தான் நரசிம்மராவ் ஆட்சி, அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைத்தது. உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் சர்மா அறிக்கையின் பரிந்துரைகளை முற்றிலுமாக நிராகரித்தார். ஆனால், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களே, இந்த அறிவிப்பை கடுமையாக எதிர்த்ததால், பிரதமர் நரசிம்மராவ், அறிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் உருவானது. அதன் பிறகும், இரண்டு ஆண்டுகாலம் அறிக்கை கிடப்பில் போடப்பட்டது. பிறகு

**ராஜீவ் சர்மாவின்**
**'புலிகளுக்கு அப்பால்....'**
**நூலுக்கு மறுப்பு தெரிவித்து,**
**சென்னை (ஜூன் 4)**
**வெளியீட்டு விழாவில்**
**விடுதலை இராசேந்திரன்**
**ஆற்றிய உரையின் விரிவாக்கம்**

எதிர்கட்சிகள் வற்புறுத்தலைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்று அறிக்கையை பரிசீலித்து, அரசுக்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்டது.

வர்மாவின் அறிக்கை மத்திய மாநில ஆட்சிகளின் காவல்துறை, உளவுத் துறையைக் கடுமையாகக் குறை கூறியது. ராஜீவ் கொலை நடந்தபோது மத்தியில் நடந்த சந்திரசேகர் ஆட்சியும், தமிழ்நாட்டில் நடந்த ஆளுநர் ஆட்சியும் காங்கிரசின் 'பினாமி' ஆட்சிகள் தான் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும். ராஜீவுக்கு பாதுகாப்பு வழங்குவதில் தமிழக காவல்துறை, தமிழக அரசு, இந்திய உளவுத் துறை மற்றும் ராஜீவ் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த காங்கிரசார் தங்கள் கடமையிலிருந்து நழுவி விட்டனர் என்று குற்றம்சாட்டியது வர்மா அறிக்கை, இவர்கள் ஒழுங்காக செயல்பட்டிருந்தால் ராஜீவ் கொலையைத் தடுத்திருக்க முடியும் என்று கூறியது.

ஸ்ரீபெரும்புதூர் காங்கிரஸ் வேட்பாளர் மரகதம் சந்திரசேகருக்கும், தமிழ்நாடு காங்கிரசுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் இருந்ததால், மரகதம் சந்திரசேகர், தமிழக காங்கிரசார் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்வதைத் தவிர்த்து, தானே ஏற்பாடு செய்தார் என்றும், உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய வேண்டிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும், தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் ஒதுங்கி நின்றார் என்றும் ஆணையம் குற்றம் சாட்டியது. வர்மா விசாரணை ஆணையத்துக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி எவ்வித ஒத்துழைப்பையும் தரவில்லை என்று கூறிய அந்த பரிந்துரை, "**ஸ்ரீபெரும்புதூர் பொதுக் கூட்டம் நடந்த இடத்தில் காங்கிரஸ் கட்சிக் காரர்களின் செயல்பாடுகள் எந்தவிதமான ஒழுக்கமும் இல்லாமல் பொது இடத்துக்குரிய பொறுப்பு இன்றி இருந்தது**" என்று கடுமையாக காங்கிரசாரை இடித்துரைத்தது.

வர்மா அறிக்கை பற்றி பரிசீலிக்க அமைக்கப்பட்ட அமைச்சர்கள் குழு, கடமை தவறிய சில மூத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. கடமை தவறிய நான்கு மூத்த அதிகாரிகளிடம் அமைச்சரவைக் குழு நேரில் விசாரணை நடத்தி விளக்கம் கேட்டது. உளவுத் துறை தலைவர் எம்.கே. நாராயணன், உள்துறை செயலாளர் ஜி.எஸ். மணிசர்மா, பாதுகாப்புச் செயலாளர் ஜி.எஸ். வாஜ்பாய், அமைச்சரவை செயலாளர் வினோத் பாண்டே ஆகியோர் தான், விசாரணை நடத்தப்பட்ட அதிகாரிகள். ஆனால், இவை எல்லாமே கண் துடைப்பு நாடகம் தான். வர்மா, பரிந்துரையை சமர்ப்பித்தபோது, இந்த அதிகாரிகள் பதவியில் இருந்தார்கள். ஆனால், அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகே, விசாரணை நடத்தி விளக்கம் கேட்கப்பட்டது. பணி ஓய்வு பெற்ற பிறகு, நடவடிக்கை எடுக்க இயலாது என்பதைத் தெரிந்தே, காங்கிரஸ் ஆட்சியினர், இப்படி ஒரு விசாரணை நாடகத்தை நடத்தினர். உடனடியாக, அந்த நான்கு அதிகாரிகளும், தங்களிடம் விளக்கம் கேட்கப்பட்டதை எதிர்த்து, மத்திய நிர்வாக மன்றத்திடம் முறையீடு செய்தனர். ஓய்வு பெற்ற பிறகு, இவர்களிடம் விளக்கம் கேட்பது, முறையற்றது என்று நிர்வாக மன்றம் தீர்ப்பளித்து விட்டது. ராஜீவ் கொலையில் கடமையை செய்யாமல் தவறிழைத்த அதிகாரிகளை காங்கிரஸ் ஆட்சியே இப்படி திட்டமிட்டு காப்பாற்றியது. வர்மா ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் எந்த ஒரு நடவடிக்கையையும் காங்கிரசாரோ, காங்கிரஸ் ஆட்சியோ இதுவரை எடுக்கவில்லை என்பதோடு குற்றம்சாட்டப்பட்டவர்களையும் காப்பாற்றி விட்டார்கள்.

ராஜீவ் கொலை நடந்தபோது, இந்தியாவின் உளவுத் துறை இயக்குனராக இருந்தவர் எம்.கே. நாராயணன். ஜெ.எஸ். வர்மா ஆணையம், தனது அறிக்கையில் எம்.கே. நாராயணன் 'நம்பகத் தன்மை' குறித்து கேள்விகளை எழுப்பியது.

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் மீது குண்டு வெடிக்கும் போது எடுக்கப்பட்ட வீடியோ படத்தின் மூலப் பதிவு சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் இருந்தது போலவே, உளவுத் துறை இயக்குனர் எம்கே. நாராயணனிடமும் இருந்தது. ஆனால், இந்த வீடியோ மூலப் பதிவை சிறப்புப் புலனாய்வுக் குழுவும் எம்.கே. நாராயணனும், வர்மா ஆணையத்திடம் தரவில்லை. தங்களிடம் அப்படி எந்த ஒரு 'வீடியோ கேசட்டும்' இல்லை என்றே சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் கார்த்திகேயன், ஆணையத்திடம் கூறி விட்டார் என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது. அதன் பிறகு, இந்த வீடியோ காட்சிகளில் ஏதேனும் அழிக்கப்பட்டுள்ளதா என்று வெளிநாட்டு நிபுணர்கள் ஆய்வு செய்து கொண்டிருப்பதாக கார்த்திகேயன் வர்மா ஆணையத்தில் தெரிவித்து விட்டார். கடைசி வரை அந்த படப்பதிவு ஆணையத்திடம் தரப்படவில்லை. விசாரணையின் கடைசி அமர்வில்கூட இது பற்றி நீதிபதி வர்மா கேட்டார். அப்போதும்கூட ஆய்வின் முடிவுகளுக்காகக் காத்திருப்பதாகவே, ஆணையத்திடம் கார்த்திகேயன் சார்பில் கூறப்பட்டது.

வர்மா ஆணையத்திடம் வழங்கப்பட்ட பிரதி எடுக்கப்பட்ட அந்த வீடியோ பதிவுகளில் வெடிகுண்டுப் பெண் ராஜீவுக்கு மாலையிட முயன்று வெடிகுண்டை வெடிக்கச் செய்யும் காட்சிகள் தெளிவின்றி திட்டமிட்டே மங்கலாக்கப்பட்டிருந்தன என்று வர்மா, தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளார். மிக முக்கியமான இந்தக் காட்சிகள் மட்டும் ஏன் மங்கலாக்கப்பட்டன என்ற கேள்வியை நீதிபதி வர்மா எழுப்புகிறார். பாதுகாப்பு குறைபாடுகள் பற்றி விசாரணை நடத்திய வர்மா, ஆணையத்திடம் வீடியோ கேசட் மூலப்பதிவை தர மறுத்த அதே சிறப்புப் புலனாய்வுக் குழு, அன்னிய சதி பற்றி விசாரணை நடத்திய ஜெயின் ஆணையத்திடம் நான்கு வீடியோ கேசட்டுகளை வழங்கியது. காரணம், பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யத் தவறிய அதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற உள் நோக்கம் தான். இது தவிர, ராஜீவ் காந்தி விமான நிலையத்திலிருந்து இறங்கி, ஸ்ரீபெரும்புதூர் சென்றது வரை எடுக்கப்பட்ட வீடியோ கேசட், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடம் இருந்தது. ஆனால், காங்கிரஸ் கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள், அந்த வீடியோ பதிவு தங்களிடம் இல்லை என்றும், அதை காவல்துறை கைப்பற்றியிருக்கலாம் என்றும், வர்மா ஆணையத்திடம் கூறி விட்டனர். ராஜீவுடன் வந்த காங்கிரஸ்காரர்கள் ஏன் ஸ்ரீபெரும்புதூர் போகவில்லை என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டிவருமே என்ற அச்சம்தான் இதற்குக் காரணம். இது குறித்து வர்மா தனது வருத்தத்தைப் பதிவு செய்துள்ளார். 'விடுதலைப் புலிகளுக்கு அப்பால்' நூலில் அதன் ஆசிரியர் ராஜீவ் சர்மாவும் கீழ்க்கண்ட கேள்விகளை எழுப்புகிறார்.

ராஜீவ் படுகொலையில் இறுதி வினாடி வரை, அனைத்து நிகழ்வுகளும் வீடியோ பதிவு செய்யப்பட்டதா? கொலை சதிக்கு திட்டமிட்டவர்கள் மீது கேமிரா பார்வை விழுந்ததா? தாணு மற்றும் சிவராசன் அருகில் யார் யார் நின்றார்கள்? அல்லது அமர்ந்தார்கள்? கேமிராவில் உள்ள சில பதிவுகளை திட்டமிட்டு மங்கலாக்கியது யார்? இதற்கு ஆணையிட்டது யார்? என்ற கேள்விகளை எழுப்பியுள்ளார்.

எம்.கே. நாராயணன் பற்றி வர்மா ஆணையம் தெரிவித்துள்ள கருத்துகள் மிகவும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். "ராஜீவ் காந்திக்கு அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் எம்.கே. நாராயணனுக்கு திருப்தி அளிக்கவில்லை என்பதை இந்த ஆணையம் உணருகிறது. **ஆனால் வெளியே சொல்ல முடியாத காரணங்களால்,** அவரால் இதற்கு எதிராக, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது பற்றி, இன்றைய நாள்வரை எம்.கே. நாராயணன் வாயை மூடி மவுனம் சாதிக்கிறார். உயர்மட்டத்தில் நடக்கும் இந்தக் குறைபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து, உடனே

4 ஆம் பக்கம்

# எம்.கே. நாராயணன் கூறிய பொய் அம்பலமானது

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைய வேண்டும்” என்று வர்மா ஆணையம் குறிப்பிடுகிறது. இது குறித்து ராஜிவ் சர்மா, தனது நூலில் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்.

“ராஜீவ் உயிருக்கு திட்டவட்டமான அச்சுறுத்தல் உள்ளது என்பதை எம்.கே. நாராயணன் முன்கூட்டியே தெரிந்திருந்தாரா? அல்லது ராஜீவ் பாதுகாப்புக் குறைபாடுகளை சரி செய்ய விரும்பினாலும், ‘அதிகார பலம் கொண்ட மேலிட உத்தரவினால்’ அவரால் செயல்பட முடியாமல் போனதா? ராஜீவ் மரணத்தால், அரசியல் ரீதியாக பயனடைந்தவர்கள் யார்? ராஜீவ் கொலை செய்யப்படுவதற்கு முதல்நாள் மே 20 அன்று அப்போதைய உளவுத் துறையின் இணை இயக்குனர் எஸ்.கே. தாக்கூர் அனைத்து மாநில காவல்துறை தலைமை அதிகாரிகளுக்கும், ராஜீவ் பாதுகாப்பை அதிகரிக்கக் கோரி, ஒரு கடிதம் எழுதியிருந்தார். அப்படியானால், அடுத்த நாள் ராஜீவ் கொலை நடக்கப் போகிறது என்பது முன்கூட்டியே தெரியுமா? ஏன் அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை, என்ற கேள்விகளை அவர் முன் வைக்கிறார்.

1991 இல் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் உள்துறை செயலாளர் பார்கவா தலைமையில், உயர் அதிகாரிகள் கூட்டம் ஒன்று நடந்தது. அதில் உளவுத் துறைத் தலைவர் எம்.கே. நாராயணனும் கலந்து கொண்டார். அப்போது ராஜீவுக்கு தரப்படும் பாதுகாப்புகள் பற்றி விவாதிக்கப்பட்டது. எனவே எம்.கே. நாராயண னுக்கு, ராஜீவுக்கு தரப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த எல்லா விவரங்களும் தெரியும் என்று கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த உள்துறை அமைச்ச கத்தின் இணைச் செயலாளர் என்.கே. சிங், என்பவர் வர்மா ஆணையத்தின் முன் தெரிவித்தார். ஆனால், அதுபற்றி தனக்கு எதுவுமே தெரியாது, அப்படி ஒரு கூட்டத்தில் தாம் கலந்து கொள்ளவே இல்லை என்று எம்.கே. நாராயணன் மறுத்தார். நீதிபதி வர்மா விடவில்லை. இருவரையும் எழுத்துப் பூர்வமாக தங்கள் கருத்துகளைக் கூற முடியுமா என்று கேட்டபோது, என்.கே. சிங், எழுத்துபூர்வமாக அக்கூட்டத்தில் பங்கேற்றது உண்மையே என்று எழுதிக் கொடுத்தார். எம்.கே. நாராயணன் எழுத்துப் பூர்வமாக தர முன்வரவில்லை. எம்.கே. நாராயணன், ராஜீவ் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்த வேண்டும் என்று கூறுவதற்கு தனக்குக் கிடைத்த உயர்மட்ட கூட்டத்தின் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வில்லை என்ற முடிவுக்கு தாம் வந்ததாக வர்மா, தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். எம்.கே. நாராயணன், பொய் கூறுவதற்கும் தயங்காத ஒரு மனிதர் என்பதையே, இது காட்டுகிறது.

இந்திய உளவுத் துறையை கடுமையாக விமர்ச்சிக்கிறது வர்மா அறிக்கை. “உளவுத் துறையில் அரசியல் தலையீடுகள் மிக சாதுர்யமாக நடக் கின்றன. அதன் செயல்பாடுகள் புரிந்து கொள்ளவே முடியாத அளவுக்கு கறை படிந்து கிடக்கின்றன. அதன் நம்பகத் தன்மை நடைமுறையானாலும், கற்பனையானாலும் மோசமான பாதிப்புக்குள்ளாகி விட்டது. அரசியல் சார்பு, அடியாட்கள் அச்சுறுத்தல் இல்லாமல், சுதந்திரமான, நேர்மையான அதிகாரிகளைக் கொண்ட புதிய அமைப்பாக உளவு அமைப்புகள் உருவெடுக்க வேண்டும்” - என்று வர்மா நெத்தியடியாகக் கூறுகிறார்.

ராஜீவ் கொலையில் ‘அன்னிய சதி’ பற்றி விசாரிக்க காங்கிரஸ் ஆட்சி நியமித்த ஜெயின் விசாரணை ஆணையத்தின் கதையோ, இதைவிட மிக மோசம்!

1991 ஆகஸ்டு மாதம் இந்த விசாரணை ஆணை யத்தை அமைத்ததே நரசிம்மராவ் தலைமையில் நடந்த காங்கிரஸ் ஆட்சி தான். காங்கிரஸ் நாடாளு மன்ற உறுப்பினர்களின் வற்புறுத்தலினால்தான் அது வந்தது. ஆனால், பெற்ற குழந்தையை தாயே, கழுத்தை நெறித்து சாகடிப்பது போல், இந்த ஆணையத்தின் செயல்பாட்டையும் காங்கிரஸ் ஆட்சி முடக்கிப் போடவே துடித்தது. ஜெயின் ஆணையம் எப்படி எல்லாம் காங்கிரஸ் மைதானத்தில் பந்தாடப்பட்டது என்ற விவரங்கள் அதிர்ச்சித் தரக்கூடியதாகும்.

“ராஜீவ் கொலையை மறக்க முடியுமா? மறைக்க முடியுமா?” என்று கசிந்துருகி கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ் கட்சியினர் இந்த விசாரணை ஆணை யத்தை முடக்கி, ராஜீவ் கொலையில் அன்னிய சதியை மூடி மறைக்க எடுத்த முயற்சிகள் அதிர்ச்சியூட்டு பவையாகும். அந்த துரோகச் செயல்பாடுகளை, அப்படியே பட்டியலிட்டுக் காட்டுகிறோம்.

நீதிபதி ஜெயின், தனது விசாரணையைத் தொடங்கு வதற்கு முன்பு, விசாரணைக்கான வரம்பை நிர்ணயிக்க விரும்பினார். எனவே ஏற்கனவே ஜெ.எஸ். வர்மா, விசாரணை ஆணையத்தை நியமித்து அரசு பிறப்பித்த மூல அறிக்கை அடங்கிய கோப்பை, உள்துறை அமைச்சகத்திடம் கேட்டார். ஆனால். அந்த கோப்பே தொலைந்து போய் விட்டதாக அமைச்சகம் கூறிய பதில், நீதிபதியை அதிர்ச்சியடையச் செய்து விட்டது.

- நாடாளுமன்றத்தில், அரசின் அலட்சியத்தைக் கண்டித்து உறுப்பினர்கள் கொந்தளித்தனர். நாடாளுமன்றமே குலுங்கியது. இதைத் தொடர்ந்து காணாமல் போன கோப்பைத் தேடி கண்டுபிடிக்க கோப்பைத் தேடும் ஒரு ‘சிறப்புப் பிரிவு’ உருவாக்கப்பட்டது.
- கோப்புகளைத் தேடிப் பிடிக்க சிறப்புப் பிரிவு அமைத்த சம்பவம், அநேகமாக இதுவே முதல் முறையாக இருக்கும். வலை வீசித் தேடக் கிளம்பிய சிறப்புப் பிரிவு பிரதமர் அமைச்சகம், சட்ட அமைச்சகம், உள்துறை அமைச்சகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தேடியும், கோப்பு கிடைக்காத நிலையில், அந்தக் கோப்பைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று நரசிம்மராவ் ஆட்சி அறிக்கை வெளியிட்டது.
- இதனால் ஒரு வருட காலம், ஆணையத்தின் பணி முடங்கியது. பிறகு, முதன்முதலாக பொது மக்கள் கருத்து கேட்கும் பணியைத் தொடங்க, ஆணையம் முன் வந்தது. அப்போது, மத்திய அரசின் வழக்கறிஞரே (அட்டர்னி ஜெனரல்) , ஜெயின் ஆணையத்தின் விசாரணை அதிகாரம் பற்றிக் கேள்வி எழுப்பினார். இதற்கு எழுத்துப்பூர்வ விளக்கம் தருமாறு சட்ட அமைச்சகத்திடம் நீதிபதி ஜெயின் கேட்டார்.
- ஆனால், நீதிபதிக்கு பதில் தருவதற்கு, சட்ட அமைச்சகம் எடுத்துக் கொண்ட கால அவகாசம், மீண்டும் ஒரு வருடம். ஒரு வருடத்துக்குப் பிறகு, சட்ட அமைச்சகம் தந்த பதிலில் ஏற்கனவே தமிழ் நாட்டில் சி.பி.அய். (சிறப்புப் புலனாய்வுக் குழு) நடத்திய விசாரணையில் ஜெயின் ஆணையம் தலையிடக் கூடாது என்றும், சி.பி.அய். விசாரித்த நபர்களை ஜெயின் ஆணையம் விசாரிக்கக் கூடாது என்றும், அதற்கான அதிகாரம் ஜெயின் ஆணையத்துக்கு இல்லை என்றும் பதில் தந்தது.
- ஜெயின் இதை ஏற்க மறுத்தார். ‘அன்னிய சதி’ பற்றி விசாரிக்கும்போது, எல்லாவற்றையும் விசாரிக்கும் உரிமை தனக்கு உண்டு என்று 60 பக்கங்களில் விரிவான ஆணையை ஜெயின் வெளியிட்டார். சி.பி.அய். செய்த தவறுகளை விசாரிக்கவும், சி.பி.அய். விசாரணைப் பணிகளை நேரில் பார்வையிடவும், தமக்கு அதிகாரம் உண்டு என்றார் ஜெயின்.
- ஜெயின், தனது நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய மத்திய அரசு, அதுவரை, ஆணையத்தின் செயல்பாடுகளுக்கு இடைக்கால தடை விதிக்க வேண்டும் என்று கேட்டது. இடைக்காலத் தடை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று ஜெயின் மறுத்து விட்டார்.
- இதைத் தொடர்ந்து ஆணையத்தை நீதிமன்றம் வழியாக முடக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. டெல்லியைச் சேர்ந்த முஸ்டாக் அகமது என்ற வழக்கறிஞர் டெல்லி உயர்நீதிமன்றத்தில், ஜெயின் ஆணையத்தை நியமித்த அரசு ஆணை செல்லாது என்று ‘பொதுநல’ வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார். ஏற்கனவே, சி.பி.அய். குற்றவாளிகளைக் கண்டறிந்து, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துவிட்டதால், ஜெயின் ஆணையம், மீண்டும் குற்றவாளிகளைக் கண்டறிய முற்படுவது நேர் எதிரான விளைவுகளை உருவாக்கிவிடும். சி.பி.அய். கண்டறிந்தவர்கள் மட்டுமே குற்ற வாளிகள். ஜெயின் ஆணையம், வேறு குற்ற வாளிகளைக் கண்டறிந்தால், வழக்கு விசாரணையை பாதிக்கும்” என்று அவர் கோரியிருந்தார். வழக்கை விசாரணைக்கு ஏற்ற டெல்லி உயர்நீதிமன்றம், ஏற்கனவே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டவர்கள் மற்றும் சி.பி.அய். சாட்சிகளை வர்மா ஆணையம் விசாரிக்க இடைக்கால தடை விதித்தது. பிறகு வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், 1995 நவம்பரில், டெல்லி வழக்கறிஞர் மனுவை தள்ளுபடி செய்தது, ஜெயின் ஆணையத்தின் விரிவான விசாரணை அதிகாரத்தை உறுதிப் படுத்தியது.
- பதறிப் போன மத்திய காங்கிரஸ் ஆட்சி, முகமூடியைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்தது. முஸ்டாக் அகமது என்ற வழக்கறிஞரின் தனி நபர் மனுவை மத்திய அரசே, உச்சநீதி மன்றத்துக்குக் கொண்டு போனது. ஆக, ஒரு வழக்கறிஞரைப் பிடித்து, தனது சார்பில், ‘பொது நல’ வழக்கைத் தொடர்ந்ததே, மத்திய அரசு தான் என்ற உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. தனி நபர் தொடர்ந்த பொது நலன் வழக்கில் அரசு மேல்முறையீடு செய்ததை உச்சநீதிமன்றம் கேள்வி கேட்டது. அதன் பிறகு, மத்திய அரசே தயாரித்துக் கொடுத்து தனி மனிதர் வழியாக தாக்கல் செய்த பொதுநல வழக்கு மனுவை திரும்பப் பெறுவதாக உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு கேட்டுக் கொண்டது.
- ஜெயின் ஆணையத்தின் விசாரணையில் ராஜீவ் கொலையில் தொடர்புடைய அரசியல் பிரமுகர்கள் அம்பலமாகி விடுவார்களோ என்று அஞ்சி, அதை முடக்கத் துடித்தது காங்கிரஸ் ஆட்சி. காங்கிரஸ் உறுப்பினர்களின் வலியுறுத்த லால் வேறு வழியின்றி அமைக்கப்பட்ட ஜெயின் ஆணையத்தை செயல்படவிடாமல் தடுக்க மேற்கொண்ட கடும் முயற்சிகள் பலத்த சந்தேகங்களை மக்கள் மன்றத்தில் எழுப்பி நிற்கின்றன.

ஜெயின் ஆணையமோ விரிவான விசாரணையை நடத்தியது. 1987 ஆம் ஆண்டு முதல் சந்திராசாமியின் சர்வதேச ரகசிய தொடர்புகள், வெளிநாட்டு வங்கிகளில் போட்ட பணம், சுப்ரமணியசாமி தொடர்புகள் பற்றி இந்திய உளவுத் துறை தயாரித்து வைத்திருந்த ஆவணங்கள், ஜெயின் ஆணையத்திடம் வந்து சேர்ந்தன. அந்த ஆவணங்கள் அரசிடம் சமர்ப்பிக்கப்படாமல் உளவுத் துறை வசமே இருந்தன. 1998 பிப்ரவரியில் ஜெயின் ஆணையத்தின் செயலாளராக இருந்த டி.ஆர். லுத்ரா, மத்திய உள்துறை செயலாளர் பி.பி. சிங் என்பவருக்கு அதுவரை அரசாங்கத்தின் பார்வைக்குக் கொண்டு போகாமல், உளவுத் துறை, தன் வசம் ரகசியமாக வைத்திருந்த அந்த ஆவணங்களை, அரசுக்கு அனுப்பி வைத்தார். 1991 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணையம் 12 முறை கால நீட்டிப்பு பெற்றிருந்தாலும், அரசுக்கு புதிய ஆவணங்கள் தரவுகள் கிடைத்துள்ளதால் சந்திராசாமி, சுப்பிரமணிய சாமி, அன்னிய சதிகள் பற்றி கண்டறிய மேலும், ஓராண்டு கால அவகாசம் தருமாறு ஆணையத்தின் சார்பில் அதன் செயலாளர் டி.ஆர். லுத்ரா அரசிடம் கேட்டார். அப்போது குஜ்ரால் தலைமையிலான அய்க்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி நடந்து கொண்டிருந்தது.

காங்கிரஸ் குஜ்ரால் ஆட்சியில் பங்கேற்கவில்லை; வெளியிலிருந்து ஆதரவு தந்தது. காங்கிரஸ் பலத்தை நம்பியே குஜ்ரால் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய நிலை! ஜெயின் ஆணையத்தின் விசாரணகள் தொடருவதை விரும்பாத காங்கிரஸ் தலைமை கால நீட்டிப்புத் தரவேண்டாம் என்றே குஜ்ரால் ஆட்சியை மிரட்டியது; இல்லாவிட்டால் ஆதரவைத் திரும்பப் பெற்று ஆட்சியைக் கவிழ்த்து விடுவார்கள். எனவே, “கால நீட்டிப்பு தர அரசு விரும்பவில்லை; அடுத்த ஏழு நாட்களில் ஆணையம் இறுதி அறிக்கை தந்தாக வேண்டும்” என்று 1998 பிப்.27 அன்று நள்ளிரவு உள்துறை அமைச்சகம்

5 ஆம் பக்கம்

# இந்திரா கொலையில் நடந்த அரண்மனை சதி

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயின் ஆணையத்துக்கு ஆணையிட்டது நீதிபதி ஜெயின் பதறிப் போனார்.

குஜ்ரால் அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் நீதிபதி ஜெயினை தொலைபேசியில் அழைத்து, "ஆணையம் விரிவான அறிக்கை தரத் தேவையில்லை. மேலோட்டமான அறிக்கையை சமர்ப்பித்தாலே போதுமானது. மேலோட்டமான அறிக்கை என்பதால் நாடாளுமன்றத்தில் வைக்கத் தேவையில்லை. அது நேரடியாகவே அமைச்சரவைக்கு வந்து சேர்ந்து விடும். அத்துடன், செயல்பாட்டுக்கான அறிக்கையை (Action Taken Report) சமர்ப்பிக்க வேண்டிய அவசியமும் இல்லை" என்று கூறினார்.

இறுதி அறிக்கை தயாரிப்பில் பரபரப்பாக இருந்த ஆணையத்தை சி.பி.அய். அதிகாரிகளும் மிரட்டினர். ஏற்கனவே ஆணையத்தின் அறிக்கை ஊடகங்களில் கசிந்திருந்தன. அவை காங்கிரசுக்கு எதிராகவே இருந்தன. கசிய விட்டவர்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, சி.பி.அய். அதிகாரிகள் கட்டாயப்படுத்தினர். நீண்ட நேரம் சி.பி.அய். அதிகாரிகளுக்கும் ஜெயின் ஆணையத்திற்குமிடையே கடும் வாக்குவாதம் நடந்தது. ஜெயின் ஆணையம் கடும் நெருக்கடிகளை மிரட்டல்களை சந்திக்க வேண்டியிருந்தது. அறிக்கை தயாரிப்புக்கு எதிராக, நீதிபதிக்கு தொலைபேசி மிரட்டல்கள் வந்தன. நீதிபதியே உள்துறை அமைச்சகத்துக்கு எழுதிய கடிதத்தில் இந்த தொலைபேசி மிரட்டல்களைப் பதிவு செய்தார். இதே நீதிபதி 1997 ஆம் ஆண்டு அப்போதைய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தாவிடம், ஊடகங்கள் புடை சூழ, 2000 பக்க அறிக்கையை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையிலிருந்து நிர்ப்பந்தத்தால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த அறிக்கை முற்றிலும் முரண்பட்டதாகவே இருந்தது. மிரட்டலுக்கு அஞ்சிய ஜெயின் தனது பரிந்துறைகளை மாற்ற வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளனார். முதல் அத்தியாயத்தின் முதல் பக்கத்தில் ராஜீவ் காந்தி படத்தை அறிக்கை தாங்கியிருந்தது. முதல் அத்தியாயம் முழுவதிலும் ராஜீவ் காந்தியின் பெருமைகளையே ஜெயின் புகழ்ந்து தள்ளியிருந்தார். எந்த ஒரு விசாரணை ஆணையமும், இப்படி, தனிநபர் புகழ் பாடிய முன் உதாரணங்கள் இல்லை. காங்கிரஸ் கட்சியினர் விரும்பியவாறே அறிக்கை வடிவம் பெற்றது. ஒரு வாரம் கழித்து, நீதிபதி ஜெயின், அவரது சொந்த ஊரான ஜோத்பூருக்குப் போனார். அங்கே எதிர்பாரத ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. சோனியா காந்தி - நீதிபதி இல்லம் தேடி வந்து நன்றி தெரிவித்துக் கொண்டார்.

எந்த ஜெயின் ஆணையத்தை கடமையை நிறைவேற்ற விடாமல் காங்கிரஸ், அலைக்கழித்ததோ, அதே விசாரணை ஆணையத்துக்கு சோனியாவின் பாராட்டும் நன்றியும் கிடைத்தது. வர்மா ஆணையத்தின் பரிந்துரை முடக்கப்பட்டது. ஜெயின் ஆணையத்தின் பரிந்துரை மிரட்டலால் வளைக்கப்பட்டது. இதுவே விசாரணை ஆணையங்களின் சோகமான முடிவு. இதே சோக முடிவைத் தான் இந்திரா காந்தி கொலையை விசாரிக்க அவரது 'தவப்புதல்வன்' ராஜீவ் காந்தியால் நியமிக்கப்பட்ட தாக்கர் ஆணையமும் சந்திக்க வேண்டியிருந்தது.

இந்திரா கொலை பற்றி விசாரிக்க நாடாளுமன்ற விதிகளின் கீழ் தாக்கர் ஆணையம் நியமிக்கப்பட்டது. ஆணையமும் விசாரணை நடத்தி அறிக்கை தந்தது. ஆனால், பிரதமர் ராஜீவ் அதை நாடாளுமன்றத்தில் வைக்க மறுத்தார். விசாரணை அறிக்கையில் அடங்கியிருந்த உண்மைகளை மறைக்கவே முயன்றார். விதிகளை சுட்டிக்காட்டி உறுப்பினர்கள் எதிர்த்தனர். உடனே ராஜீவ் காந்தி, நாடாளுமன்றத்தின் விதிகளையே திருத்தி அறிக்கையை வெளிவராமல் தடுத்தார். ஆனாலும், ஆணையத்தின் முக்கிய பரிந்துரைகள் ஊடகங்களில் கசிந்துவிட்டன. அந்த செய்திகள் அதிர்ச்சியூட்டு பவையாகும்.

"*இந்திரா கொலையில் அவரது இல்லத்துக்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பட்டன. அரண்மனை சூழ்ச்சி போன்ற (Palace Intrigue) பெரிய சதிகள் அடங்கியுள்ளன. இந்தக் கொலையில் இந்திராவின் தனிச் செயலாளராக இருந்த ஆர்.கே. தவான் மீது சந்தேகம் எழுகிறது. இவரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்*" என்று பரிந்துரை கூறியது. ('சண்டே' ஆங்கில வார ஏடு 3.2.1991)

தாக்கர் விசாரணை ஆணையம் குற்றம் சாட்டிய ஆர்.கே. தவான், இந்திராவின் உதவியாளர். அவர் மீது எந்த நடவடிக்கையும் காங்கிரஸ் ஆட்சி எடுக்கவில்லை. ராஜீவ் சில காலம் ஒதுக்கி வைத்திருந்தார். பிறகு சோனியாவின் செல்வாக்கு ஓங்கிய நிலையில் ஆர்.கே. தவான், டெல்லி நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். காங்கிரஸ் கட்சி அறிவித்த வேட்பாளர் பட்டியலில் முதலிடம் பெற்றிருந்ததே ஆர்.கே. தவான் பெயர் தான். அதன் பிறகு, சீத்தாராம் கேசரி காங்கிரஸ் தலைவராக இருந்த காலத்தில், ஆர்.கே. தவான், காங்கிரஸ் கட்சியின் செயலாளர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். அப்போது இந்திராவின் 'அரண்மனையில்' இருந்த அவரது ஒரே குடும்ப உறுப்பினர் சோனியாதான். அப்படியானால் தாக்கர் கூறிய அரண்மனைச் சதி என்பதன் பெருள் என்ன? இதற்கும் ஆர்.கே. தவானுக்கும் உள்ள தொடர்பு என்ன? குற்றம்சாட்டப்பட்ட ஒருவரை உயர் பதவியில் உட்கார வைத்து அலங்கரிக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? இந்தக் கேள்விகள் அர்த்தம் பொதிந்தவை.

இந்திரா தனது வீட்டு வளாகத்தில் உள்ள அலுவலகம் வந்தபோது, வழக்கமாக அணியும் குண்டு துளைக்காத கவசத்தை சம்பவம் நடந்த அன்று அணியாமல் வந்தார். அந்த செய்தி 'அரண்மனைக்குள்' இருந்தவர்களால் இந்திரா பாதுகாவலர்களில் ஒருவரான பென்சிங் என்பவருக்கு தரப்பட்டதால், பாதுகாவலர் வயிற்றைக் குறி பார்த்து சுட்டார் என்று கூறியது. தாக்கர் ஆணையம்! இந்திராவை சுட்ட அந்தப் பாதுகாவலரை, காவலாளிகள் உயிருடன் பிடிக்காமல், உடனே சுட்டுக் கொன்று விட்டனர். உண்மைகள் மூடி மறைக்கப்பட்டுவிட்டன. இந்திரா கொலையில் பொய்யாக வழக்கு தொடரப்பட்டு 5 ஆண்டு காலம், சிறையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு பிறகு அரசாலே வழக்கை திரும்பப் பெறப்பட்டவர் கிம்ரஞ்சித் கிங் மான். பென்சிங்கை சுட்டுக் கொன்றது ஏன் என்ற கேள்வியை எழுப்பிய அவர், இந்திரா கொலையில் இத்தாலி நாட்டின் தொடர்பு இருக்கிறது. அப்பாவிகள் தூக்கிலிடப்பட்டு விட்டனர். எனவே மறுவிசாரணை நடத்தப்பட வேண்டும் என்றார். ('தி இந்து' 1.4.1990)

மத்திய காங்கிரஸ் ஆட்சி தனது அதிகாரத்தை உண்மைகளை மூடி மறைத்து குற்றவாளிகளைக் காப்பாற்றவே முயன்றிருக்கிறது. ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தைப் பார்ப்பன சூழ்ச்சியோடு குலைக்க தொடர்ந்து சதித் திட்டங்களையும், குழி பறிப்புகளையும் அரங்கேற்றியே வந்திருக்கிறது. இந்த உண்மைகளை நமது தமிழின இளைஞர்களிடம் விளக்கிடும் முயற்சியே இந்தத் தொடர்!

'விடுதலைப் புலிகளுக்கு அப்பால்' என்ற நூலை உளவு நிறுவன 'ஆசியுடன்' எழுதிய ராஜிவ் சர்மா விடுதலைப் புலிகள் மீது சுமத்திய வீண் பழிகள் அவதூறுகளுக்கு உரிய தரவுகளோடு மறுப்பு எழுத வேண்டும் என்று தொடங்கப்பட்ட இந்தத் தொடர், அதன் எல்லைகளைக் கடந்து, வேறு பல உண்மைகளையும் உணர்த்திட முயன்றிருக்கிறது! இந்த உண்மைகளை தமிழர்களிடம் கொண்டு சென்றால் இந்த கடும் உழைப்பின் நோக்கம் முழுமையடையும்.

தொடரைத் தொடர்ந்து படித்து உற்சாகமூட்டிய தோழர்களுக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

*('புலிகளுக்கு அப்பால்' நூலை எழுதிய ராஜீவ் சர்மா, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது களங்கம் சுமத்தி, சேறு வாரி இரைத்தது உண்மை. ஆனாலும், புலனாய்வுத் துறை ஆதரவுடன் வெளி வந்த அந்த நூலில் பல ரகசிய ஆவணங்கள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளதைக் குறிப்பிட்டாக வேண்டும். ஜெயின், வர்மா ஆணையங்கள் தொடர்பாக பல வெளி வராத செய்திகளை ராஜீவ் சர்மா நூல் பதிவு செய்துள்ளது. அதிலிருந்தே விசாரணை ஆணையங்கள் தொடர்பான தரவுகள் இத் தொடரில் பயன்படுத்தப்பட்டுள்ளன.)*

**(நிறைவு)**

## இழிவு வேலைகளை தடை செய்யக் கோரி தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம்

இந்து பார்ப்பன 'புண்ணிய பூமி'யில் தான் மனித மலத்தை மனிதன் சுமக்கும் இழிவு - சாதியின் பெயரால் நீடித்து வருகிறது. மலம் எடுப்பது, மலம் சுமக்கும் வேலைக்கு ஆள் எடுப்பது போன்ற இழிந்த வேலையை தடை செய்யும் சட்டம் 1993 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. சாக்கடைக் குழாய் மற்றும் கழிவு நீர்த் தொட்டிகளில் மனிதர்கள் இறங்கி வேலை செய்வதைத் தடை செய்யும் வகையில் 1993 ஆம் ஆண்டில், நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் கடந்த செப்டம்பர் 10 ஆம் தேதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.பி.முனுசாமி, இத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, இந்தியாவிலேயே தமிழ்நாடு சட்டமன்றம் தான் இத் தீர்மானத்தை முதன்முறையாக நிறைவேற்றியுள்ளது என்று கூறியுள்ளார். மத்திய அரசு, 1993 ஆம் ஆண்டு சட்டத்தைத் திருத்த இரண்டு மாநில சட்டமன்றங்களின் பரிந்துரை சட்டரீதியான அவசியமாகிறது. 'உலர் கழிப்பறைகளை' தடை செய்து சட்டம் இயற்றி 18 ஆண்டுகளுக்குப் பிறகும், இப்போதுதான் அந்தச் சட்டத்தில் தேவையான திருத்தங்களைக் கொண்டு வரும் முயற்சிகள் தொடங்கியுள்ளன என்று, அமைச்சர் கூறினார். சென்னை உயர்நீதிமன்றம், தமிழக அரசிடம், சட்டத் திருத்தத்தத்தைக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றுமாறு அறிவுறுத்தியது. இதனைத் தொடர்ந்து தமிழக சட்டமன்றம், இத் தீர்மானத்தை நிறைவேற்றி, தலைமைச் செயலாளர் வழியாக, உயர்நீதி மன்றத்துக்கு தெரிவித்துள்ளது.

## மேட்டூரில் கழகக் கூட்டம்

சேலம் மாவட்டம் மேட்டூரில் மரண தண்டனையிலிருந்து பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரை விடுதலை செய்யக் கோரி 22.8.2011 திங்கள் மாலை 6 மணிக்கு மேட்டூர் சதுரங்காடி திடலில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேலம் மாவட்டத் தலைவர் கி. முல்லை வேந்தன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சூரியகுமார், மேட்டூர் நகர தலைவர் பாஸ்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் முல்லைவேந்தன், ஜஸ்டின் ராசு ஆகியோர் உரைக்குப் பின், கழக வழக்கறிஞர் க. குமாரதேவன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி மூத்த வழக்கறிஞர் ப.பா. மோகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை நன்றி கூறினார். முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பகுத்தறிவு இனஉணர்வு இசை நிகழ்ச்சி எழுச்சியாக நடைபெற்றது. கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மேட்டூர் நகர தலைவர் பாஸ்கர், நகர செயலாளர் சம்பத் குமார், பொருளாளர் கதிரேசன், ஆசைத்தம்பி ஆகியோருடன் கழகப் பொறுப்பாளர்களும், தோழர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

### சுயமரியாதை பேரவை தொடக்க விழா

கூத்தூசி குருசாமி - குருவிக்கரம்பை வேலு சுயமரியாதைப் பேரவை தொடக்கவிழா 25.9.2011 மாலை 5 மணிக்கு சென்னை பெசன்ட் நகர் எல்.வி.ஆர். மேநிலைப் பள்ளியில் முனைவர் பொற்கோ தலைமையில் நடக்கிறது. விடுதலை இராசேந்திரன், க. திருநாவுக்கரசு, பேராசிரியர் அ. மார்க்சு, கழஞ்சூர் செல்வராசு, வாலாசா வல்லவன் உரை யாற்றுகிறார்கள்.

# குருவிரெட்டியூர் – காவலாண்டியூரில் எழுச்சி!

## மக்கள் பேராதரவுடன் பெரியார் படிப்பகங்கள்





*காவலாண்டியூரில் மக்கள் வரவேற்பு – முப்பெரும்விழாக்கள்*

குருவரெட்டியூர் நகர கழகத்தின் சார்பாக பெரியார் படிப்பகம் உடற்பயிற்சிக் கூடம் திறப்பு விழா மற்றும் பொதுக் கூட்டம் ஆகியவை கடந்த 10.9.2011 அன்று சிறப்புடன் நடந்தது. விழாவிற்கு கழகத்தின் மாவட்ட தலைவர் நாத்திக சோதி தலைமையேற்க கழகத்தின் மாநில துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் பெரியார் படிப்பகத்தை திறந்து வைக்க, கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், உடற்பயிற்சிக் கூடத்தை திறந்து வைத்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அங்கு இருந்த கம்பத்தில் கழகக் கொடியினை ஏற்றினார். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

படிப்பக திறப்பு விழா நடைபெற்ற இடத்திலிருந்து மேளதாளம் முழங்க ஊர்வலமாக பொதுக் கூட்ட மேடைக்கு தோழர்கள் அனைவரும் சென்றனர். ஊர்வலம் செல்லும் வழியில் அமைக்கப்பட்டிருந்த பெரியார் சிலைக்கு கழகத் தலைவர் மாலை அணிவித்து சிறப்பு செய்தார்.

பின்னர் ஊர்வலம் பொதுக்கூட்ட மேடையை அடைந்த பின்பு அங்கு நாம் தமிழர் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வீரவணக்க நிகழ்வில் ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்த மாவீரன் முத்துக்குமார், மூன்று தமிழர்களின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வலியுறுத்தி காஞ்சி மக்கள் மன்ற தோழியர் செங்கொடி ஆகியோருக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. படிப்பகத்திலிருந்து கூட்ட மேடை வரை விடுதலைப் புலி மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

தோழர் அரங்கநாதன் நினைவாக அமைக்கப்பட்டிருந்த பொதுக் கூட்ட மேடையில் பொதுக் கூட்ட நிகழ்ச்சி தொடங்கியது. மேடையில் அமைக்கப் பெற்று இருந்த தோழர் அரங்கநாதன் படத்தினை கழகத் தலைவர் திறந்து வைத்தார். பொதுக் கூட்ட விழாவிற்கு மாவட்ட தலைவர் நாத்திக சோதி தலைமையேற்க வேல்முருகன் வரவேற்புரையாற்றினார். கழகத்தின் மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன் மற்றும் தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் ரத்தினசாமி ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர்.

கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், மரண தண்டனை ஒழிப்பின் அவசியம் பற்றியும், மூன்று தமிழர்களின் தூக்குத் தண்டனையை ரத்து செய்வதற்கான காரணம் பற்றியும் விளக்கிக் கூறினார். மேலும் அவர், “ஐ.நா. சபையின் மூலம் மரண தண்டனையை ஒழிக்கப்பட்டுள்ள நாடுகளில் குற்றம் அதிகரித்துள்ளதா? ஒழிக்கப்படாத நாடுகளில் குற்றம் குறைந்துள்ளதா? என எடுக்கப்பட்ட ஆய்வுகளில் மரண தண்டனை இல்லாத நாடுகளில் குற்றம் அதிகரிக்கவில்லை எனவும், மரண தண்டனை இருக்கின்ற நாடுகளில் குற்றம் குறையவில்லை எனவும் முடிவுகள வெளிவந்துள்ளதாகக் கூறினார். அதேபோல் தலைவர்களை கொலை செய்தவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதன் மூலம் தலைவர்கள் கொலை செய்வது நிற்பதில்லை என்றார். உதாரணமாக தேசத் தந்தை என்று அழைக்கப்படும் காந்தியை கொன்றவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் இந்திரா காந்தி கொல்லப்பட்டார். அவர்களுக்கு தூக்குத் தண்டனை அளித்த பின் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். இவர்களுக்கு தூக்குத் தண்டனை அளிக்கும் பட்சத்தில் அடுத்து எந்தத் தலைவர் கொல்லப்படுவார் என்று தெரியவில்லை என்றார். மேலும் மரண தண்டனை என்பது மனித நேயத்திற்கான தண்டனை. எனவே அது ஒழிய வேண்டுமென்றார்.”

பின்னர் கழகத்தின் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் உரையாற்றுகையில், பெரியாரின் இன்றைய தேவை குறித்தும், கடவுள் மறுப்பு ஏன் என்பது பற்றியும், மூடநம்பிக்கை ஒழிப்புப் பற்றியும் உரையாற்றினார்.

கழகப் பொதுச் செயலாளர் கோவை இராம கிருட்டிணன் உரையாற்றுகையில், “இலங்கையில் நடந்த இனப் படுகொலை பற்றியும், ராசபக்சேவை போர்க் குற்றவாளி என அறிவிக்கக் கோரியும்” வலியுறுத்திப் பேசினார். மேலும் ஓணம் பண்டிகை, விநாயகர் சதுர்த்தி, தீபாவளி போன்ற விழாக்கள் நம் அறிவுக்கு ஏற்றுக் கொள்ளாத கதைகளைக் கொண்ட விழாக்கள் எனவும் உரையாற்றினார்.

இறுதியாக உரை நிகழ்த்திய கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசம்போது, இடஒதுக்கீடு மசோதாவில் தந்தை பெரியாரின் போராட்டத்திற்குப் பின்தான் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது எனவும், அதன் மூலம் தான் இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு கிடைத்த வரலாற்றையும், செப்டம்பர் 11-ன் முக்கியத்துவத்தைப் பற்றியும் உரையாற்றினார். தந்தை பெரியார் 1938 இல் செப்டம்பர் 11 ஆம் நாள் தான் தமிழ்நாடு தமிழருக்கே என்கின்ற முழக்கத்தை முன்னெடுத்தார் என்பதையும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த இம்மானுவேல் சேகரன், உயர்சாதி வகுப்பினராகக் கருதிக் கொள்ளும் சமூகத்தைச் சேர்ந்தவரான முத்துராமலிங்கத்திடம் கை நீட்டிப் பேசினார் என்ற காரணத்திற்காக படுகொலை செய்யப்பட்ட நாள் செப்டம்பர் 11 என்பதையும்நினைவு கூர்ந்தார். மேலும் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்ட நாள் செப்டம்பர் 11 என்பதையும், அதிலிருந்து பயங்கரவாதம் என்ற சொல் உருவானது என்பது பற்றியும் உரை நிகழ்த்தினார்.

இறுதியில் தோழர் நிவாசு நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை குருவரெட்டியூர் நகர கழகத் தோழர்களும், நாம் தமிழர் தோழர்களும் செய்திருந்தனர். விழாவில் கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் அசைவ உணவு வழங்கப் பட்டது. படிப்பகத்திற்கு கழகத் தலைவர் ‘குடிஅரசு’ தொகுப்புகளை வழங்கினார்.



குருவரெட்டியூரில் படிப்பகம் திறப்பு

**செய்தி: மா. நிவாசு**

### காவலாண்டியூரில் மக்கள் விழா

குருவரெட்டியூர் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு கழகப் பொறுப்பாளர்கள் அனைவரும் இரவு மேட்டூரில் தங்கி, அடுத்த நாள் செப்.11 அன்று காவலாண்டியூர் நிகழ்ச்சிகளில் பங்கேற்கத் தயாரானார்கள். குருவரெட்டியூர் பகுதி போலவே காவலாண்டியூரும் கழகத்தின் கோட்டையாகும். காவலாண்டியூரில் கழகத் தோழர்கள் பெரு முயற்சியால் கட்டப்பட்டுள்ள பெரியார் படிப்பகம், கழகக் குடும்பத்தைச் சேர்ந்த தோழி தி. நீலாவதி - இர.கண்ணன் வாழ்க்கைத் துணை விழா, கழக நூல்கள் வெளியீட்டு விழா ஆகிய மூன்று நிகழ்ச்சிகள் ஒரே மேடையில் எழுச்சியுடன் நடந்தன.

ஊர் எல்லையிலேயே கழகத் தோழர்கள் குடும்பத்துடன் திரண்டு நின்று, கழகப் பொறுப்பாளர்களை பேண்டு வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். நவீன வசதிகளுடன் எழிலுற அமைக்கப்பட்டிருந்த பெரியார் படிப்பகத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்து ‘குடிஅரசு’ தொகுப்புகளை வழங்கினார். படிப்பகத்துக்கு எதிரே பந்தலிட்டு அமைக்கப்பட்டிருந்த மேடையில் மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் பகுத்தறிவு இசையோடு நிகழ்ச்சிகள் தொடங்கின. கட்டிட அமைப்புக் குழுத் தலைவர் க.பொன்னுசாமி தலைமை தாங்கி, படிப்பகம் உருவாக உதவிய ஒத்துழைத்த ஊர்ப் பெருமக்களுக்கு நன்றி கூறினார். படிப்பகம் உருவாக நன்கொடை வழங்கியோர் உதவிகள் புரிந்தோருக்கு கழகத் தலைவர் ஆடை போர்த்திப் பாராட்டினார். படிப்பகத்துக்கு தனது நிலத்தை நன்கொடையாக வழங்கிய பெரியவர் ப. இரங்கசாமிக்கு கழகத் தலைவர் ஆடை அணிவித்து பாராட்டு தெரிவித்தார். மாவட்ட தலைவர் கி. முல்லைவேந்தன், செயலாளர் கு. சூரியகுமார், காவை கிளைக் கழகத் தலைவர் சே. இராசேந்திரன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் க.ஈசுவரன் வரவேற்புரை யாற்றினார்.

பெரியார் திராவிடர் கழக சார்பில் ‘பெண்ணுரிமை சட்டங்களும் - பார்ப்பனர்களும்’ என்ற தலைப்பில் ‘குடிஅரசு’ இதழ் கட்டுரைகளும், ‘காந்தி படுகொலையில் பார்ப்பனப் பின்னணி’ என்ற தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, சத்திய மங்கலத்தில் ஆற்றிய உரையும் தொகுக்கப்பட்டு, கழக சார்பில் நூல்களாக வெளி வந்துள்ளன. நூல்களை கண்ணாமூச்சி ஊராட்சி மன்றத் தலைவர் க.சொ. பழனிச்சாமி, அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த

8 ஆம் பக்கம்

# விழுப்புரம் மாவட்டத்தில் சாதி தீண்டாமைக்கு எதிராக 2 நாள் பரப்புரைப் பயணம்

விழுப்புரம் மாவட்ட கழக சார்பில் சாதி தீண்டாமைக்கு எதிரான இரண்டு நாள் பரப்புரை பிரச்சாரப் பயணம் நடைபெற்றது. முதல் நாள் 13.8.2011 சனிக்கிழமை காலை 11 மணியளவில் சௌந்தரவள்ளி பாளையத்தில் துவங்கியது. முதல் நிகழ்ச்சியில் மல்லாபுரத்தைச் சார்ந்த ராஜா என்பவர் கழகத்தில் இணைந்தார்.

இவ்வூரை சார்ந்த விவசாய விடுதலை முன்னணி தோழர் இராமலிங்கம், தோழர்களுக்கு தேனீர் ஏற்பாடு செய்தார். மதியம் 1 மணியளவில் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் பரப்புரை நடை பெற்றது. மதிய உணவுக்குப் பின் மாலை 4 மணியளவில் அரம்பட்டு பேருந்து நிறுத்தம் அருகில் துவங்கிய பிரச்சாரம், மாலை 6 மணிக்கு பொய் குணத்தில் நிறைவடைந்தது. முடிவில் விடுதலை சிறுத்தை கட்சித் தோழர்கள் தேனீர் வழங்கினர். பொய்குணத்தைச் சார்ந்த கார்த்திக் எனும் புதிய தோழர் கழகத்தில் இணைந்தார். முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு செ.நாவாப்பிள்ளை முன்னிலை வகிக்க, மாவட்ட பொருப்பாளர் ச.க. இளையராசா தலைமை வகித்தார்.

இரண்டாம் நாள் 14.8.2011 ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் புதுப்பட்டில் பரப்புரை தொடங்கியது. நிகழ்ச்சி முடிவில் பெயர் சொல்ல விரும்பாத தோழர் ஒருவர் தேனீர் செலவுக்கு ரூ.200 கொடுத்தார். அதனை அடுத்து 12 மணியளவில் புதூரில் பரப்புரை நடைபெற்றது. மதிய உணவுக்குப் பின் மதியம் 4 மணியளவில் வடசிறுவள்ளூரில் துவங்கிய பிரச்சாரப் பயணம் மாலை 6 மணியளவில் மூங்கில் துறைப்பட்டில் நிறைவடைந்தது. கம்யூனிஸ்ட் தோழர் நடராஜன் தேனீர் வழங்கினார். மூங்கில்துறைபட்டைச் சேர்ந்த தோழர் பன்னீர் செல்வம் கழகத்தில் இணைந்தார். இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு செ. பிரபு முன்னிலை வகிக்க, ச. பெரியார் வெங்கட் தலைமை வகித்தார்.




இரண்டு நாள் நிகழ்ச்சிகளிலும் சென்னை தோழர் நாத்திகன், சாதி ஒழிப்புப் பாடல்கள் பாடினார். காவை இளவரசன், ‘மந்திரமல்ல தந்திரமே’ என்ற அறிவியல் விளக்க நிகழ்ச்சியை நடத்தி சிறப்புரை யாற்றினார்.. பொது மக்களிடையே துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. மா. தலித்குமார் நன்றி கூறினார். க. இராமர், சு. தினகரன், பெ. கோவிந்தன், ஊமைத் துரை, கோ. சக்ரடீசா உள்பட ஏராளமான தோழர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல்லில் மனித சங்கிலி



26.8.2011 அன்று மூன்று தமிழர் உயிர் காப்பு குழு சார்பாக திண்டுக்கல் பெரியார் சிலை அருகே மனித சங்கிலி போராட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியை கழக மாவட்டத் தலைவர் துரை. சம்பத் ஒருங்கிணைத்தார். நிகழ்ச்சியில் தி. அழகிரிசாமி (தமிழர் தேசிய இயக்கம்), இரா. பரசுராமன் (ம.தி.மு.க.), பேட்ரிக் சகாயநாத் (சி.பி.ஐ.), க. இராமகிருட்டிணன் (பா.ம.க.), மு. வில்லவன் கோதை (விடுதலை சிறுத்தைகள்), மு.ப. கணேசன் (வழக்குரைஞர்கள் சங்கம்), இரா. மணிமாறன் (சமத்துவ மக்கள் கட்சி), க. பெரியார் மணி (தமிழ் புலிகள்), க. பாண்டியன் (புரட்சிகர இளைஞர் முன்னணி), ஜெய்கணேஷ் (தேவேந்திரகுல இளைஞர் பேரவை), வழக்கறிஞர் கணேஷ் (நாம் தமிழர்), தோழர் சந்திரா (சக்தி கலைக்குழு), பெரியார் நம்பி ஆகியோர் உரையாற்றினர். 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## வாழ்நாள் சிறைவாசிகள் விடுதலை கோரி ஆர்ப்பாட்டம்




7 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் வாடும் வாழ்நாள் சிறைவாசிகளை அண்ணா பிறந்த நாள் நினைவாக விடுதலை செய்யக் கோரி, தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் செப்டம்பர் 12 ஆம் தேதி கோவை தமிழ்நாடு உணவகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

அரசு கலைக் கல்லூரி மாணவர் விக்னேசு தலைமையில், மாணவர்கள் பிரபாகரன், பிரதாப், சிலம்பரசன், சீனிவாசன் முன்னிலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், மாணவர் கழக அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம், மாவட்ட அமைப்பாளர் நேருதாஸ் உரையாற்றினர். நாகராசு நன்றி கூறினார்.

### *1976 இல் தணிக்கைக்குள்ளான கட்டுரை*

## “எங்க மகேசனைப் பாத்தீங்களா? அந்த மணல்மேடு புழுதிக்குள்ளே!”

*செவ்வாய் கிரகத்திலே ‘வைக்கிங்’ என்ற விண்வெளிக் கோள் இறங்கியதைத் தொடர்ந்து 1976 இல் ‘விடுதலை’யில் விடுதலை இராசேந்திரன் ‘ரா’ என்ற புனைப் பெயரில் எழுதிய கட்டுரை இது. அப்போது ‘அன்னக்கிளி’ திரைப்படம் திரைக்கு வந்து, இளையராஜாவின் ‘மச்சானைப் பார்த்தீங்களா’ பாடல் பிரபலமான நேரம். அந்த பாடல் வரிகளைப் போலவே இந்தக் கட்டுரைக்கும் தலைப்பிடப்பட்டு எழுதி, இக் கட்டுரை பார்ப்பன அதிகாரிகளால் கத்திரிக்கோல் போடப்பட்டதாகும்.*

“இறங்கிவிட்டது! இறங்கி விட்டது!! செவ்வாய் கிரகத்திலே வைக்கிங் இறங்கி விட்டது! செவ்வாய் கிரகத்தின் படங்கள் பூமிக்கு வந்து கொண்டிருக்கின்றன. அந்த வைக்கிங் காமரா அனுப்பிய புகைப்படங்களிலே...

கங்கையை தலையில் சுமந்து களி நடனம் புரியும் எங்கள் சிவபெருமான் படம் விழுந்து விட்டதா?

சுடர் முகம் தூக்கி சூரனை அழித்த, சூலாயுதக் கடவுள் சுப்ரமணியன் ‘போஸ்’ கிடைத்ததா?

தங்கத் தாமரையில் வீற்றிருக்கும் எங்கள் குலச் செல்வி சரசுவதி படம் வந்து விட்டதா?

வள்ளியோடு பள்ளி கொண்டு துள்ளி விளையாடும் எங்கள் சல்லாப முருகனுமா ‘கிளிக்’ ஆகவில்லை!

கூரான கற்கள் படிந்த புழுதிகளையும், மணல் மேடுகளையும் தான் ‘வைக்கிங்’ படம் பிடிக்க முடிந்ததா?

அய்யோ, செவ்வாய் கிரகத்தில் எங்கள் கடவுள்கள் ஒன்றுகூட இல்லையா? அவர்களெல்லாம் போன இடம் எங்கே? வாழும் இடம் எங்கே?

வைக்கிங்கே, வைக்கிங்கே! அமெரிக்கா அனுப்பிய வைக்கிங்கே!! எங்கேயாவது, எப்படியாவது எங்கள் கடவுள்களை தேடிப் பிடித்து, அவர்களின் ‘முகவெட்டை’ இங்கே பூமிக்கு அனுப்பி, இங்கே துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கும் நாத்திக பிண்டங்களின் நாவை அடக்க மாட்டாயா?

‘வாயைப் பிளந்து வைகுண்டத்தைக் காட்டிய’வனின் காலடி பிடித்துக் கிடக்கும் காருண்ய சீடர்கள் நாங்கள்! கடைசியில் எங்கள் வாயிலும் வைக்கிங்கே, நீ எடுத்து வரும் மண்தான் விழப் போகிறதா? அந்தோ, வைக்கிங்கே! அய்யகோ விஞ்ஞானமே! அழுது புலம்புகிறோம்; எங்களை ஆற்றுவாரில்லையா? தேற்றுவாரில்லையா?

பூமியை ஆட்டி வைக்கும் எங்கள் புண்ணிய தெய்வங்களே, நீங்கள் உண்மையிலேயே எங்கேதான் இருக்கிறீர்கள்? சொல்லித் தொலையுங்களேன்! அங்கேயாவது அமெரிக்காவைப் பிடித்து ஒரு விண்வெளிக் கோளை அனுப்பி வைக்க முயற்சி செய்கிறோம்.”

**– “ரா” ‘விடுதலை’ 22.7.1976**

(அண்மையில் ‘விடுதலை’ நாளேடு எப்படியோ தவறிப்போய் இந்தக் கட்டுரையை வெளியிட்டுள்ளது)


**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:

ஆசிரியர்,

29, பத்திரிகையாளர் குடியிருப்பு,

திருவள்ளுவர் நகர்,

திருவான்மியூர், சென்னை-41.

✆ 99416 13535

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# நீதிமன்றம் அபூர்வமாக அப்பாவிகளையும் தூக்கில் போடுகிறது

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நான் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், ஒரு கருத்தை கூற விரும்புகிறேன். நேரில் பார்த்த சாட்சியங்கள் சொல்லிக் கொடுத்து, தயார் செய்து பெறப்படும் சாட்சியங்களாகும். கொலை செய்யப்பட்டவர்களின் ரத்த உறவுகள், சாட்சிய மளிக்கும்போது, உண்மை நிலையை அப்படியே கூறாமல், மிகைப் படுத்தித்தான் கூறுவார்கள். இவை எல்லாவற்றையும்விட, மரண தண்டனைக்கு உள்ளாவோர் 90 சதவீதத்துக்கும் அதிகமாக, சமூகத்தின் கீழ் மட்டத்திலிருந்து வருவோர்தான். நீங்களும், நானும் கொலை செய்ய மாட்டோம்; அத்தகைய வாழ்க்கைச் சூழலில் நாம் வளர்க்கப்பட்டுள்ளோம். குடிசைப் பகுதிகளிலும், வீதிகளிலும் வாழும் சமூகத்தின் குழந்தைகளுக்கு, படித்த சூழலில் வாழும் குழந்தைகளைப் போல, உயிரின், வாழ்வின் மதிப்பை எல்லாம் உணர முடியாது. ஆன்மிகக் கண்ணோட்டத்திலும், அவர்களால் சிந்திக்க இயலாது. எனவேதான், எந்த தார்மீகத்துக்கும் கட்டுப்படாமல், அவர்கள் வன்முறையை கையில் எடுக்கிறார்கள்.

திகார் சிறையில் - சீர்திருத்தங்களை செய்த சிறை அதிகாரி கிரண்பேடி எழுதிய நூலைப் படித்த பிறகு ஒவ்வொரு குற்றவாளியையும் திருத்திவிட முடியும் என்பதில் எனக்கு முழு உடன்பாடு ஏற்பட்டது. ஆனால், அரசாங்கமானாலும், மக்களானாலும், இந்த மனித நேயப் பிரச்சினையில் கவனம் செலுத்தாதது வருத்தத்திற்குரியதாகும். அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் குறுக்கு வழியில் அதிரடியாக குற்றவாளிகளை ஒழித்துக் கட்டி, ஒழித்துவிட்ட மகிழ்ச்சியில் இன்பம் காண்பதுதான்.

எனது நீண்டகால அனுபவங்களின் அடிப்படையில், உங்களிடம் எச்சரிக்கையாக, ஒரு கருத்தை முன் வைக்கிறேன். ஒரு குற்றவாளியை நீதிமன்றம் அப்பாவியாகக் கருதக் கூடிய வாய்ப்புகள் நிச்சயம் உண்டு. அதே நேரத்தில், சில நேரங்களில் மிகவும் அரிதாக எப்போதாவது ஒருமுறை அப்பாவிகள்கூட குற்றவாளியாக நிறுவப்படுவதும் நிகழ்ந்து விடுகிறது. உணர்ச்சிப்பூர்வமான வழக்குகள் என்று வரும்போது, அதன்விளைவுகளால் இப்படி எல்லாம் நிகழ்ந்து விடுகின்றன. வரலாற்றிலே 2000 ஆண்டுகளுக்கு முன் ஜெருசலம் நகரில் நிகழ்ந்த சம்பவத்தை நினைவுபடுத்துகிறேன். குற்றம்சாட்டப்பட்டவர் நிரபராதி என்று தெரிந்தும், நீதிபதி, அவருக்கு மரண தண்டனை விதித்தார். காரணம், அங்கே கூடியிருந்த கூட்டம், குற்றம்சாட்டப்பட்டவர் மீது பகையும், வெறுப்பும் கொண்டிருந்தது! அந்த நீதிபதியின் பெயரை நான் சொல்லத் தேவையில்லை. உங்களுக்கே தெரியும், அந்த நீதிபதி - பிலாத்தோஸ்! மரண தண்டனைக் குள்ளாக்கப்பட்ட கைதி - ஏசு.”

- இவ்வாறு கே.டி.தாமஸ் தனது கட்டுரையை முடித்துள்ளார்.

**குறிப்பு:** ✦ ஏசுவுக்கு எதிராக சதி செய்த யூதர்கள் கூட்டம், அவர் மீது மரணதண்டனையை உறுதி செய்து, அதை அறிவிப்பதற்கு அரச மதகுரு பிலாத்தூசை அழைத்து வந்தனர். அவரோ ஏசு நிரபராதி; விடுதலை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே மக்கள் கூட்டத்தைப் பார்த்து தீர்ப்புக் கேட்டார். ஆனால் சதிகாரர்களால் திட்டமிட்டு தூண்டிவிடப்பட்டிருந்த அக்கூட்டம், ‘கொலைசெய்’ ‘கொலைசெய்’ என்ற முழக்கமிட்டதால், வேறு வழியின்றி, ‘நீங்களே, முடிவு செய்யுங்கள்’ என்று கூறி வெளியேறிவிட்டார். குற்றமற்றவர் என்று நீதிபதிக்கு தெரிந்தும், எதிர்ப்பு உணர்வுகள் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக திட்டமிட்டு உருவாக்கப்பட்டநிலையில், நிரபராதியை தண்டிக்க வேண்டிய கட்டாயம் உருவாகிவிட்டது. நீதிபதி கே.டி.தாமஸ் தானும் இதுபோன்ற நிர்ப்பந்தத்துக்கு உள்ளானதாகவே சூசகமாக கூறுகிறார் என்றே கருத வேண்டியிருக்கிறது.

✦ நீதிபதி குறிப்பிடும் திருவாங்கூர் சமஸ்தானத்தில் 1940 இல் தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டதற்கு ஒரு பின்னணி உண்டு. திருவாங்கூர் மன்னர் ஆட்சியில் சர். சி.பி. இராமசாமி அய்யர் திவானாக இருந்தார். அந்த சமஸ்தானத்தில் ‘மனுதர்மம்’ ஏற்றுக் கொள்ளப்பட்டு, பார்ப்பான் எந்தக் குற்றம் செய்தாலும், மரண தண்டனை தரக்கூடாது என்ற நடைமுறை அமுலில் இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அனைத்துப் பிரிவினருக்கும் மரண தண்டனை விதிக்க வேண்டும் என்றும், கிரிமினல் குற்றங்களில் பாகுபாடு காட்டக் கூடாது என்றும் வலியுறுத்தினார்கள். திருவாங்கூரில் மன்னர் பதவிக்கு வருவதில் அவரது பரம்பரையினருக்கு இடையே நடந்த மோதலில் ஒரு பிரிவினர், ஒரு பார்ப்பனரை வைத்து, எதிரியைக் கொலை செய்வது வழக்கம். பார்ப்பனர் கொலை செய்தால், சமஸ்தானத்தில் தண்டனை கிடையாது என்பதற்காகவே கொலைக்கு பார்ப்பனரைத் தேர்ந்தெடுத்தனர். எனவே பிரிட்டிஷ் சட்டப்படி தண்டனை வழங்குவதில் அனைவரையும் சமமாகக் கருதிவிட்டால், பார்ப்பனர்கள் தண்டிக்கப்பட்டுவிடுவார்கள் என்பதால், பார்ப்பனக் குற்றவாளியைக் காப்பாற்றுவதற்காகவே தமது சமஸ்தானத்திலேயே மரண தண்டனை முற்றாக ஒழித்து, சர்.சி.பி. ராமசாமி அய்யர் அறிவித்தார்.

## ஆர். அலாவுதீன் – ஜெ. சரண்யா சாதி மத மறுப்பு மணவிழா

4.7.2011 திங்கள் காலை 11 மணியளவில் கழக ஆதரவாளரான சேலம் கேம்ப் பகுதியைச் சேர்ந்த ஆர். அலாவுதீனுக்கும், குமரன் நகர் பகுதியைச் சேர்ந்த ஜெ. சரண்யாவுக்கும் சாதி மத மறுப்புத் திருமணம் மேட்டூர் நகர பெரியார் படிப்பகத்தில் நகர தலைவர் அ. அண்ணாதுரை தலைமையிலும், குமரன் நகர் பகுதி அமைப்பாளர் பொன். தேவராசு, சேலம் கேம்ப் அருள்செல்வன் ஆகியோர் முன்னிலையிலும் நடந்தது. மணமக்கள் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழுக்கு வளர்ச்சி நிதியாக ரூ.1000 கழகத் தலைவரிடம் வழங்கினர். (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் - ஆர்)

## கழகப் பிரச்சாரக் கட்டமைப்பு நிதி வழங்கியோர்

| | | |
|---|---|---|
| 18.8.2011 ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் வந்த வரவு | ரூ. | 1,60,000 |
| கொளத்தூர் பிரபாகரன் – சங்கீதா இணையர் (குழந்தை அகிலன் பிறந்தது மகிழ்வாக) (கொளத்தூர் கூட்டத்தில்) | ரூ. | 1,000 |
| கொளத்தூர் இரா. நல்லத்தம்பி (தம்பி மருந்தகம், கொளத்தூர்) (கொளத்தூர் கூட்டத்தில்) (தமது மகன் கலைவாணன்–பிருந்தா மணவிழா மகிழ்வாக) | ரூ. | 10,000 |
| கே.கே. பழனிசாமி, தலைவர் ஊராட்சி மன்றம், கண்ணாமூச்சி | ரூ. | 5,000 |
| எஸ். சுந்தரராஜன், அ.தி.மு.க. பிரமுகர், செ.செ. காட்டுவளவு | ரூ. | 5,000 |
| டி. கோவிந்தன், செயலர், கூட்டுறவு வங்கி, கண்ணாமூச்சி | ரூ. | 2,000 |
| ரவிச்சந்திரன்–மகுடீஸ்வரி தம்பதியினர், ஒட்டன்சத்திரம் | ரூ. | 3,000 |
| பரமேசுவரன் தோட்டக்கலைத் துறை, உதவி வேளாண்மை அலுவலர், காவலாண்டியூர் | ரூ. | 1,000 |
| செல்வராசு, காவலாண்டியூர் | ரூ. | 1,000 |
| செங்கோடன், செட்டியூர் | ரூ. | 1,000 |
| வெங்காசலம், தே.மு.தி.க. பிரமுகர், கண்ணாமூச்சி | ரூ. | 1,000 |
| சேகர், ஏரிக்காடு, நஞ்சண்டாபுரம் | ரூ. | 1,000 |
| கார்த்திக், கவின்கேர் செயலர், நஞ்சண்டாபுரம் | ரூ. | 1,000 |
| வரதராஜன், எல்.ஐ.சி. ஏஜென்ட், செட்டியூர் | ரூ. | 1,000 |
| கிருஷ்ணன், வெங்கடேசுவரா பஸ் ஏஜென்ட், மாதேசுவரன் மலை | ரூ. | 1,000 |
| க. பொன்னுசாமி–ஈசுவரி, காவலாண்டியூர் | ரூ. | 2,000 |
| ஆறுமுகம், வனக் குத்தகைதாரர், மாதேசுவரன மலை | ரூ. | 1,000 |
| கோவிந்தன் காண்ட்ராக்டர், பூமனூர் | ரூ. | 1,000 |
| ஆக மொத்தம் | ரூ. | 1,98,000 |

(தொடரும்)

### தி. நீலாவதி – ர. கண்ணன் மணவிழா மகிழ்வாக...

காவலாண்டியூர் படிப்பகத் திறப்பு விழாவோடு இணைந்து நடந்த தி.நீலாவதி-ர.கண்ணன், மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது.

### ஆதவன் பிறந்த நாள் மகிழ்வாக...

கழகத் தோழர் சி.அருள்தாசு- அ.தனம் இவர்களின் பேரன் ஆ. ஆதவன், முதலாம் ஆண்டு பிறந்த நாள் மகிழ்வாக புரட்சிப் பெரியார் முழக்கம் வளர்ச்சி நிதியாக ரூ.500 வழங்கினார்.

### அமிர்தலிங்கம் – சாருமதி மணவிழா

புதுக்கோட்டை மாவட்டம் கைக் குறிச்சி பி.முருகன் - சுந்தரம்பாள் அவர்களின் மகனும், கழக ஆதரவாளருமான பொறியாளர் எம். அமிர்தலிங்கம் - டாக்டர் ஆர். சாருமதி (மாத்தூர் பி.இராமலிங்கம் - பாக்கியம் மகள்) மண விழா 9.9.2011 பகல் 11 மணியளவில் திருச்சி துப்பாக்கி தொழிற்சாலை ஜெ.எஸ்.சி. கலையரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் சிறப்புடன் நடந்தது.

மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.4000 நன்கொடை வழங்கப்பட்டது.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எஸ். சுந்தர்ராசன், தேவர் எனும் தேவராசன், படிப்பக நில நன்கொடையாளர் அரங்கசாமி ஆகியோர் பெற்றுக் கொண்டனர். படிப்பகத் திறப்பு- மணமக்கள் வாழ்த்து - நூல் வெளியீட்டு நிகழ்வுகளை இணைத்து, கழக வழக்கறிஞர் இளங்கோவன், பொதுச் செயலாளர்கள் கோவை கு. இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து 12 மணியளவில் தி. நீலாவதி-இர. கண்ணன் வாழ்க்கை ஒப்பந்தத்தை, கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் நடத்தி வைத்து உரையாற்றினார்.


நிகழ்வின் இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். கழகக் கட்டமைப்பு வளர்ச்சி நிதியை கழகத் தலைவரிடம் தோழர்கள், பொது மக்கள் வழங்கினர். காவலாண்டியூர் மகளிரணியினர் சார்பாக கழகத் தலைவர் சுற்றுப் பயண செலவுகளுக்காக மாதந்தோறும் ரூ.2000 வழங்குவதென முடிவெடுத்து, முதல் தவணையை கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினர். கிளைக் கழகச் செயலாளர் க. பழனிச்சாமி நன்றி கூறினார். தலைமைக் கழகப் பேச்சாளர் காவை. இளவரசன் அனைத்து நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கினார். அனைவருக்கும் கழக சார்பில் புலால் உணவு வழங்கப்பட்டது. கட்சிகளைக் கடந்த மக்கள் விழாவாக நிகழ்ச்சி நடந்தது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

**– நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 16th September 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | செப். 22, 2011 | புரட்சி 10 | முழக்கம் 36 | விலை: ரூ.2.50


## 3 தமிழர்களை தூக்கிலிடத் துடிக்கும் காங்கிரஸ் ஆட்சியே!

# சோனியா கருணை காட்டச் சொன்னது நாடகமா?

## பரப்புரைப் பயணத் தொடக்கக் கூட்டத்தில் வைகோ கேள்வி



***மூன்று தமிழர் தொடர்ந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் விசாரிக்கக் கூடாது என்ற வழக்கில் மத்திய அரசு என்ன பதில் கூறப் போகிறது என்று சென்னை கழகக் கூட்டத்தில் வைகோ கேட்டார்.***

மரண தண்டனைக்கு எதிராகவும், மூன்று தமிழர் உயிர் காக்கவும் தமிழகம் முழுதும் மக்களைச் சந்திக்கும் பயணத்தின் தொடக்க விழா சென்னை இராயப்பேட்டை பத்ரிநாராயணன் நினைவு பெரியார் படிப்பகம் அருகே 20.9.2011 அன்று செங்கொடி நினைவரங்கில் எழுச்சியுடன் நடந்தது.

கழகத் தோழர் அருள்தாசு, புத்தர் கலைக் குழுவினர் கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து இரவு 8 மணியளவில் பொதுக் கூட்டம் தொடங்கியது.

கழகத் தோழர் அன்பு தனசேகர் வரவேற்புரை யாற்ற, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பயணத்தின் நோக்கத்தை விளக்கினார். பெரியார் திராவிடர் கழகம் இந்தப் பயணத்தை ஒழுங்கு செய்தாலும், இதை பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் பயணமாகக் கருதாமல், மரண தண்டனைக்கு எதிராக தமிழ்நாட்டில் களமிறங்கி நிற்கும் அத்தனை இயக்கங்கள், பல்வேறு அமைப்புகள், பங்கேற்பு பயணமாகவே கருது கிறோம். இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலே கூட சொல்லலாம். மரண தண்டனைக்கு எதிராக இத்தகைய எழுச்சியுடன் மக்கள் இயக்கங்கள் வேறு எங்கும் நிகழ்ந்ததில்லை. தமிழகம் தான் இதில் முன் னோடியாக வழிகாட்டி வருகிறது. இந்தியாவிலே சட்டமன்றத் தீர்மானத்தின் வழியாக தூக்குத் தண்டனையை மரண தண்டனையாக மாற்றக் கோரியும் - இது தமிழ்நாட்டு மக்கள் எழுச்சியின் பிரதிபலிப்பு என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி தமிழக சட்டமன்றம், இந்தியாவுக்கே வழிகாட்டி யிருக்கிறது. அதேபோல், அணுமின்சாரத்தின் ஆபத்துகளுக்கு எதிராக போராடும் மக்களின் உணர்வுகளை ஏற்று மத்திய அரசின் விளக்கத்தைக் கேட்டிருப்பதும் இந்தியாவிலே தமிழ்நாடு அரசுதான். இந்த நிலையில் மூவரின் தூக்குத் தண்டனைக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை தமிழ்நாட்டின் உயர்நீதிமன்றமே விசாரிக்கக் கூடாது என்று காங்கிரசார் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் தனித் துவத்தில் இந்தியா இணைந்து நிற்க முடியாது என்று காங்கிரசாரே முடிவு செய்துவிட்டால், தமிழ்நாடு தனித்துவமாக தனது இறையாண்மையை தாமே நிறுவிக் கொள்ள வேண்டியதுதான் என்று குறிப் பிட்டார்.

### வழக்கறிஞர் பாண்டிமா தேவி

தொடர்ந்து வழக்கறிஞர் பாண்டிமாதேவி பேசுகையில் - ராஜீவ் கொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணையம், வர்மா ஆணையங்கள், இந்தக் கொலையின் பின்னணியில் இருந்த சந்திராசாமி, சுப்ரமணியசாமி போன்ற வர்களை விசாரிக்க வேண்டும் என்று கூறிய நிலையில் அது பற்றி எல்லாம் ‘கள்ள மவுனம்’ சாதிக்கும் காங்கிரசார், இந்த மூன்று இளைஞர்களும் 20 ஆண்டுகால சிறைக் கொடுமைகளை அனுபவித்த பிறகும், இந்த 3 உயிர்களையும் தங்களது அரசியல் விளையாட்டுக்குப் பயன்படுத்தத் துடிப்பது என்ன நியாயம் என்று கேட்டார். தமிழ்நாட்டில் இப்படி தமிழர்களுக்கு எதிராக வெளிப்படையாக பேசும் காங்கிரசார், பஞ்சாபில், இதுபோல, பஞ்சாபியர் களுக்கு எதிராகப் பேசியிருந்தால், வீதியில் நடமாட முடியுமா என்ற கேள்வியை எழுப்பிய அவர், அங்கே காலிஸ்தான் தீவிரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்ட பேராசிரியர் பில்லாவுக்கு, மரண தண்டனை விதிக்கக் கூடாது என்று அம்மாநில முதல்வர் மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சித் தலைவர் சுரேந்தர் சிங் போன்றவர்கள்கூட குரல் கொடுப்பதை சுட்டிக்காட்டினார். 19 கருணை மனுக்களை ஏற்று தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றிய குடியரசுத் தலைவர் பிரதிபாபட்டீல், திடீரென்று, ஒரு நாள் - 3 தமிழர் களின் கருணை மனுக்களை நிராகரித்தார் என்றால், என்ன காரணம்? மத்திய அரசு, அப்படி அவரை நிர்ப்பந்திக்கிறது; அழுத்தம் தருகிறது. அதற்கு, குடியரசுத் தலைவரும் துணை போகிறார். ‘கருணை மனு’ என்பதுகூட ஏதோ குடியரசுத் தலைவரின்

2 ஆம் பக்கம்

### பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்கும் அனைத்துக் கட்சித் தலைவர்கள்

தூக்குத் தண்டனைக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் பரப்புரைத் தொடர் கூட்டங்களில் தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இரா. நல்லகண்ணு (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), தொல். திருமாவளவன் (விடுதலை சிறுத்தைகள்), சி. மகேந்திரன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), தமிழருவி மணியன், தி.வேல்முருகன் (பா.ம.க.), இரா. அதியமான் (ஆதித் தமிழர் பேரவை), உ. தனியரசு (சட்டமன்ற உறுப்பினா - கொங்கு தமிழ் இளைஞர் பேரவை), ஜவஹிருல்லா (சட்டமன்ற உறுப்பினர் - மனிதநேய மக்கள் கட்சி), தியாகு (தமிழ்த் தேச விடுதலை இயக்கம்) ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

## கேட்ட — படித்த கருத்துகளை ஞறரிடம் பரப்புவோம்



*இயற்கை ஒத்துழைக்காத காரணத்தால் இந்தப் பயணத்தில் மாற்றங்களை செய்ய வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட் டுள்ளோம். பரப்புரைப் பயணக் கூட்டங்களை தொடர் மழை காரணமாக தொடர் கூட்டங்களாக அரங்கு கூட்டங்களாக மாற்றியிருக்கிறோம். காலையிலிருந்து நாள் முழுதும் நடத்தவிருந்த பரப்புரைப் பயணங்கள் மழை காரணமாக நிறுத்தப்பட்டு, மாலை நேர அரங்கு கூட்டங்களாக நாள்தோறும் மாற்றியமைக்க நேரிட்டது. இது எங்களுக்கு வருத்தம்தான் என்றாலும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக சில நூல்களையும் மக்களிடம் கொண்டு செல்லவிருக்கிறோம்.*

*1) தூக்குத் தண்டனை ஒழிப்போம். 2) ஈழப் போரில் இந்தியத் துரோகம் (விடுதலைப் புலிகள் மீதான அவதூறுகளுக்கு ஒரு மறுப்பு) 3) ராஜீவ் கொலையில் மறைக்கப்படும் உண்மைகள் 4) அரசியல் தரகர் சுப்பிரமணியசாமி - ஓர் ஆய்வு.*

*- என்ற நூல்களையும் மக்களிடம் கொண்டு போகிறோம். இந்த நூல்களைப் படியுங்கள். அதில் உள்ள கருத்துகளைப் பரப்புங்கள். நாம் ஏற்கனவே பேசிவரும் கருத்துகளுக்கு இது வலிமை சேர்க்கும். நாம் பேசி வரும் கருத்துகளை மேலும் உரமேற்றுவோம். இந்தக் கருத்துகள் பரவும்போது, அது மக்களிடையே பவுதீக சக்தியாக மாறி, எழுச்சியை உருவாக்க முடியும். மாநில அரசையும் மேலும் வலியுறுத்த முடியும். இங்கே வைகோ பேச இருக்கிற கருத்துகளையும் நீங்கள் மற்றவர்களிடம் கொண்டு செல்லுங்கள். கேட்கிற செய்திகளைப் பரப்புவதே ஒரு இயக்கம் தான்; இதை நாம் அனைவரும் செய்வோம்!*

**- சென்னைக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி**

# மூன்று உயிர்களும் தமிழர்களின் இறையாண்மை

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கருணை உணர்வைச் சார்ந்தது அல்ல; அது குற்றவியல் நீதியமைப்பின் ஒரு மய்யம் என்று மகராட்டிய அரசு வழக்கறிஞராகவும் இந்திய அரசு வழக்கறிஞராகவும் இருந்த அந்தி அர்ஜூனா கூறுகிறார். குடியரசுத் தலைவர் முடிவில் தலையிட உச்சநீதிமன்றத்துக்கு உரிமை உண்டு என்கிறார்.

நீதிபதிகளும் தவறு செய்யக் கூடியவர்கள்தான். அவர்களின் விருப்பு வெறுப்புகள் தீர்ப்புகளில் வெளிப்படவே செய்யும். கொல்லப்பட்டவர்கள் பிரபலமானவர்களாக இருந்துவிட்டால், அரிதினும் அரிதாக வழக்காக நீதிபதிகள் முடிவு செய்து தூக்கில் போட்டுவிடுகிறார்கள் என்று உச்சநீதிமன்ற நீதிபதி கே.டி.தாமஸ் கூறுகிறார். மிகவும் வளர்ச்சி அடைந்த அமெரிக்காவிலேகூட மரணதண்டனை நிறை வேற்றப்பட வேண்டிய நிலையில், அவர்கள் அப்பாவிகள் என்று கண்டறியப்பட்டு, 138 பேர், மரணப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக் கிறார்கள். கடந்த 2 ஆண்டுகளில் இதுபோல், மரணத்தின் பிடியிலிருந்து தண்டனை வழங்கப் பட்டு, கடைசியில் காப்பாற்றப்பட்டவர்கள் 4 பேர். அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளிலேயே இந்த நிலை என்றால், இந்தியா போன்ற வளரும் நாடுகளின் நிலை எவ்வளவு மோசமாக இருக்கும் என்பதை கருதிப் பாருங்கள். இங்கே தூக்கிலிடப்படுவது யார்? ஏழைகள், வறியவர்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் தானே! தலைவர்கள், அரசியல்வாதிகள், வசதி படைத்தவர்கள் தூக்கிலிடப்படுகிறார்களா? பஞ்சாப் மாநிலத்திலே ஒரு கொலைக் குற்றத்தில் தொடர்புடைய 2 பேருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஒருவர் மேல் முறையீட்டுக்குப் போய் நிரபராதி என்று விடுதலைப் பெற்று விடுகிறார். மற்றொருவருக்கோ இந்த செய்திகூட தெரியாமல் - அதே குற்றத்துக்காக தூக்கிலிடப்பட்டு விடுகிறார் - என்று கூறிய வழக்கறிஞர் பாண்டிமாதேவி - இது போன்ற மரணதண்டனை எதிர்ப்புப் பரப்புரைப் பயணங்கள் மனித உரிமைக்கான இயக்கத்தை அடுத்தக் கட்டத்துக்கு நகர்த்தக் கூடியவையாகும் என்று கூறி, பயணத்தை வாழ்த்தி, உரையை நிறைவு செய்தார்.

### ‘கீற்று’ இரமேஷ்

‘கீற்று’ இணையதளக் குழுவைச் சார்ந்த இரமேஷ் - “1965 இல் மொழிப் போரில் திரண்ட மக்கள் எழுச்சி, இப்போது உருவாகியிருக்கிறது. இரண்டு எழுச்சிகளையுமே திணித்தவர்கள், காங்கிரசார்தான்” என்றார். ராஜீவ் காந்தியையே கொலை செய்தவர் களை மன்னிக்கலாமா என்ற காங்கிரசாரின் பிரச்சாரத்தை கேள்விக்குள்ளாக்கிய அவர், ‘ராஜீவ் அப்படி என்ன புனிதரா? இந்தியாவை வல்லரசாக மாற்ற விரும்பியவர் என்றால், ராணுவத்துக்கு பீரங்கி வாங்கியதில் ஊழல் செய்யலாமா? தனது தாயார் இந்திரா கொலையில் தாக்கர் விசாரணை ஆணையத்தால் விசாரிக்க வேண்டும் என்று குற்றம்சாட்டப்பட்ட ஆர்.கே.தவானைக் காப்பாற்றி, அவரை காங்கிரசின் செயலாளராக்கலாமா? பிற் படுத்தப்பட்டோருக்கான மண்டல் குழு பரிந் துரையை எதிர்த்து 3 மணி நேரம் நாடாளுமன்றத்தில் பேசியது யார்? ராஜீவ் காந்தி தானே? வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்ததும்; ஈழத்துக்கு ராணுவத்தை அனுப்பி 5000 தமிழர்களைக் கொன்று குவித்ததும் அவர் தானே? இந்தக் கேள்விகளை நாம் எழுப்பாமல் போனதால்தான் காங்கிரசார், இப்போது துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றார்.

இந்திரா கொலையிலேயே சோனியாவுக்கு தொடர்பு உண்டு என்று, சுப்பிரமணியசாமியும், ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்சனமும் கூறுவதற்கு, காங்கிரசாரின் பதில் என்ன? தமிழர்கள் எப்போதுமே அறவுணர்வோடு போராடுகிறார்கள். தங்களையே தீயிட்டு அழித்துக் கொண்டுதான், நீதி கேட்டு வருகிறார்கள். இந்த உணர்வுகளை மதிக்காமல், தொடர்ந்து நெருக்குதல் தந்தால், அவர்கள் ஆயுதம் தூக்கும் நிலைக்குத் தள்ளப்படு வார்கள். இதுதான் ஈழத்திலும் நடந்தது. இப்போது தன்னைத் தானே எரித்துக் கொண்டு, நீதிக்குப் போராடும் தமிழர்களின் உணர்வுகளை மறுத்து, 3 தமிழர்களுக்கும் தூக்குத் தண்டனை பெற்றுத் தர காங்கிரசார் துடித்தால், அது, எதிர்விளைவுகளுக்கே




கொண்டு செல்லும். அந்த நிலையை காங்கிரசார் உருவாக்கிவிடக் கூடாது என்றார்.

### வன்னி அரசு

விடுதலை சிறுத்தைகள் செய்தி தொடர்பாளர் வன்னி அரசு, 3 தமிழர்களின் உயிர்காப்புக்கு நீதி மன்றத்தின் வழியாக, முயற்சிகளை மேற்கொண்ட வைகோவுக்கு விடுதலை சிறுத்தைகள் சார்பாக பாராட்டு தெரிவித்தார். தமிழ்நாட்டில் திருநாவுக் கரசு என்ற ‘தலித்’தை சுட்டுக்கொன்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள தமிழின துரோகி இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கைது செய்ய முடியாது என்று கூறும் இந்திய அரசு, 3 தமிழர்களை தூக்கில் போட வேண்டும் என்று கூறுவது ஏன் என்ற கேள்வியை எழுப்பினார். இந்த 3 தமிழர்களின் உயிர் என்பது தமிழர்களின் இறை யாண்மையாகும். இவர்களைக் ‘காவு’ கொடுக்க காங்கிரசார் நினைத்தால் தமிழர்கள் இந்திய இறை யாண்மைக்கு காவு கொடுத்துவிட்டு தமிழ்நாட்டை மீட்டெடுக்கப் போராடுவார்கள் என்றார்.

### பேராசிரியர் தீரன்

நாம் தமிழர் கட்சி முன்னணித் தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் தீரன், தமது உரையில் - உலக முழுதும் நாகரிக சமூகங்கள் தூக்குத் தண்டனையை ஒழித்து வருவதையும், நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் போன்றவர்களே சி.ஏ. பாலன் வழக்கில் தலையிட்டு, தூக்குத் தண்டனையை நிறுத்தியதையும் சுட்டிக் காட்டினார். பஞ்சாப் முதல்வராக இருந்த பிரதாப்சிங் கெய்ரோன் சுடப்பட்ட வழக்கில் தூக்குத் தண்டனை பெற்ற தயான்சிங்கின், கருணை மனுவை குடியரசுத் தலைவர் தள்ளுபடி செய்தபோது பஞ்சாப் சட்ட மன்றத்தில் 16 ஆண்டு சிறைவாசத்துக்குப் பிறகு தூக்குத் தண்டனை தேவையில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஆயுள் தண்டனையாக நிறை வேற்றப்பட்ட முன் உதாரணத்தை சுட்டிக்காட் டினார். ‘தடா’ சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்ட வழக்கில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டால் அந்த சட்டம் காலாவதியான பிறகு தூக்குத் தண்டனை வழங்க முடியாது என்று ‘அகாலிதள’ கட்சித் தலைவர் லோங்கோவில் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பை எடுத்துக் காட்டினார்.

பேரறிவாளன் - ராஜீவைக் கொன்ற ‘பெல்ட் வெடிகுண்டுக்கு’ 9 வோல்ட் பேட்டரி வாங்கித் தந்தார் என்றும், அந்த பேட்டரிக்கு கடைக்காரர் ரசீது தந்தார் என்றும், அந்த ரசீதில், பேரறிவாளன், ஊர்ப் பெயர், முகவரி எல்லாம் எழுதப்பட் டிருந்தது என்றும், அந்த ரசீதை, பேரறிவாளன், தனது சட்டைப் பைக்குள்ளேயே இரண்டு மாத காலம் வைத்திருந்தார் என்றும் புலனாய்வுத் துறை உருவாக்கிய கதைகளை நம்ப முடியுமா? இது குற்றம் என்றால் ராஜீவ் காந்தி, பாதுகாப்பு வளையத்துக்குள் தனு நெருங்கிச் செல்வதற்கு, சிவராசன் தந்த 5 லட்சம் தேர்தல் நிதியை வாங்கிக் கொண்டு உதவிய காங்கிரஸ் கட்சித் தலைவர் மரகதம் சந்திரசேகர் குடும்பத் தினருக்கு என்ன தண்டனை தருவது? என்று கேட்டார்.

### வழக்கறிஞர் துரைசாமி

கழகத்தின் மூத்த வழக்கறிஞரும் ராஜீவ் கொலை வழக்கில் ‘தடா’ நீதிமன்றம், நேர்நின்று வாதாடிய வருமான வழக்கறிஞர் துரைசாமி, மூவரின் உயிர் காக்கும் வழக்கில் வைகோ மேற்கொண்ட முயற்சி களை பிரபல வழக்கறிஞர் ராம்ஜெத்மாலனியே பாராட்டியதைக் குறிப்பிட்டார். ராஜீவ் கொலையைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் தடா சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது திராவிடர் கழகம், தி.மு.க., ‘தடா’ ஒடுக்குமுறைக்கு உள்ளான காலத்தில், பிரபாகரன் பிறந்த நாளான நவம்பர் 26 இல் ‘தடா’வை எதிர்த்து அண்ணாசாலையிலிருந்து கண்டன ஊர்வலம் நடத்தி இதே பகுதியில் கண்டனக் கூட்டத்தை நடத்திய அதே இராயப்பேட்டை கழகச் செயல்வீரர்கள்தான். இப்போதும் இந்தக் கூட்டத் தையும் மூன்று தமிழர் உயிர்காக்கும் பரப்புரைப் பயணத்துக்காக நடத்துகிறார்கள் என்று கூட்டத்தில் பலத்த கரவொலிக்கிடையே தெரிவித்தார்.

“20 ஆண்டுகளுக்கு முன் ராஜீவ் கொலை வழக்கை ‘தடா’வின் கீழ் விசாரிக்கக்கூடாது என்று, உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க நான் டெல்லி சென்றபோது, வைகோவை சந்தித்தேன்; அப்போது கீழ் நீதிமன்றத்தில் நாம் நீதியை எதிர்பார்க்க முடியாது. உச்சநீதிமன்றம் வரும்போது, வழக்கை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார். அதையே இப்போது செய்து காட்டியுள்ளார்” என்றார்.

ராஜீவ் கொலை வழக்கில் 1400 சாட்சிகளில் ஒருவராக வைகோவை சேர்த்த சிறப்புப் புலனாய்வுக் குழு அவரை மய்யமாக வைத்துதான் இந்த வழக்குக்கான கதையையே உருவாக்கியது. டெல்லி அசோகா ஓட்டலிலே ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை, பிரபாகரன் மீது, மிரட்டி திணித்த போது வைகோவை சந்தித்த பிரபாகரனிடம் ‘ராஜீவ் எங்கள் முதுகில் குத்தி விட்டார்’ என்று கூறியதாக வந்த செய்தியை வைத்தே ராஜீவ் கொலைக்கான ‘உள் நோக்கத்தை’ உருவாக்க நினைத்தார்கள். அதற் காகவே ‘வைகோ’வை சாட்சியாக்கினார்கள். ஆனால் வைகோ, சி.பி.அய். வியூகத்தை, நீதிமன்றத் திலேயே தகர்த்து எறிந்தார். 3 நாட்கள் அவர் சாட்சி யமளித்தார். சி.பி.அய். நடத்திய இந்த முறை கேடுகளை வைகோ நூலாக வெளியிட வேண்டும்” என்று வழக்கறிஞர் துரைசாமி கேட்டுக் கொண்டார். ராஜீவ் கொலை வழக்கில் கொளத்தூர் மணியையும் சி.பி.அய். சேலத்தில் கைது செய்து, கைவிலங்கிட்டு சென்னை கொண்டு வந்து பிறகு அடுத்த நாள் வழக்கிலிருந்து விடுவித்ததை நினைவுகூர்ந்த வழக்கறிஞர் துரைசாமி, ராஜீவ் கொலையில் காங்கிரசார் செய்த சதி துரோகங்களை ஜெயின் ஆணையத்திலிருந்து எடுத்துக் காட்டினார்.

### கொளத்தூர் மணி

கழகத் தலைவர் கொளத்தூர்மணி தனது உரையில், “இந்த வழக்கை விசாரித்த சிறப்புப் புலனாய்வுக் குழுத் தலைவர் தூக்குத் தண்டனை வாங்கித் தர வேண்டும் என்று வழக்கு நடத்திய கார்த்திகேயன், இப்போது மரணதண்டனை வேண்டாம் என்கிறார். இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற ஆணையத்தின் தலைவராக இருந்து தூக்குத் தண்டனை வழங்கிய உச்சநீதிமன்ற நீதிபதி கே.டி. தாமஸ், தூக்குத் தண்டனை வேண்டாம் என்கிறார். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து குண்டுவெடிப்பில் காயமடைந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன், மரணதண்டனை வேண்டாம் என்கிறார். நீதிமன்றம் ஒரு வழக்கை சட்டம், சாட்சிகளின் அடிப்படையில் மட்டுமே பார்க்கிறது; தண்டனை வழங்குகிறது. குற்றத்துக்கும் தண்டனைக்குமிடையே சமூகம் இருக்கிறது. எனவே தீர்ப்பு பிழைபட வாய்ப்புகள் இருக்கும் என்பதால், மக்கள் பிரதிநிதிக்கு இறுதி முடிவு எடுக்கும் ஒரு வாய்ப்பு கருணை மனு என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது.


இப்போது பஞ்சாபில் தூக்குத் தண்டனையை எதிர்நோக்கி இருக்கும் பேராசிரியர் பில்லாவும், குற்றத்தில் நேரடியாக ஈடுபட்டவர் அல்ல. சதிக்கு உதவினார் என்பது குற்றச்சாட்டு. இவர் பிராங்க்பர்ட் விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு, இந்தியா கொண்டு வரப்பட்டு ‘தடா’வின் கீழ் விசாரிக்கப் பட்டவர். இதே நேரத்தில், இவரோடு இதே வழக்கில் கைது செய்யப்பட்ட மற்றொருவர் தயாசிங் லெபோரி. இவர் அமெரிக்காவில் கைது

4 ஆம் பக்கம்

# பெரியார் பிறந்த நாளில் பேரணி – ஆர்ப்பாட்டம்

சேலம் மேற்கு மாவட்டத்தில் செப்.17, 2011 - பெரியார் 133-வது பிறந்தநாள் விழா, இரு சக்கர வாகனப் பேரணியாகச் சென்று கொடியேற்று விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

மாவட்ட தலைவர் முல்லைவேந்தன் தலைமையில் 50-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களில் ஒரு குழுவும், மாவட்ட செயலாளர் சூரியகுமார் தலைமையில் 20-க்கும் மேற்பட்ட வாகனங்களில்



இரண்டாவது குழுவும், காவலாண்டியூர் ஈசுவரன் தலைமையில் 15-க்கும் மேற்பட்ட வாகனங்களில் மூன்றாவது குழுவும், சேலம் மேற்கு மாவட்டம் முழுவதும் சிறப்பாக கொடியேற்று விழாக்கள் நடைபெற்றன. மூன்று குழுக்களிலும் ஒலி பெருக்கி கட்டிய ஆட்டோக்கள் தனித்தனியாக ஏற்பாடு செய்யப்பட்டு, அய்யா பிறந்த நாள் பற்றியும், தூக்கு தண்டனை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதை பற்றியும் பிரச்சாரம் செய்யப்பட்டது.

மாவட்ட தலைவர் முல்லைவேந்தன் தலைமையில் புறப்பட்ட குழு முதலில் மேட்டூர் சமத்துவபுரம் அருகிலுள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு புறப்பட்டது. மல்லியருந்தத்தில் மாரிமுத்துவும், மேச்சேரியில் தமிழரசனும், அகரம் பகுதியில் மேச்சேரி சூரியும், நங்கவள்ளி கே.ஆர்.வி. ஸ்பின்னிங் மில் தொழிற் சங்கம் சார்பாக சிவக்குமார், நங்கவள்ளி பேருந்து நிலையத்தில் மாவட்ட இளைஞரணி செயலாளர் கிருட்டினன், வனவாசி பனங்காட்டில் செந்தில், குஞ்சானூர் கெம்பிளாஸ்ட் நிறுவனம் முன்பு முன்னாள் மாவட்ட செயலாளர் சக்திவேல், ராமன் நகர் பகுதியில் ஜம்பு, சாம்பள்ளி பகுதியில் முருகேசன், மேட்டூர் ஆர்.எஸ் பகுதியில் பகுதி செயலாளர் கண்ணன், தேசாய் நகரில் ரகு, என்.எஸ்.கே. நகரில் சுகுமார், ரயில் நிலையம் அருகில் நாகராசு, தங்கமாபுரி பட்டணத்தில் பிரபு, சேலம் கேம்ப் படிப்பகம் அருகில் சந்தோசு குமார், சேலம் கேம்ப் பேருந்து நிலையத்தில் குமரேசன், மேட்டூர் பழைய மார்க்கெட் பகுதியில் மாவட்ட தலைவர் முல்லைவேந்தன், காவேரி நகர் புதிய கிளையில் ரத்தினசாமி, மாதையர்குட்டையில் பழனிசாமி, கபிலன், பெரியார் தெருவில் குமார், புது குவாட்ரஸ் பகுதியில் ரவி, காவேரி நகர் பகுதியில் பழனி, சின்ன பார்க் பகுதியில் கோவிந்தராசு, பெரியார் நகர் பகுதியில் கண்ணன், வீரபாண்டிய கட்டபொம்மன் நகரில் நகர பொருளாளர் கதிரேசன், திலீபன் நகர் பகுதியில் மேட்டூர் நகர தலைவர் பாஸ்கர், பொய்கையில் முன்னாள் மாவட்ட தலைவர் மாந்தன், குமரன் நகரில் மோகன், மேட்டூர் சதுரங்கஉூரில் முன்னாள் மாவட்ட பொருளாளர் கோவிந்தன், மேட்டூர் பேருந்து நிலையத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஓவியர் குறட்பா, மேட்டூர் பெரியார் படிப்பகம் அருகில் மாவட்ட பொருளாளர் ஆசைத் தம்பி ஆகியோர் கழகக் கொடிகளை ஏற்றி வைத்தனர். மாலை 5.30 மணிக்கு மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை நன்றி கூற, வாகன பேரணி நிறைவுற்றது.

### மேட்டூர் காவேரி கிராஸ் பகுதியில் புதிய கிளை

மேட்டூர் காவேரி கிராஸ் பகுதியில் பெரியார் பிறந்த நாளில் கழகத்தின் புதிய கிளை துவக்கப்பட்டு கொடியேற்று விழா நடைபெற்றது. தோழர் ரத்தினசாமி கழகக் கொடியை ஏற்றி வைத்தார். மாவட்ட தலைவர் முல்லை வேந்தன் பெரியார் தொண்டர்களின் உழைப்பைப் பற்றியும், பெரியார் திராவிடர் கழகம் 'ஏன் தேவை' என்பது பற்றியும் உரையாற்றினார். ரத்தினசாமி முயற்சியால் தோழர்கள் மகேந்திரன், சுந்தரம், ஆறுமுகம், இராசா ஆகியோர் புதிய கிளையில் இணைந்துள்ளனர். முன்னதாக காவேரி கிராஸ் ஊர் எல்லையில் வாகனப் பேரணியை பறை முழக்கம், தாரை தப்படையுடன் மிகச் சிறப்பாக வரவேற்பு வழங்கப்பட்டது.

**செய்தி : முல்லை வேந்தன்.**

### சங்கம்பாளையம் சமத்துவபுரத்தில் பெரியார் பிறந்த நாள்

பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் 17.09.2011 காலை 10 மணிக்கு சாதி ஒழிப்புப் போராட்ட வீரர் பெரியவர் திருமூர்த்தி தலைமையில் பிறந்த நாள் விழா எழுச்சியுடன் நடைபெற்றது.

சாதி ஒழிப்புப் போராளிகள் ஆறுமுகம், காளிமுத்து மற்றும் கழகத்தின் கோட்டூர் ஆதி, ஆனைமலை முருகானந்தம், ருக்குமணி, ராம கிருட்டிணன், கோபால், தமிழரசன், பூங்குழலி, மக்கள் விடுதலை முன்னணி பொறுப்பாளர் மாரிமுத்து, கண்மணி, தம்பு ஆகியோரும், நாற்றங்கால் கல்வி அறக்கட்டளை விசுவநாதன், மணிமுத்து, கணேசன், இசைப்பிரியா, செங்கொடி, அங்கயற்கண்ணி மற்றும் ஏராளமான சமத்துவபுர பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### பரமக்குடி துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து திருச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்

திருச்சி மாவட்ட கழகத்தின் சார்பாக தந்தை




பெரியார் 133 ஆவது பிறந்த நாள் செப்டம்பர் 17 அன்று காலை 10 மணிக்கு திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலுள்ள பெரியார் சிலைக்கு கழகத்தின் சார்பாக மாலை அணிவிக்கப்பட்டன. பெரியார் சிந்தனைகள் அடங்கிய துண்டறிக்கைகள் நூற்றுக் கணக்கில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது. காலை 10.30 மணிக்கு திருச்சி இரயில் நிலையம் முன்பாக கழகத்தின் சார்பாக பெரம்பலூர் மாவட்டம் பேரளி கிராமத்தில் நிலவும் தீண்டாமை கொடுமைகளை உடனே அகற்ற தமிழக அரசை வலியுறுத்தியும் பரமக்குடி துப்பாக்கி சூட்டைக் கண்டித்தும், தியாகி இமானுவேல் சேகரன் நினைவு நாளை அரசே ஏற்று நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் ஆரோக்கியசாமி, ஜெகநாதன் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் தோழமை இயக்கங்களான புதிய தமிழகத்தின் மாவட்ட மாணவரணி செயலாளர் கோபி மற்றும் தோழர்கள், ஆதித் தமிழர் பேரவை சோழன், ஆதவன் ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர். இறுதியில் கழகத்தின் மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார் நன்றியுரையாற்றினார்.

த. புதியவன், நா. குணா, திருவரங்கம் அசோக், இளந்தாடி துரையரசன், மனோகரன், பொன்னுசாமி, ஆறுமுகம், கேசவன், கார்த்தி, பாரத், மணிகண்டன், இராமதாஸ், இரத்தினசாமி, பழனி, அன்பழகன், ஏங்கல்ஸ், மனோஜ், விஜி, வழக்கறிஞர் சுமன், தாமரைக்கண்ணன், சண்முக ஞானம் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

### தஞ்சை வடசேரியில் கழகக் கூட்டம்

31.8.2011 புதனன்று பேரறிவாளன், சாந்தன், முருகன் தூக்குத் தண்டனையை இரத்து செய்யக் கோரியும், சட்டசபை தீர்மானத்துக்கு நன்றி தெரிவித்தும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

க.சொ. சிவசுப்பிரமணியன் (ஒரத்தநாடு ஒன்றிய செயலாளர்) தலைமை தாங்கினார். கா.மா. கார்த்திகேயன் வரவேற்புரையாற்ற கு.பாரி, மதுக்கூர் ஒன்றிய செயலாளர் முன்னிலை வகித்தார். நாகை மாவட்ட கழகத் தலைவர் இர.ரசித்கான், பொடா. க. அழகுசுந்தரம் (மாநில இளைஞரணி செயலாளர், ம.தி.மு.க.), விடுதலை வேந்தன், ம.தி.மு.க. தலைமை நிலைமை பேச்சாளர் சிறப்புரையாற்றினர்.

பொடா க. அழகுசுந்தரம், 'மரண தண்டனை மடியட்டும், தூக்கு தண்டனை ஒழியட்டும்' என்ற தலைப்பில் ஆணித்தரமான வாதங்களை அழகாக வைத்தார். விடுதலைவேந்தன், "எம்.ஜி.ஆரின் பார்வையில் ஈழத் தமிழனும், தமிழீழமும்" என்ற தலைப்பில் விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர். என்னென்ன உதவிகள் செய்தார் என்பதை பட்டியலிட்டு மிகவும் உணர்ச்சிகரமாக சிறப்புரையாற்றினார்.

### வடசென்னையில் பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டம்

17.9.2011 அன்று மாலை 6 மணிக்கு பாடியில் தந்தை பெரியார் பிறந்த நாள் விழாப் பொதுக்



கூட்டம் நடைபெற்றது. சம்பூகன் கலைக் குழுவினரின் இன எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மு. கனகராஜன் தலைமை வகித்தார். அம்பத்தூர் பகுதி அமைப்பாளர் கருணா வரவேற்புரையாற்றினார். சொ. அன்பு, தே. ஜெயவேல், கே. திலீபன் முன்னிலை வகித்தனர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திரைப்பட இயக்குநர் மணிவண்ணன், கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கொளத்தூர் பகுதி அமைப்பாளர் அருள் நன்றியுரையாற்றினார். ஏராளமான பொது மக்கள் திரண்டிருந்தனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 99416 13535

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# தூக்கு அறுபடாவிட்டால், தமிழ்நாடு அறுபடும்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டார். அதனால் அந்நாட்டு அரசாங்கம் அவரை ஒப்படைக்கும்போது 'தடா' சட்டத்தின் கீழ் விசாரிக்கக்கூடாது என்று நிபந்தனை விதித்தது. அந்த நிபந்தனைக்கு எழுத்துப்பூர்வமாக இந்தியா ஒப்புதல் தந்து இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழக்கை விசாரித்தது. அதனால், தயாசிங் அதே குற்றத்தில் 'தடா'வின் கீழ் விசாரிக்கப்பட்டதால் விடுதலையாகிவிட்டார். பில்லா, தூக்குக் கயிற்றை எதிர்நோக்கியிருக்கிறார்.

இந்திய அரசு இப்பிரச்சினையில் தமிழர்களை எப்படிப் பார்க்கிறது என்பதற்கு இரண்டு செய்திகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மூன்று தமிழர்களின் கருணை மனு நிராகரிக்கப்பட்ட அதே நாளில், பாகிஸ்தானில் 16 பேர் கொலைக்குக் காரணமாக இருந்து தூக்குத் தண்டனைக்கு உள்ளாகி, அந்நாட்டு சிறையிலுள்ள சர் சப்தர்ஜிங் என்ற இந்தியருக்கு தூக்கு தண்டனை விதிக்கக் கூடாது என்று வெளி உறவுத் துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, நாடாளுமன்றத்தில் கூறுகிறார். இரண்டும் ஒரே நாளில் நடக்கிறது. மேற்கு வங்கத்துக்கும் பங்களாதேசத்துக்கும் இடையே தீஸ்த்தா நதி நீர் பிரச்சினையில் பங்களாதேசுடன் பிரதமர் மன்மோகன் சிங் செய்து கொள்ளும் ஒப்பந்தம், மேற்கு வங்கத்துக்கு எதிரானது என்பதால், மேற்கு வங்க மாநில முதல்வர் எதிர்க்கிறார். பிரதமரோடு பங்களாதேஷ் பயணத்தை முதல்வர் ரத்து செய்கிறார். இதற்கு இந்தியாவின் வெளியுறவு செயலாளர் இந்தியாவின் மாநில உரிமைகளுக்கு எதிராக மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காது. கூட்டாட்சி அமைப்பை மதித்து செயல்படும் என்று கூறுகிறார். அதே நாளில் மற்றொரு நிகழ்வும் நடக்கிறது. இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்டமன்றத் தீர்மானத்துக்கு எதிராக இலங்கையில் ஈழத்தில் சம்பூரில் ஒரு மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டு, 'பொருளாதாரத் தடை கோரிய' தமிழக சட்டமன்றத் தீர்மானத்துக்கு எதிராக கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிராக செயல்படுகிறது" என்று குறிபிட்டார்.

இந்த வழக்கிற்கு 'தடா' சட்டம் பொருந்தாது என்று தீர்ப்புக் கூறிய உச்சநீதிமன்றம் நியாயமாக 'தடா' வழக்கு என்பதால் வாய்ப்பு மறுக்கப்பட்ட உயர்நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பியிருந்தால் இப்போது தூக்குத் தண்டனைக்கு உள்ளானவர்கள் விடுதலை பெற்றிருக்க வாய்ப்பு இருந்திருக்கலாம். 26 பேருக்கு பூந்தமல்லி நீதிமன்றம் விதித்த தண்டனையிலிருந்து 19 பேரை உச்சநீதிமன்றம் காப்பாற்றியதுபோல் உயர்நீதிமன்றம் வேறு சிலரைக் காப்பாற்றியிருக்கக் கூடும். அதன் பிறகு உச்சநீதிமன்றம் வரும்போது முழுமையாக தூக்குத் தண்டனை இல்லாமல் போகும் வாய்ப்புகள் இருந்திருக்கலாம்.

அமெரிக்காவில் 13 மாநிலங்களில் தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டது. மைலே, ரோடேதீவ் மாநிலங்களில் நிரபராதிகளை மரண தண்டனைக் குள்ளாக்கியதைக் கண்டறிந்ததால் தூக்குத் தண்டனையை ரத்து செய்திருக்கின்றன.

1975 இல் அலகாபாத்தில் ஒரு வழக்கில் 3 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. ஒவ்வொரு வரும் தனித்தனியாக மேல் முறையீடு செய்தபோது ஜிகாசிங் கருணை மனு நிராகரிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார். காஷ்மீராசிங் தொடர்ந்த வழக்கு நீதிபதி பகவதி அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. மூன்றாவது நபர் ஹர்பான்சிங் தொடர்ந்த மேல்முறையீட்டில் - ஒரே வழக்கில் ஒருவருக்கு தூக்கு; மற்றவருக்கு ஆயுள் தண்டனை என்ற நிலையை சுட்டிக்காட்டி, உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. அப்போது சிறை அதிகாரிகளுக்கு உச்சநீதிமன்றம் ஒரு உத்தரவை அனுப்பியது. இப்படி தூக்குத் தண்டனையை நிறைவேற்றும்போது அதே வழக்கில் வேறு எவருக்காவது தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டிருக்கிறதா என்பதை, சிறை நிர்வாகம் உறுதி செய்து கொண்டு, இல்லை என்றால்தான் தூக்கிலிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அந்த உத்தரவில் கூறியது. இப்போது ராஜீவ் வழக்கில் கொலைக்கு திட்டமிட்டவர்களாக குற்றம்சாட்டப்பட்டவர்களை, விசாரிக்கவே இல்லை. செயல்படுத்தியவராக குற்றம்சாட்டப்பட்ட நளினிக்கு தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுவிட்டது. உதவியதாக குற்றம் சாட்டியவர்களுக்கு மட்டும் ஏன் தூக்குத் தண்டனை என்ற கேள்வியைத் தான் எழுப்புகிறோம். இந்தக் கருத்துக்களை எல்லாம் மக்களிடம் நாம் நேரடியாக சென்று அவர்களிடம் கூறவும், இதைக் கேட்ட நீங்கள் மற்றவர்களுக்கு இதை எடுத்துக் கூறி, விழிப்புணர்வையும் அதனூடாக ஒரு எழுச்சியையும் உருவாக்கவுமே இந்தப் பயணத்தைத் தொடங்கியுள்ளோம் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசினார்.

**வைகோ**

நிறைவுரையாற்றிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, ஒரு மணி நேரத்துக்கும் மேலாக எழுச்சியுரையாற்றினார். 3 தமிழர்களின் வழக்கை சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது யார்? எந்தப் பின்னணியில் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது? இதற்குப் பின்னால் மறைந்திருப்பது யார்? இந்த வழக்கை உச்சநீதிமன்றம் ஏற்று, மத்திய அரசையும் மாநில அரசையும் விளக்கம் கேட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத் துக்கு எவரும் எந்த நிர்ப்பந்தமும் செய்யவில்லை. அமைதியான சூழலிலேயே வழக்கு நடந்தது என்று நிச்சயமாக தமிழக அரசு சொல்லும்; அதுதான் உண்மை. ஆனால் மத்திய அரசு, என்ன சொல்லப் போகிறது? இது தான் நான் எழுப்பும் கேள்வி. நான் முதன்முதலாக, இப்போது ஒரு குற்றச்சாட்டை வைக்கிறேன்.

நளினி, பேரறிவாளன், சாந்தன், முருகனுக்கு தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்று நானோ, எனது குடும்பத்தாரோ விரும்பவில்லை என்று ஏற்கனவே சோனியாகாந்தி கூறியிருக்கிறார். குடியரசுத் தலைவருக்கும் கடிதம் எழுதியிருக்கிறார். இப்போது மத்திய அரசு, சோனியாவின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. அவர் ஒப்புதல் இன்றி பிரதமரோ, மத்திய அமைச்சரவையோ ஒரு துரும்பைக்கூட அசைக்காது. இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இப்போது, கருணை மனுவை குடியரசுத் தலைவர் ரத்து செய்ய அமைச்சரவை எடுத்த முடிவு தன்னிச்சையான முடிவு தானா? அல்லது, 'நான் அமெரிக்காவில் இருக்கும்போதே தூக்கில் போட்டு விடுங்கள்' என்று சோனியா சொல்லிவிட்டு அமெரிக்காவுக்குப் போனாரா? இப்போது மூவரையும் தூக்கில் போட வேண்டும் என்று மத்திய அரசு கூறுகிறது என்றால், ஏற்கனவே தூக்கிலிட விரும்பவில்லை என்று சோனியா கூறியது உண்மையானதா? அல்லது ஊரை ஏமாற்றவா? இந்தக் கேள்விக்கு காங்கிரசார் பதில் சொல்ல வேண்டும்.

அவர் சொன்னது உளப்பூர்வமாகத்தான் என்றால், இப்போது தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானமே நல்ல வாய்ப்பு. அதை ஏற்று தமிழக சட்டமன்றத்தின் தீர்மானத்தை மதித்து, தூக்குத் தண்டனையை ரத்து செய்ய முன்வரவேண்டும் - என்று வைகோ அறைகூவல் விடுத்தார்.

பெரியார் திராவிடர் கழகத்தைப் பாராட்டிய அவர் ம.தி.மு.க., பெரியார் திராவிடர் கழகத்தின் இந்த செயல்பாடுகளுக்கு தோளோடு தோள் நிற்கும் என்று கூறினார். இரா. உமாபதி நன்றி கூற இரவு 11.30 மணியளவில் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

**நமது செய்தியாளர்**

# டக்ளஸ் பிரச்சினையில் இந்தியாவின் இரட்டை வேடம்

டக்லஸ் தேவானந்தா ஈ.பி.டி.பி. என்ற அமைப்பின் தலைவர் ராஜபக்சே அமைச்சரவையில் சிறுதொழில் வளர்ச்சித் துறை அமைச்சர், விடுதலைப் புலிகளுக்கு எதிர்ப்பாக இந்திய உளவு நிறுவனத்தின் பிரதிநிதியாக செயல்படுகிறவர். 1986 இல் இவர் சென்னை சூளைமேட்டில் தங்கியிருந்தபோது உள்ளூர் மக்களிடம் தகராறு செய்து திருநாவுக்கரசு என்ற தலித் சிறுவனை சுட்டுக் கொன்றுவிட்டார். அப்போது, இவர் மீதும் இவரது ஆதரவாளர்கள் 9 பேர் மீதும் காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. பின்னர் 1988 இல் சென்னையில் 10 வயது சிறுவனை ரூ7 லட்சம் பணம் கேட்டு கடத்தியதாக மற்றொரு வழக்கு கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது. பின்னர் 1989 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டு, ஓராண்டு சிறையில் அடைக்கப் பட்டார். சிறையிலிருந்த இவரை உளவுத் துறையே தலையிட்டு, விடுதலை செய்ய வைத்து இந்திய ராணுவ விமானத்தில் ஏற்றி யாழ்ப்பாணத்தில் கொண்டு போய் இறக்கி, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியது.

இந்த நிலையில் அரசு சுற்றுப்பயணமாக இந்தியா வந்த ராஜபக்சேவுடன் அவர் பங்கேற்றார். அவரை கைது செய்யக் கோரி, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் புகழேந்தி தொடர்ந்த வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சி.நாகப்பன், எம்.சத்தியநாராயணன், மத்திய மாநில அரசுகளிடம் விளக்கம் கேட்டனர். மத்திய அரசு டக்லஸை கைது செய்ய முடியாது என்றும், இருநாடுகளுக்கு கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம் கிடையாது என்றும், இலங்கையுடன் நல்லுறவை பாதிக்கும் என்றும் பதிலளித்துள்ளது. இதே இந்திய அரசு தான் பிரபாகரனை ஒப்படைக்குமாறு இலங்கை அரசை வற்புறுத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. ராஜீவ் கொலை வழக்கில் 3 தமிழர்களை தூக்கிலிடத் துடிக்கும் காங்கிரஸ் ஆட்சி, தமிழ்நாட்டில் கொலை கடத்தலில் ஈடுபட்டவருக்கு பாதுகாப்பு தருகிறது.

துரோக காங்கிரஸ் துரோகிகளுக்கு நட்புக்கரம் நீட்டுவதில் என்ன வியப்பு இருக்க முடியும்?

## தோழர் ரங்கநாதன் முடிவெய்தினார்



கழகத்தின் செயல் வீரரும், குருவரெட்டியூர் நகர கழகத்தின் தலைவருமான தோழர் ரங்கநாதன் கடந்த 23.8.2011 அன்று நெஞ்சுவலி காரணமாக முடிவெய்தினார். இறுதி ஊர்வலத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர். பின்னர் அவர் இல்லத்தில் நடைபெற்ற படத்திறப்பு விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, படத்தை திறந்து வைத்து உரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாவட்ட தலைவர் நாத்திக சோதி, சேலம் மாவட்ட பொறுப்பாளர் டைகர் பாலன், காசிபாளையம் வேலுச்சாமி, தைரியமணி, வேல்மணி, திராவிடர் கழகம் யோகனந்தம், பிரகலாதன் போன்றோர் தோழரின் கழகச் செயல்பாட்டினையும், பண்புகளையும் விளக்கி உரையாற்றினர். தோழர்கள் மற்றும் உறவினர்கள் ஆகியோர் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 23rd September 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2042 செப். 29, 2011 புரட்சி 10 முழக்கம் 37 விலை: ரூ.2.50

**'யாருக்கும் வேண்டாம் தூக்கு; மரண தண்டனையை நீக்கு'**

# புதுவை குலுங்கியது





புதுவையில் மரண தண்டனைக்கு எதிரான பரப்புரைப் பயணம் எழுச்சியுடன் நடந்தது. பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு கருத்துகளைக் கேட்டு தங்கள் பேராதரவை வழங்கினர். புதுவை மாநிலத்தின் 11 பகுதிகளில் காலை 10 மணிக்குத் தொடங்கி இரவு 10.30 மணி வரை பரப்புரை வெற்றிநடை போட்டது. பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள், பரப்புரைக் குழுத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், புதுவை மாநில கழகத் தலைவர் லோகு. அய்யப்பனுக்கு ஆடைகள் போர்த்தி பயணக் குழுவை வரவேற்றனர். 3 தமிழர் உயிர் காப்போம் என்ற அறிவிப்புப் பதாகை, ஒலி பெருக்கிக் கருவிகளுடன், ஒரு வாகனம் முன் செல்ல தொடர்ந்து 150 இரு சக்கர வாகன த்தில் தோழர்கள் அணி வகுக்க பேரணி போல் சென்ற பரப்புரைப் பயணம் புதுவையை ஈர்த்தது. முருகன், பேரறிவாளன், சாந்தனை விடுதலை செய் என்று அச்சிடப்பட்ட வெள்ளை பனியன்களை தோழர்கள் அணிந்து வந்தனர்.

புத்தன் கலைக் குழுவினர், முன் கூட்டியே நிகழ்ச்சி நடக்கும் பகுதிக்குச் சென்று பறை இசை ஒலித்து, தூக்குத் தண்டனைக்கு எதிரான பாடல்களை பாடுவர். பரப்புரைக் குழுவினர் பின் தொடர்ந்து வந்து திரண்டிருந்த மக்களிடம் கருத்துகளை எடுத்து வைப்பார்கள். கழக வெளியீடுகளான 'மரண தண்டனையை ஒழிப்போம்', 'காந்தியார் கொலையில் பார்ப்பன பின்னணி' என்ற நூல்களை கழகத் தோழர்கள் கூடி நிற்கும் மக்களிடமும், பகுதியிலுள்ள வர்த்தக நிறுவனங்களிடமும் விற்பனைக்கு எடுத்துச் செல்வர். மற்றொரு பிரிவினர், மரண தண்டனைக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை வழங்குவார்கள். மற்றொரு பிரிவினர், உண்டியல் ஏந்தி மக்கள் தரும் நன்கொடைகளைப் பெற்று கொள் வார்கள். கொளுத்தும் வெய்யிலில் மனித உரிமைக்காக மூன்று தமிழர்களின் உயிர்காப்பிற்காக மரண தண்டனையையே வேண்டாம் என்பதற்கான நியாயங்களை, மக்களை சந்தித்து விளக்கிய இந்தக் காட்சிகள், உணர்ச்சிகர மானவையாகும். உலகிலேயே மரண தண்டனைக்கு எதிரான இப்படி ஒரு மக்கள் இயக்கம் நடந்திருக்க முடியாது என்றே கூறலாம். சிந்தனையாளர்கள் மனித உரிமையாளர்களின் கருத்துகளாகவே முடங்கி நின்ற மரண தண்டனைக்கு எதிரான கருத்தை மக்கள் கருத்தாக மாற்றும் முதல் முயற்சி தமிழகத்தில் மட்டுமே தொடங்கப்பட்டுள்ளது.

23.9.2011 காலை 10 மணிக்கு மதகடிப்பட்டு பகுதியில் பயணம் தொடங்கியது. புத்தன் கலைக் குழுவினர் பறை இசை பாடல்களோடு தொடங்கிய பயணத்தில், புதுவை மாநிலத் தலைவர் லோகு அய்யப்பன், பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். 10.30 மணிக்கு திருபுவனை வந்து சேர்ந்தது. புரட்சியாளர் அம்பேத்கர் மக்கள் படை அமைப்பாளர் மூர்த்தி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினர்.

பகல் 11.15 மணியளவில் பயணக்குழு கண்டமங்கலம் வந்தது. கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கொளத்தூர் மணி பேசினார். பாட்டாளி மக்கள் கட்சித் தோழர்கள், தலைவர், பொதுச்செயலாளருக்கு ஆடை போர்த்தி வரவேற்று ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

பகல் 12 மணியளவில் வில்லியனூர் வந்து சேர்ந்தது. லோகு அய்யப்பன், புதுவை மாநில ம.தி.மு.க. தலைவரும், முன்னாள் அமைச்சருமான நா.மணிமாறன், விடுதலை இராசேந்திரன் உரையாற்றினர். புதுவையில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் மத்திய அமைச்சர் நாராயணசாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணியை இழிவுபடுத்திப் பேசியதற்கு நா. மணிமாறன் கடும் கண்டனம் தெரிவித்து காங்கிரசாரை கடுமையாக எச்சரித்தார்.

பகல் ஒரு மணிக்கு பயணக் குழு கரிச்சலாம்பாக்கம் வந்து சேர்ந்தது. பட்டாசு வெடித்து பயணக்குழுவினருக்கு ஆடை போர்த்தி எழுச்சியான வரவேற்பு தரப்பட்டது. கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து லோகு அய்யப்பன், கொளததூர் மணி பேசினர்.

1.50 மணிக்கு பயணக்குழு பாகூர் வந்தது. பறை இசையுடன் கருத்துப் பாடல்களை புத்தன் கலைக் குழுவினர் பாடினர். அரியாங்குப்பத்தில் தோழர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

மாலை 4.45 மணியளவில் அரியாங்குப்பத்திலிருந்து பயணக் குழு பிற்பகல் பரப்புரையைத் தொடர்ந்தது. அம்பேத்கர் சுமை தூக்குவோர் சங்கத்தின் சார்பில், கைத்தறி ஆடைகளை பயணக் குழுவினருக்கு அணிவித்தனர். கொளத்தூர் மணி பேசினார்.

(2 ஆம் பக்கம்)





# ஒரே நாளில் 13 பகுதிகளில் நடந்த பரப்புரை





(முதல் பக்கத் தொடர்ச்சி)

5.30 மணிக்கு முதலியார் பேட்டையிலும், 6.10 மணிக்கு ரெட்டியார்பாளையத்திலும் பரப்புரையை முடித்துக் கொண்டு மேட்டுப்பாளையம் வந்து சேர்ந்தது. தட்டாஞ்சாவடி நாம் தமிழர் கட்சித் தோழர்கள் பயணக் குழுவினருக்கு தேனீர் வழங்கினர். இரவு 7 மணிக்கு முத்திரையர்பாளையத்தில் நடந்த நிகழ்வில் லோகு அய்யப்பன், கொளத்தூர் மணி உரையாற்றினர்.

இறுதியாக 7.40 மணிக்கு சாரம் பகுதியிலுள்ள ஜீவா சதுக்கத்துக்கு பயணக் குழு வந்து சேர்ந்தது.

புத்தன் கலைக் குழுவினர் தங்கள் கலை நிகழ்ச்சிகளை முழுமையாக நடத்தினர். மூன்று தமிழர் உயிர் காக்க தன்னுயிரை வழங்கிய செங்கொடி பற்றிய வீரவணக்கப் பாடல்; 'உயிர்' எனும் நாடகத்தை நிகழ்த்தினர். தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ராஜீவ் கொலை விசாரணை ஆணையங்களையும் இந்திரா கொலை பற்றிய விசாரணை ஆணையத்தையும் காங்கிரசாரே



முடக்கி, உண்மைகள் வெளியே வராமல் தடுத்து, குற்றவாளிகளைக் காப்பாற்ற மேற்கொண்ட சூழ்ச்சி, சதி, துரோகங்களையும் விரிவாக விளக்கி, ஒரு மணி நேரம் பேசினார். தொடர்ந்து தூக்குத் தண்டனைக்கு எதிரான வீதி நாடகங்களை கலைக் குழுவினர் நடத்தினர். இறுதியாக கொளத்தூர் மணி தூக்குத் தண்டனைக்கு எதிரான நியாயங்களை முன் வைத்தும், காங்கிரசாரை எச்சரித்தும் ஒரு மணி நேரம் பேசினர். தோழர் வீராசாமி நன்றியுரையுடன் உணர்வுகளை சூடேற்றிய நிகழ்வு 10.30 மணிக்கு நிறைவடைந்தது. சதுக்கத்திலேயே தோழர்களுக்கு இரவு உணவு வழங்கப்பட்டது.

இந்தப் பயணம் புதுவையில் நினைவில் நிற்கும் பயணமாக அமைந்தது. "மூவர் தமிழர் உயிர்காப்பு இயக்க வரலாற்றில் இந்தப் பயணம் இடம் பெறும்; என்றென்றும் புதுவை கழக வரலாற்றில் நினைவு கூறப்படும்" என்று விடுதலை இராசேந்திரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

**செய்தி: புதுவை வேலழகன்**

# ஈழ ஏதிலிகளை அலைக்கழிப்பதற்கு டெல்லி நீதிமன்றம் கண்டனம்

1990 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிபூண்டி அகதிகள் முகாமில் இருந்தவர் சந்திரகுமார். அவர் தனது எதிர்காலத்தைத் தேடி இத்தாலிக்குப் போக திட்டமிட்டார். டெல்லி விமான நிலையத்தில் அவரிடம் உரிய ஆவணங்கள் இல்லை என்று அதிகாரிகள் அவரது பயணத்தைத் தடுத்து நிறுத்தினர். அதன் பிறகு மோசடி, ஆள் மாறாட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் வெளிநாட்டினருக்கான 1946 வது சட்டப் பிரிவின் கீழ் வழக்கு தொடர்ந்தனர். அவரை, இலங்கைக்கு திருப்பி அனுப்ப, தமிழக காவல்துறை ஏற்பாடுகளை செய்தது. சந்திரகுமார், உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடிய இலங்கைக்கு தன்னை திருப்பி அனுப்பாதிருக்க நீதிமன்றத்தை நாடினார். டெல்லி விமான நிலையத்தில் நடந்த சம்பவம் என்பதால், வழக்கு டெல்லி பெருநகர இரண்டாவது துவாரகா நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி அருள்வர்மா, இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு தடை விதித்தார். நீதிபதி, தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள கருத்துகள் மிகவும் முக்கியத்துவமானதாகும்.

"இலங்கையில் எந்த நேரத்திலும் உயிருக்கு ஆபத்து நேரிடும் என்று அஞ்சிக் கொண்டிருக்கும் அகதியை, அந்த நாட்டுக்கு நாடு கடத்துவதற்கு இந்த நீதிமன்றம் துணை நின்றால், அது நீதிமன்றம் குற்றத்துக்குத் துணை போவதாகி விடும். அகதிகளை வரவேற்பதில் பல பாராட்டத்தக்க பெருமைகளைக் கொண்ட நமது நாட்டில், அகதிகளின் குறிப்பான தேவைகளை நிறைவு செய்யக்கூடிய ஒரு சட்டத்தை, இன்னும் நாம் உருவாக்கவில்லை. சட்டத்துக்குப் புறம்பாக அதிகமாக பொருளீட்டும் நோக்கத்தோடு வெளிநாட்டுக்கு, செல்வோர் ஒரு வகை. ஆனால், தனக்கு வேறு வழியின்றி, கட்டாயத்தின் பேரில், வேறு ஒரு நாட்டுக்கு அடைக்கலம் தேடிப் போகும் அகதிகளோடு பொருளீட்டச் செல்வோரை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. இரு பிரிவினருக்கும் உள்ள முக்கியமான வேறுபாடுகளை தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. இந்த அகதிகள் சூழ்நிலைக்கு பலியானவர்கள் ஏதோ, உல்லாச வாழ்க்கைக்காகவோ, பெரும் செல்வம் ஈட்டவோ அவர்கள், வேறு நாடுகளைத் தேடி ஓடவில்லை. வேறு வழியில்லாத நிலையில் கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்துகிறார்கள்" என்று நீதிபதி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "அகதிகள் பிரச்சினைக்காக முழுமையான சட்டம் ஒன்றின் தேவை நீண்டகால அவசியமாகிறது. ஒரு முன் மாதிரி சட்ட வரைவும் 2006 இல் உருவாக்கப்பட்டது. மிகுந்த கவனத்துடன், விரிவான கலந்தாய்வுக்குப் பிறகு முன்னாள் தலைமை நீதிபதி பி.என்.பகவதி போன்ற உயர் சட்ட வல்லுனர்களால் உருவாக்கப்பட்ட அந்த வரைவு கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கிறது.

இப்போது - அகதிகள் பிரச்சினையில் 1946 ஆம் ஆண்டு வெளிநாட்டினருக்கான சட்டங்களே பயன்படுத்தப்படுகின்றன. சுற்றுலா வந்து, சட்ட விரோதமாக செயல்படக்கூடிய வெளிநாட்டுக்காரர்களையும், அகதிகளையும் ஒன்றாகக் கருதக் கூடாது. இந்தியா அதற்கான மனிதாபிமான இலக்குகளிலிருந்து விலகிச் செய்யக் கூடாது" என்று நீதிபதி கூறியுள்ளார். ஆபத்து நிகழக்கூடிய நாட்டுக்கு திருப்பி அனுப்புவது இயற்கை நீதிக்கு எதிரானது என்று கூறிய நீதிபதி, இந்தியர்களானாலும், இந்திய குடிமக்கள் அல்லாதவர்களானாலும், இரு பிரிவினருக்குமே அரசியல் சட்டத்தின் 27வது பிரிவு வழங்கியுள்ள உயிர் வாழும் சுதந்திரத்துக்கான உரிமை பொருந்தும் என்றார். தனது கருத்துக்கு உடன்பாடான பல நீதிமன்றத் தீர்ப்புகளையும் எடுத்துக் காட்டியுள்ளார். ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்ட சந்திரகுமார் 6 மாதம் சிறையில் இருந்துவிட்டதால், இனியும் தண்டிக்கத் தேவை யில்லை. அவரை விடுதலை செய்து கும்மிடிப்பூண்டி முகாமுக்கே அனுப்ப வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# வடசேரியில் பெரியார் பிறந்த நாள்

ஒரத்தநாடு வட்டம் வடசேரியில் கழக சார்பில் பேருந்து நிலையம், சுயமரியாதை சுடரொளி குஞ்சிதபாதம் சதுக்கம், வடக்கு வீதி, க.சொ.சிவ சுப்பிரமணியன் கடை ஆகிய இடங்களில் பெரியார் படங்களுக்கு மாலை அணிவிக்கப் பட்டது. அ.இ. அ.தி.மு.க. மூத்த தலைவர் நெம்மேலி ஜெகநாதன் மற்றும் பிரபு, கழகத் தோழர்கள் கா.மா. கார்த்திகேயன், கு.க. மனோகரன் (ம.தி.மு.க.) படங்களுக்கு மாலை அணிவித்தனர்.

## போடியில்

செப்டம்பர் 17 போடிநாயக்கனூரில் வ.உ.சி. அருகில் தந்தை பெரியார் 133 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா பெரியார் திராவிடர் கழகத்தால் சிறப்பாக கொண்டாடப் பட்டது. போடி நகரிலுள்ள கழகக் கொடியை போடி நகர கழகத் தலைவர் மு. இராசு கொடியேற்றினார். நகர கழகச் செயலாளர் சி.கா. இராசேந்திரன், பெரியார் படத்தைத் திறந்து வைத்தார். ஞான. சரவணன் இனிப்புகளை வழங்கினார். கழகத் தோழர்கள் பொது மக்களுக்கு இனிப்புகளையும், பெரியார் கொள்கைகளை விளக்கும் துண்டறிக்கைகளையும் வழங்கினர். க. சரவணன், ஜெயக்குமார், கே.டி. இரத்தினவேல், முருகானந்தம், மாரியப்பன், தீன், முருகன், பிரசாத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## கொமாரபாளையத்தில்

பெரியார் பிறந்த நாள் விழா நாமக்கல் மாவட்டம் கொமாரபாளையத்தில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தோழர்கள் சோமசுந்தரம், மாதேஸ் உரையைத் தொடர்ந்து மூன்றாவது தொகுதி நகராட்சி உறுப்பினர் பெரியார் படத்தை திறந்து வைத்து, மாணவ மாணவியருக்கு நோட்டு புத்தகங்களை வழங்கி உரையாற்றினார். செல்வம் நன்றி கூறினார். நாமக்கல் மாவட்ட தலைவர் தி.க. கைலாசம், ர.ச. மணிராசு, சரவணன், ஆலா. கணேசன், செ. பிரபாகரன், சு. கதிரேசன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடக் கோருவதற்கான காரணங்கள்

1. கூடங்குளம் அணுமின் நிலையங்கள் 1, 2 உள்ளூர் மக்களை கலந்தாலோசிக்காது, ஜனநாயக, மனித உரிமை மரபுகளை மீறி கட்டப்படுகின்றன. 1, 2 உலைகளுக்கான சுற்றுச் சூழல் தாக்க அறிக்கை மக்களோடு பகிர்ந்து கொள்ளப்படவில்லை. கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்படவில்லை. 1, 2 உலைகள் அமைக்கப்பட்டிருக்கும் தலங்கள் பற்றிய ரஷ்ய விஞ்ஞானிகளின் ஆதங்கங்கள் மூடி மறைக்கப்பட்டதோடு, தல ஆய்வறிக்கை (Site Evaluation Study) மக்களுக்கு தரப்படவில்லை. பாதுகாப்பு ஆய்வறிக்கையும் (Safety Analysis Report) பொதுமக்களுக்கு, மக்கள் பிரதிநிதிகளுக்கு, பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்படவில்லை. இப்படி மக்களுக்கு எந்தத் தகவலும் தராமல், உண்மைகளைச் சொல்லாமல், ஜனநாயக மரபுகளை மீறி நிறைவேற்றப்படுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

2. தமிழ்நாடு அரசின் அரசாணை எண். 828 (29.4.1991 - பொதுப் பணித் துறை) அணுமின் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தூரத்திற்குள் அணுமின் கட்டிடங்களைத் தவிர வேறு எதுவும் இருக்கக் கூடாது என்றும், 2 முதல் 5 கி.மீ. சுற்றளவிலான பகுதி நுண்ம ஒழிப்பு செய்யப்பட்ட பகுதியாக (Sterilization zone) இருக்கும் என்றும் சொல்கிறது. வீடுகளோ, மனிதர்களோ இருக்கக் கூடாது என்பதை நேரடியாகக் குறிப்பிடாமல், திசை திருப்பும் வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. அரசின் உண்மை நிலை என்ன என்பதை தெளிவாக தெரிவிக்கவில்லை.

அ. AERB எனும் அணுசக்தி ஒழுங்காற்று வாரியத்தின் விதிமுறைகள் படி 5 கி.மீ. சுற்றளவுக்குள் 20000 பேருக்கு மேல் வசிக்கக் கூடாது. அணுமின் நிலையத்திலிருந்து 10 கி.மீ. சுற்றளவுக்குள் 10,000-த்திற்கு அதிகமான மக்கள் வாழும் ஊர்கள் இருக்கக் கூடாது. ஆனால் கூடங்குளம் அணுமின் நிலையத்தை சுற்றியுள்ள 3 கி.மீ. தூரத்திற்குள்ளேயே கூடங்குளம் கிராமத்தில் 20,000 மக்களும், இடிந்தகரை கிராமத்தில் 12,000 மக்களும், காசா நகரில் 450 குடும்பங்களும் வசிக்கிறார்கள்.

ஆ. 10 கி.மீ. சுற்றளவுக்குள் மாநிலத்தின் சராசரி மக்கள் அடர்த்தியின் மூன்றில் இரண்டு பங்குக்கு குறைவாகவே மக்கள் தொகை இருக்க வேண்டும். ஆனால் மாநில சராசரியைவிட மிக அதிகமான மக்கள் இந்த பகுதியில் நெருக்கமாக வாழ்கிறார்கள்.

இ. 30 கி.மீ. சுற்றளவுக்குள் 1,00,000-க்கும் அதிகமான மக்கள் வாழும் நகரங்கள் இருக்கக் கூடாது. ஆனால் 2,00,000 மக்கள் வாழும் நாகர்கோவில் நகரம் 29 கி.மீ. தூரத்திற்குள் இருக்கிறது.

ஈ. 20 கி.மீ. சுற்றளவுக்குள் சுற்றுலாத் தலங்களோ, சரித்திர பிரசித்தி பெற்ற இடங்களோ இருக்கக் கூடாது என்று AERB சொன்னாலும், உலக பிரசித்திப் பெற்ற கன்னியாகுமரி 15 கி.மீ. சுற்றளவுக்குள் இருக்கிறது.

இப்படி கூடங்குளம் அணுமின் நிலையத்திலிருந்து 30 கி.மீ. சுற்றளவுக்குள் 10 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசித்து வரும் நிலையில் எங்களை வெளியேற்றுவதோ, பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துவதோ, எங்களுக்குத் தேவையான இருப்பிட வசதிகளை செய்வதோ, மருத்துவ வசதிகள் செய்து தருவதோ, பள்ளிகள் அமைத்து தருவதோ, மாற்று வேலைகள் ஏற்படுத்திக் கொடுப்பதோ கற்பனையில்கூட நடக்காத காரியம் 2004 டிசம்பர் சுனாமியில் மத்திய மாநில அரசினர் கொண்டிருந்த பேரிடர் மேலாண்மையை நாடே அறியும்.

3. அணுஉலைக் கட்டிடங்களின், குழாய்களின் மோசமான தரம், கட்டிடம் கட்டியதை உடைத்து மீண்டும் கட்டுவதான திருவிளையாடல்கள், உள்ளூர் கான்டிராக்டர்களின் கைங்கரியங்கள், ரஷ்யாவில் இருந்து தாறுமாறாகவும் தலை கீழாகவும் வந்த உதிரி பாகங்கள், நிர்வாக குழப்பங்கள், குளறுபடிகள் என அடிவயிற்றை புரட்டிப் போடும் தகவல்கள், அனு தினமும் வந்து கொண்டே இருக்கின்றன. 26.9.2006 அன்று அப்போதைய குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு வருகை தந்தார். அணுசக்தித் துறை உயர் அதிகாரிகளோடு அவர் நின்று கொண்டிருந்தபோது கூரையில் இருந்து ஊழியர் ஒருவர் ஓரிரு அடி தூரத்தில் பொத்தென்று விழுந்து அனைவரையும் கதிகலங்கச் செய்தார். குடியரசுத் தலைவர் வந்த போதே இந்த நிலை என்றால், குடிமக்களுக்கு என்ன நிலை?

4. உலைகளை குளிர்விக்கும் சூடான கதிர்வீச்சு கலந்த தண்ணீரையும், உப்பகற்றி ஆலைகளில் இருந்து வெளி வரும் உப்பு, சேறு, ரசாயனங்களையும் கடலில் கொட்டி, ஊட்டச் சத்து மிகுந்த கடல் உணவையும் விஷமாக்கப் போகிறோம். உணவு பாதுகாப்பு கேள்விக்குறியாகும். மீனவர்களின், விவசாயிகளின் வாழ்வுரிமையும், வாழ்வாதார உரிமைகளும் முற்றிலுமாக அழிக்கப்படும். விபத்துக்களோ, விபரீதங்களோ நடக்கவில்லை என்றாலும், அணு உலைகளில் இருந்து அனுதினமும் வெளியாகும் கதிர்வீச்ச நச்சுப் பொருள்களை உண்டு, பருகி, சுவாசித்து, தொட்டு அணுஅணுவாய் சிதைந்து போவோம்.

## அணுமின் நிலையங்களுக்கு உலகம் முழுதும் எதிர்ப்பு

**ஜப்பான் நாட்டில் சுனாமி தாக்குதலைத் தொடர்ந்து ஃபுக்குஷிமா அணுமின் ஆலை வெடித்தது. அதன் பிறகு உலகம் முழுதும் அணுமின்நிலையங்களுக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது. ஆனால், இந்தியாவும் சீனாவும் அணுமின் நிலையங்களையே உறுதியாகப் பிடித்துக் கொண்டிருக்கின்றன.**

- **உலகம் முழுதும் 432 அணுமின் நிலையங்கள் உள்ளன. ஆனால், உலக மின்சார உற்பத்தியில் இதன் பங்கு 15 சதவீதம் மட்டுமே.**
- **தற்போது உலகில் 66 அணுமின் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 27 சீனாவில், 11 இந்தியாவில்.**
- **அணு சக்திகளைப் பயன்படுத்தும் நாடுகளின் எண்ணிக்கை 26.**
- **அமெரிக்காவில் மொத்த மின்சார உற்பத்தியில் அணு மின்சாரத்தின் பங்களிப்பு 20 சதவீதம். ஆனால் ஒபாமா, அணுமின் நிலையத் திட்டங்களைக் கொண்டு வருவதில் தீவிரம் காட்டுகிறார்.**
- **2022 ஆம் ஆண்டுக்குள் அனைத்து அணுமின் நிலையங்களையும் மூடிவிட ஜெர்மன் முடிவு செய்துள்ளது.**
- **இத்தாலியில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் மக்கள் அணுமின் நிலையத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.**
- **2034 ஆம் ஆண்டுக்குள் படிப்படியாக அணுமின் நிலையங்களை மூட சுவிட்சர்லாந்து முடிவு செய்துள்ளது.**
- **ஜப்பான் நாடு – அணுமின் உற்பத்தியை சார்ந்திருப்பதைக் குறைத்துக் கொள்ளப் போவதாக கூறியுள்ளது.**

5. பேரிடர்கள் வராது, நடக்காது, என்று தரப்படும் வெற்று வாக்குறுதிகளை ஏற்க முடியாது. 2003 பிப்ரவரி 9 ஆம் தேதி இரவு 9.45 மணி அளவில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் ஒரு மெலிதான நில நடுக்கம் ஏற்பட்டது. 2006 மார்ச் 19 ஆம் தேதி மாலை 6.50 மணிக்கு கூடங்குளத்தை சுற்றியுள்ள கன்னக்குளம், அஞ்சு கிராமம், அழகப்பபுரம், மயிலாடி, சுவாமி தோப்பு போன்ற கிராமங்களில் நில அதிர்வு உண்டானது. வீடுகளின் சுவர்களிலும், கூரைகளிலும், கீறல்களும், விரிசல்களும் தோன்றின. இரண்டு நாட்கள் கழித்து மார்ச் 21 ஆம் தேதி கரூர் மாவட்டத்தில் அதிகாலை 1.30 மணிக்கும், 5.00 மணிக்கும் நில அதிர்வுகள் உண்டாகின. 2011 ஆகஸ்ட் முதல் வாரத்தில் தமிழகத்தின் 7 மாவட்டங்களில் நிலநடுக்கம் நடந்திருக்கிறது. மார்ச் 11, 2011 அன்று நடந்த புகுஷிமா விபத்தினால் அமெரிக்க அணு உலைகள் ஜப்பானின் மேலாண்மை இருந்த பிறகும் வெடித்து கதிர்வீச்சை உமிழ்ந்திருக்கின்றன. கூடங்குளம் அணுமின் நிலையம் 2004 டிசம்பர் சுனாமிக்கு முன்பே கட்டப்பட்ட நிலையில் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக அணுசக்தித் துறை சொல்லும் வாதங்கள் உண்மைக்கு புறம்பானவை.

6. அணுமின் நிலையங்கள் மீதான தீவிரவாத அச்சுறுத்தல் பற்றி பாரத பிரதமரே அவ்வப் போது எச்சரித்து வருகிறார். ஆகஸ்டு 18, 2011 தேதியிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தியில் உள்துறை துணை அமைச்சர் முல்லப் பள்ளி ராமச்சந்திரன் அணுமின் நிலையங்கள் பயங்கரவாத குழுக்களின் முக்கிய இலக்குகளாக இருக்கின்றன என்கிறார்.

7. 2007 பிப்ரவரி மாதம் அப்போதைய தமிழக மின்துறை அமைச்சர் ஆற்காடு வீரசாமி கூடங்குளம் அணுமின் நிலையத்தை சுற்றி வசிப்பவர்களுக்கு இலவச குழுக் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார். சுமார் 1 வருடத்திற்கு முன்னாள் இந்திய அணுமின் கழகமும், இந்தியாவுக்கு அணு உலைகள் வழங்கும் ஆட்டம்டஸ்ட்ராய் எக்ஸ்போர்ட் என்னும் ரஷ்ய நிறுவனமும் இழப்பீடு குறித்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். ரஷ்யா வழங்கும் உலைகளில் ஏதேனும் விபத்துக்கள் நிகழ்ந்தால், நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என இந்தியா கேட்க, அந்த மாதிரியான உடன் படிக்கைக்கு ஒப்புக் கொள்ள முடியாது. உலைகளை இயக்குகின்ற இந்திய அணுமின் கழகமே முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும் என ரஷ்யா கையை விரித்தது. 2008 ஆம் ஆண்டு ரகசியமாக கையெழுத்திடப்பட்ட இரு நாட்டு உடன்படிக்கை ஒன்றின் 13 ஆவது சரத்து இதைத் தெளிவாக எடுத்துரைக்கிறது என்று சொல்கிறது ரஷ்யா. போபால் விஷவாயுக் கசிவில் பாதிக்கப்பட்ட மக்கள் 25 ஆண்டுகள் கழித்தும் இன்னும் இழப்பீடுகள் பெறாமல், எந்தவிதமான உதவிகளும் கிடைக்காமல் வதைப்பட்டுக் கொண்டிருப்பது மொத்த இந்தியாவுக்கே, உலகத்திற்கே தெரியும்.

8. அணுஉலை கழிவு ஒரு பெரிய பிரச்சினை. கூடங்குளம் அணுமின் நிலைய கழிவு ரஷ்யாவுக்கு எடுத்துச் செல்லப்படும் என்று தான் முதலில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. பின்னர் அது இந்தியாவிலேயே மறு சுழற்சி செய்யப்படும் என்றும், கூடங்குளத்திலேயே அதற்கான உலை நிறுவப்படலாம் எனவும் தெரிவித்தனர். கூடங்குளம் அணுஉலைகள் வருடத்திற்கு சுமார் 30 டன் யுரேனியத்தை உபயோகிக்கும், ஏறத்தாழ 30 ஆண்டுகள் இயங்கும்போது 900 டன் கழிவு வெளியாகும். பயங்கரமான கதிர்வீச்சை வெளியிடும் இந்த கொடிய விஷத்தை 24000 ஆண்டுகள் நாம், நமது குழந்தைகள், நமது பேரக் குழந்தைகள் அவரது வழித் தோன்றல்கள் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அபாயகரமான இந்தக் கழிவுகளை தேக்கி வைத்திருப்பதாலும், மறு சுழற்சி செய்வதாலும் நிலத்தடி நீரும், காற்றும் பாதிக்கப்படும். நமது விளை நிலங்களும், பயிர்களும், கால்நடைகளும் பாதிக்கப்படும். அவற்றில் இருந்து பெறப்படுகின்ற பால், காய்கறிகள், பழங்கள் விஷ உணவுகளாக மாறும். அணு உலைகளை குளிர்விக்கும் கதிர்வீச்சு கலந்த நீர் கடலுக்குள் விடப்படுவதால் கடல் நீர் வெப்ப நிலை அதிகரித்து கதிர்வீச்சால் நஞ்சாக்கப்பட்டு மீன் வளம் பாதிக்கப்படும். மீனவ மக்கள் ஏழ்மைக்குள்ளும், வறுமைக்குள்ளும் தள்ளப்படுகிறார்கள். மீனவ மக்களின், மற்றும் உள்ளூர் மக்களின் கடல் உணவு விஷமாகும்போது நமது உணவு பாதுகாப்பு அழிக்கப்படும். அணுஉலையின் புகை போக்கிகளில் இருந்து வருகின்ற நீராவி, புகை மூலமும், கடல் தண்ணீர் மூலமும் அயோடின் 131, 132, 133, சீசியம் 134, 136, 137 ஐசோடோப்புகள், ஸ்ட்ராண்டியம், டீரிஷியம், டெலூரியம் போன்ற கதிர்வீச்சு பொருட்கள்

4 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# துயரச் சுமையுடன் நிகழ்ந்த செங்கொடி படத்திறப்பு

3 தமிழர் உயிர் காக்க தனது உயிரை உயிர்க்கொடையாக வழங்கிய தோழர் செங்கொடி நினைவேந்தல் கூட்டம் காஞ்சி மக்கள் மன்றம் சார்பில் 24.9.2011; மாலை 5 மணியளவில் சென்னை இராயப்பேட்டை ஹேமமாலினி திருமண மண்டபத்தில் நடந்தது. நிகழ்வுகள் உருக்கமாகவும், உணர்வாகவும், இதயத்தை அழுத்தும் துயரத்துடனும் நடந்தன. காஞ்சி மக்கள் மன்ற கலைஞர்கள் பறை இசை மூலம் தங்கள் குழுவில் இது நாள் வரை இணைந்து பறையடித்த செங்கொடிக்கு வீரவணக்கம் செலுத்தினர்.

தொடர்ந்து எழுச்சியூட்டும் ஈழ விடுதலை பாடல்களை காஞ்சி மக்கள் மன்றக் கலைக் குழுவினர் பாடினர். மக்கள் மன்றத் தோழர் மேகலா, வரவேற்புரையாற்றினார். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத் தோழமை மய்ய அமைப்பாளர் பேராசிரியர் சரசுவதி தலைமை தாங்கினார். பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, செங்கொடியின் படத்தைத் திறந்து வைத்தார். பழ. நெடுமாறன், டிஎஸ்.எஸ். மணி, ஜான் பாண்டியன், அற்புதம்மாள், வழக்கறிஞர் பார் வேந்தன், தியாகு, மருத்துவர் கிருட்டிணசாமி, வைகோ ஆகியோர் உரையாற்றினர். காஞ்சி மக்கள் மன்றத் தோழர் மகேஷ், செங்கொடி மறைந்த துயரத்திலிருந்து தாங்கள் மீளாதுள்ள துயரச் சூழலை நினைவுகூர்ந்தார். காஞ்சி மக்கள் மன்றத்தின் - தோழர்கள் வாழும் இல்லம் - மக்களின் உழைப்பால் உருவானதுதான் என்று களங்கம் கற்பிக்கும் கயமையாளர்களுக்கு பதிலளித்தார். செங்கொடி வீர மரணத்தைத் தொடர்ந்து தங்களோடு கூட்டு சமூக வாழ்க்கையில் பயணிக்கும் தோழியர்களின் பெற்றோர்கள், "எங்கள் பிள்ளைகள் இனி இறுதி காலம் வரை காஞ்சி மக்கள் மன்றத்தில் தான் இருப்பார்கள்" என்று கூறியது, புண்பட்டுக் கிடந்த எங்கள் இதயங்களுக்கு மருந்து போல் அமைந்து, ஆறுதலைத் தந்தது என்று தழுதழுக்க பேசிய மகேஷ், செங்கொடி உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நினைவிடம் ஒன்றை, மக்கள் ஆதரவுடன் காஞ்சி மன்றம் அமைக்கும் என்று அறிவித்தார். கூட்டத்தில் உண்டியல் ஏந்தி வசூலிக்கப்பட்ட நிதி, செங்கொடி நினைவு மண்டபப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என்றார். செங்கொடி கலை விழாக்களில் பங்கேற்று நடனமாடிய காட்சிகளும், செங்கொடி இறுதி ஊர்வலக் காட்சிகளும் மேடையில் திரையிடப்பட்டன. செங்கொடிக்கு வீரவணக்கம் செலுத்தும் பாடலை தோழர்கள் மேகலா, மகா, உருக்க முடன் பாடினர். செங்கொடி மிகவும் விரும்பி கேட்கக்கூடிய, அவர் முதன் முதலாக பாடிய பாடலை தோழர் மகா பாடினார். ஈழப் போர்க்களத்தில் ஒரு பெண் புலி, தனது தாய்க்கு எழுதிய கடிதமே அந்தப் பாடல்.



செங்கொடிக்கு கலைப் பயிற்சிகள் தந்த, அவரது ஆசிரியர் செங்கொடிக்கு வீரவணக்கம் செலுத்தி எழுதிய பாடலை, தோழர்கள் பாடினர். மக்கள் மன்றத் தோழர் மகா நன்றி கூற, நிகழ்ச்சி இரவு 10 மணியளவில் நிறைவடைந்தது. காஞ்சி மக்கள் மன்றம் தொண்டாற்றும் கிராமங்களைச் சார்ந்த பொது மக்கள், குடும்பம் குடும்பமாக தனி வாகனங்களில், நிகழ்ச்சிக்குத் திரண்டு வந்து, கண்ணீர் மல்க, செங்கொடிக்கு வீர வணக்கம் செலுத்தினர். நிகழ்ச்சிக்கான களப்பணிகளை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் முன்னின்று செய்தனர்.

**– நமது செய்தியாளர்**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நமது உணவில், குடிதண்ணீரில், சுவாசத்தில், வியர்வையில் கலந்து அணு அணுவாக வதைப்படு வோம். நமது குழந்தைகள், பேரக் குழந்தைகள் இந்த விஷத்தை கொஞ்சம், கொஞ்சமாக நீண்ட நாட்கள் உட்கொண்டு புற்றுநோய், தைராய்டு நோய் போன்ற கொடிய நோய்களுக்கு ஆளாகி உடல் ஊனமுற்ற, மனவளர்ச்சியற்ற குழந்தைகளைப் பெற்று பரிதவிப்பார்கள்.

9. 1988 ஆம் ஆண்டு கூடங்குளம் அணுமின் திட்டத் திற்கு (முதல் இரண்டு உலைகளுக்கு) 6000 கோடி ரூபாய் செலவாகும் என்றார்கள். ஆனால் 1997 ஏப்ரல் மாதம் இந்தத் திட்டத்தின் துவக்க மதிப்பீடே 17000 கோடி ரூபாயாகும் என்று சொன்னார்கள். 1998 நவம்பர் மாதம் கூடங்குளம் அணுமின் நிலையங்கள் 2006 ஆம் ஆண்டு இயங்கும் என்றும், 15500 கோடி ரூபாய் செலவாகும் என்றும் விளக்கமளித்தார்கள். 2001 ஆம் ஆண்டு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சர் குழு இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு 13,171 கோடி எனவும், இந்திய அரசு 6755 கோடி முதலீடு செய்ய, ரஷ்யா மீதமிருக்கும் தொகையை 4 சதவீதம் வட்டியில் வழங்கும் என்று சொன்னார்கள். முதன்முறையாக எரி பொருள் வாங்குவதற்கும், அடுத்தடுத்த 5 முறை எரிபொருள் வாங்குவதற்கும் 2129 கோடி ரூபாயில் ஒதுக்கப்பட்டது. இந்த தொகை கிட்டத்தட்ட ரஷ்ய அரசின் கடனுதவியாகவே இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. 10 வருடங்கள் கழிந்த நிலையில் இன்றைக்கு எவ்வளவு செலவாகும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ள முடியும். நமது குழந்தைகளை கடனாளிகளாக ஆக்கும் திட்டம் நமக்கு வேண்டாம்.

10. நமது நாட்டை விட எத்தனையோ மடங்கு வளர்ச்சி அடைந்த, தொழில் வளமிக்க ஜெர்மனி 2022 ஆம் ஆண்டுக்குள் அனைத்து அணுஉலை களையும் மூடிவிட முடிவெடுத்திருக்கிறது. நோய்வாய்ப்பட்டு அமெரிக்காவில் உள்ள ஸ்லோன் கெட்டரிங் புற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருவதாக சொல்லப்படும் திருமதி சோனியா காந்தி பிறந்த நாடான இத்தாலியில் அண்மையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 90 சதவீத மக்கள் அணு உலைகள் வேண்டவே வேண்டாம் என முடிவெடுத்திருக் கிறார்கள். ஸ்விட்சர்லாந்து, மெக்சிகோ போன்ற நாடுகள் அணுஉலைகளை மூடிவிட முடிவெடுத்திருக்கின்றன. புகுஷிமா விபத்து நடந்த ஜப்பான் நாட்டிலே கட்டப்பட்டு கொண்டிருக்கும் 10 அணு உலைகளை நிறுத்திவிட்டனர். 28 பழைய உலைகளை மூடிவிட்டனர்.

நமது நாட்டிலேயே மேற்கு வங்காள மாநிலத்தின் முதல்வர் மம்தா பேனர்ஜி அரசு ஹரிப்பூர் என்னும் இடத்தில் ரஷ்ய உதவியுடன் கட்டப்படவிருந்த அணுஉலைத் திட்டத்தை நிராகரித்துவிட்டு, மாநிலத்தின் எந்தப் பகுதிகளிலும் அணுஉலைகள் அமைக்க மாட்டோம் என்று அறிவித்திருக்கிறது. நமது அண்டை மாநிலமான கேரளாவில் அணு உலைகள் வேண்டவே வேண்டாமென்று அனைத்து கட்சிகளும் ஒருங்கே நின்று எதிர்க்கின்றன.

"கருப்பான, அழுக்கான தமிழர்கள்" என்று நம்மை வருணித்திருக்கும் ஓர் அமெரிக்க தூதர் சொல்வது போல நம்மை இந்திய அரசும் இழிவாக பார்க்கிறதோ என்னும் அச்சமும், சந்தேகமும் மனதில் எழுகின்றன.

இறுதியாக, ஒரு சில கேள்விகள் சிந்திக்கத் தூண்டுகின்றன.

மக்களுக்காக மின்சாரமா அல்லது மின்சாரத்திற்காக மக்களா?

ரஷ்யா, அமெரிக்க, பிரெஞ்சு நாட்டுக் கம்பெனிகளின் லாபம் முக்கியமா அல்லது இந்திய மக்களின் உயிர்களும், எதிர்காலமுமா?

**அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம்.**

## திராவிடர் கழகக் கூட்டத்தில் மதவெறிச் சக்திகளின் வன்முறை: கழகம் கடும் கண்டனம்

சென்னை விருகம்பாக்கத்தில் கடந்த 24 ஆம் தேதி திராவிடர் கழகம் நடத்திய பெரியார் பிறந்த நாள் கூட்டத்தில், பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தி.க. தலைவர் கி.வீரமணி பேசும்போது, இந்து முன்னணியைச் சார்ந்தவர்கள் கல்வீசி, கலவரம் செய்த செய்தியைப் பார்த்து கொதிப்படைந்தோம். இந்து முன்னணியின் இந்த வன்முறை அடாவடியைப் பெரியார் திராவிடர் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழ்நாட்டில் பெரியார் கருத்துகளைப் பரப்புவதை கலவரத்தால் தடுத்து நிறுத்தும் கயமைத்தனங்களை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. கலவரம் விளைவித்தவர்கள் மீது காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

## அரசு அலுவலகத்தில் ஆயுத பூசை சட்ட விரோதம்: தலைமைச் செயலர் காவல்துறை இயக்குனருக்கு கழகம் கடிதம்

அரசு அலுவலகங்களில் சரசுவதி, ஆயுத பூசைகளுக்காக கடவுள் படங்களை வைத்து வழிபடுவது, அரசு ஆணைகள், நீதிமன்றத் தீர்ப்புகளில் தடைசெய்யப்பட்டுள்ளது. இதை வலியுறுத்தியும், அதற்கான தமிழ்நாடு அரசாணைகள், நீதிமன்றத் தீர்ப்புகள், அரசு ஊழியர் நன்னடத்தை விதிமுறைகளையும், இணைத்து கழக சார்பில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர், காவல் துறை இயக்குனர், மத்திய அரசு ஊழியர்களுக்கான மய்யத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆகியோருக்கு பதிவுத் தபாலில் கடிதங்கள் அனுப்பப்பட்டன. கடிதம் பெற்றுக் கொண்டதற்கான ஏற்பு கிடைத்துள்ளது.

## பெரியார் சிலை அவமதிப்பு: காவல் நிலையத்தில் கழகம் புகார்

சென்னை அண்ணா சாலையிலுள்ள தந்தை பெரியார் சிலைக்கு விஷமிகள் பூணூல், காவி மாலை அணிவித்து அவமதித்துள்ளனர். இது குறித்து சென்னை சிந்தாதிரிப் பேட்டை காவல் நிலையத்தில் (எப்.1) கழக சார்பில் தென்சென்னை மாவட்டக் கழக செயலாளர் இரா. உமாபதி புகார் தந்துள்ளார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 29th September 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.